பனம்பூ

நாவல் வரிசை



# தாய் வழித் தாகங்கள்

நிலக்கிளி அ.பாலமனோகரன்

நாகலிங்கம் நினைவு நூலகம்

இப் புத்தகம் எதிர் கால சந்ததிக்காக
சேகரிக்கப் படுகின்றது

தயவு செய்து திரும்பத் தரவும்

07.10.1987

27, ORPHEUS TOWER
6, DESMOND STREET
LONDON SE 14 6 HY

புல்ல

பனம்பூ குடும்ப நாவல் வரிசை–1

# தாய்வழித் தாகங்கள்

நிலக்கிளி. அ. பாலமனோகரன்

*Publishers :*

**A. Balamanoharan**

Birkhojterrasserne 413A

3520-FARUM

DENMARK

Phone : 02 95 8361

THAAIVALITH THAAGANGAL

By

Nilakili. A. Balamanoharan

*First Edition*

APRIL 1987

COPY RIGHTS

RESERVED WITH

THE AUTHOR

*Sole Distributors* :

INDU ENTERPRISES

MADRAS, INDIA

TELEX. 41-8193 SHAN IN

(ATTN. INDU)

*Printed at* :

SRI GOMATHI ACHAGAM

41, Soorappa Mudali Street,

Triplicane, Madras-5.

Phone : 844554

அன்பு வாசகருக்கு ஒரு சில வார்த்தைகள்!

பதினைந்து வருடங்களுக்கு முன்னர் ஈழத்தில் வீரகேசரிப் பிரசுரமாக வெளியிடப்பட்ட எனது நிலக்கிளி நாவல் எனக்குப் பெருந்தொகையான அன்பு வாசகர்களைத் தேடித் தந்தது.

இன்று அவர்களை மட்டுமல்ல அன்னை பூமியைக்கூடப் பிரிந்து கலங்கிப் போய் நிற்கும் ஒரு அவலநிலை.

சொந்த மண்ணைப் பிரிந்து நித்தம் வேதனையை நெஞ்சில் சுமந்து வேற்று மண்ணில் வாடும் ஆயிரக்கணக் கானவர்களில் இன்று நானும் ஒரு சிறு துளி.

இந்த நிலையில், வேற்று மண்ணில் வாழ்ந்து கொண் டிருக்கும் எம் பிஞ்சுகளுக்கும் விடலைகளுக்கும் எமது இனத்தின் கதையை ஒரு பெண்ணின் கதையூடாகச் சொல்ல ஒரு நாவலை எழுத ஆரம்பித்தேன்.

அந்த நாவல் மூன்று பாகங்களாக வெளிவரும்.

அதை வெளியிடுவதற்கான நிதியை தேடுவதற்காகவும், ஒரு வாசக அணியை உருவாக்கவும், மற்றைய சிறந்த தமிழ் எழுத்தாளர்களின் நாவல்களையும், நல்ல பிறமொழி நாவல் களின் தமிழாக்கங்களையும் வளரும் தலைமுறையினருக்கு அறிமுகப் படுத்துவதற்காகவுமே பனம்பூ குடும்ப நாவல் வரிசையை உருவாக்க விழைந்தேன்.

இந்த வகையில் 'பனம்பூ' வரிசையின் முதல் நாவலான தாய்வழித் தாகங்கள் உங்கள் கைகளில் தவழ்கின்றது.

இந்த நாவலில் என் நெஞ்சில் நிரந்தரமாகக் குடி கொண்டிருக்கும் வேதனைகளையும் சோகங்களையும் விடியலுக்கான ஏக்கங்களையும் போராட்டங்களையும் நீங்கள் அதிகம் காணமுடியாது.

காரணம் - இளைய தலைமுறையினரை பனம்பூ வாசக அணியில் திரட்டிக் கொள்வதற்காகவே முதல் நாவல் மென் நாவலாக வெளிவருகின்றது.

ஆனால்-

அடுத்த நாவல்களின் தரம் படிப்படியாக எமது இனத்தின் தேவைகள் கருதித் தரமானதாக உயரும்.

இந்த முயற்சிக்கு உங்கள் ஆதரவு அதிகமாகத் தேவை. அத்துடன் உங்கள் விமரிசனங்களும் அவசியம்.

இவற்றை நன்றியுடன் எதிர்பார்க்கும்

**நிலக்கிளி. அ. பாலமனோகரன்**

# தாய்வழித் தாகங்கள்

வாசுகியின் விழிகள் குளமாகிவிட்டிருந்தன. அவளுடைய அகன்ற கருவிழிகளில் தேங்கி நின்ற கண்ணீர் எந்த நிமிடமும் பொட்டென்று விழுந்துவிடத் துடித்தது. உணர்ச்சிவசப்பட்டதனுல் சிவந்திருந்த அவளுடைய கன்னங்கள் அந்த மாலைப்பொன் வெய்யிலில் மேலும் செவேலென்று பளபளத்தன.

வாசுகியின் கைகளை ஆதரவாகப் பற்றிக்கொண்டாள் அவளுடைய ஆருயிர்த் தோழி ராஜி.

''வாசுகி! கவலையில் இருக்கும்போது கூட உன்னுடைய முகம் எவ்வளவு அழகாக இருக்கிறதடி! இரண்டு நாட்களுக்குத்தான் என்னுடைய பிரிவு உனக்குக் கஷ்டமாக யிருக்கும். அதற்கப்புறம் உனது வருங்காலக் கணவனைக் கற்பனை செய்வதிலேயே உனக்குப் பொழுது போய்விடும். அப்புறம் இந்த ராஜியைப் பற்றிய நினைவு உனக்கெங்கே வரப்போகின்றது! அழகான வெள்ளைக் குதிரைமீது கம்பீரமானதொரு ராஜகுமாரன் இந்த வாசுகிக்காக ஏழு கடல்களையும் தாண்டி வானவீதியில் தேடிவருவான். இந்த வாசுகியைக் கண்டதுமே அவன் அவளை வாரித் தூக்கி செம்பவளம் போன்ற இந்த அழகிய இதழ்களை மெல்ல மெல்ல...''

எனக் குறும்புக் கொப்பளிக்கக் கூறியவாறே ராஜி தன் விரல்களினுல் வாசுகியின் சிவந்த அதரங்களை மெல்ல வருடியபோது வாசுகி களுக்கென்று சிரித்து விட்டாள். அவளுடைய கண்களில் கட்டிக் கொண்டிருந்த கண்ணீர் பட்டென்று உடைத்துக்கொண்டு அவளுடைய செழுமையான கன்னக் கதுப்புக்களில் வழுக்கிக் கொண்டு வீழ்ந்தது.

கணப்பொழுதுக்குள் அவள் தன் கவலையை மறந்து விட்டாள். கண்கள் சிரிப்பில் பளீரிட்டன.

"பார்! பார்!...கணவனைப் பற்றிப் பேசியதுமே சந்தோஷத்தில் மிதக்கிறுயே!..நான் சொல்வது எவ்வளவு உண்மையென்பது இப்போது தெரிகிறதல்லவா!" என மீண்டும் கேலி செய்த ராஜியைச் செல்லமாகக் கடிந்து கொண்டாள் வாசுகி.

"சும்மா இரடி ராஜி!.. உனக்கு எப்போதுமே கேலியும் குறும்புந்தான். ஐந்து வருடங்களுக்குமேல் ஒரே ஹாஸ்டலி லும் ஒரே வகுப்பிலும் உன்னேடு இருந்துவிட்டு இப்போ உன்னைப் பிரிவதென்றுல் எனக்கு எவ்வளவு வேதனையாக இருக்கின்றது தெரியுமா? உன்னுடைய குறும்புப் பேச்சை கேளாமல் எப்படித்தான் எனக்கு வீட்டில் பொழுது போகுமோ தெரியவில்லை" என்று கூறிய வாசுகியின் வதனத்தை மீண்டும் கவலை வந்து சூழ்ந்து கொண்டது.

குனிந்திருந்த வாசுகியின் முகத்தைப்பிடித்து ஆதரவாக நிமிர்த்தினுள் ராஜி.

"வாசுகி! உன்னைப் பிரிந்து இருப்பது எனக்குந்தான் கவலையாக இருக்கின்றது. ஆனுல் நான என்ன இந்த நாட்டைவிட்டா போகப் போகின்றேன். யாழ்பாணத்தில் தானே தொடர்ந்தும் படிக்கப் போகின்றேன்.. முடிந்த போது உன் வீட்டுக்கு வந்து உன்னைப் பார்க்க மாட்டே ஞ நான்?" என்று ராஜி கூறியபோது வாசுகியின்

துயரம் சற்றுத் தணிந்து அவளுடைய முகத்தில் மீண்டும் நம்பிக்கை துளிர்த்தது.

வாசுகியின் இந்த இளகிய இயல்பு ராஜிக்குப் புதிய தல்ல. கணப் பொழுதுக்குள் வாசுகி உணர்ச்சி வசப்பட்டு விடுவதைப் பார்க்கும் போதெல்லாம் ராஜிக்கு மனதில் ஒரு உவமை தோன்றுவதுண்டு.

இசைக்கப்படுவதற்கு ஆயத்தஞ் செய்யப்பட்ட நல்ல தொரு வீணையைப்போல வாசுகியை ராஜி கண்டாள். சகல லட்சணங்களும் கொண்ட அந்த அற்புத வீணையின் விண் ணென்ற தந்திகளில் கைகூடப் படவேண்டாம், காற்றுப் பட்டாலே போதும் அவை மெல்ல ரீங்கரிக்க ஆரம்பித்து விடும். இளந்தென்றலில் இனிமையாக இழைந்தும் கொடுங்காற்றில் குமுறியழவும் செய்யும் விநோதமான தொரு வீணையைப் போன்ற வாசுகியை நினைக்கையில் ராஜிக்கு ஒரோர்சமயம் அவளுடைய எதிர்காலத்தையிட்டுப் பயமாகவும் இருக்கும்.

பதினெட்டு வயதாகியும் இப்படிப் பச்சைக் குழந்தை யாக இருக்கிறாளே! கூடவே கொள்ளை எழிலையும் ஆண்டவன் இவளுக்கு அள்ளி வழங்கியிருக்கிறானே... நல்லவேளை! பெருஞ் செல்வக் குடும்பத்தில் பிறந்திருக் கிறாள்...கண்ணுக்குள் வைத்துப் போற்றும் தந்தையும் இரண்டு அண்ணன்மாரும்...தாயின் ஸ்தானத்தில் ஒரு அக்கா...வாசுகி மட்டும் இந்த அழகோடும் இந்த குழந்தை மனதோடும் ஒரு ஏழைக் குடும்பத்தில் பிறந்திருந்தால் இந்நேரம் அவள் தெருவில்தான் நின்றிருப்பாள் என நினைத்துக் கொண்ட ராஜி வாசுகியின் கரத்தைப் பற்றிக் கொண்டு அவளுடைய முகத்தைப் பார்த்தாள்.

''வாசுகி நீ எப்போதுதான் வளரப் போகின்றாயோ எனக்குத் தெரியவில்லை...உனக்கு இருக்கும் திறமைக்கும் விவேகத்திற்கும் நீ மேலும் தொடர்ந்து படிக்கலாம் அல்லவா? எதற்காகத்தான் மேற்கொண்டு படிப்பைத்

தொடர்வதில் உனக்கு விருப்பமின்றி இருக்கின்றது? எவ்வளவுதான் பணமும் செல்வமும் கொட்டிக் கிடந்தாலும் படித்து ஒரு பட்டம் பெற்று வாழ்வதைப்போல வருமா?'' என அக்கறையுடன் கேட்ட ராஜியைப் பார்த்துச் சிரித்தாள் வாசுகி.

''ராஜி! உனக்கு என் அக்கா கெளரியை நன்ருகத் தெரியுந்தானே!...அவள் என்ன பட்டப் படிப்பா பெற்றிருக்கிருள்? இந்தக் கல்லூரியில்தான் என்னைப்போல ஹாஸ்டலில் தங்கிப் படித்தாள்.. அதனுல் சரளமாக ஆங்கிலம் பேசுகின்ருள்...அழகான இரண்டு குழந்தைகளைப் பெற்றுக்கொண்டு அத்தானுடைய பதவிக்கும் அந்தஸ்துக்கும் ஏற்ற வகையில் வீட்டை நிர்வகிக்கவும் விருந்தினரை உபசரிக்கவும் அவளால் முடிகின்றதுதானே!'' அத்தான் அவள்மேல் எவ்வளவு கொள்ளை ஆசை வைத்திருக்கிருர் தெரியுமா!'' எனக் கன்னங்குழியச் சிரித்த வாசுகியைக் கோபத்துடன் பார்த்தாள் ராஜி.

''வாசுகி!...நீ அளவுக்கு அதிகமாகக் காதற் கதைகளைப் படிக்கிருய்!... வீக்கெண்டுக்கு வீட்டுக்கும் போனுல் வீடியோவில் தமிழ்ப் படங்களையே பார்த்துத் தொலைக்கின்ருய்...அதனுல்தான் உனக்குக் கல்யாண ஆசை வந்துவிட்டதடி!...எதற்கடி இப்படி அவசரப்பட்டுத் தொலைக்கிருய்?..இன்னும் நாலோ ஐந்துவருடம் படித்து ஒரு பட்டம் பெறுவதற்குள் நீ என்ன பாட்டியாகவா ஆகிவிடப் போகின்ருய்?' எனப் பொரிந்தாள் ராஜி.

ராஜியின் கோபமும் படபடப்பும் வாசுகிக்கு பழகியவைதான். பெண்ணென்ருல் வீட்டுக்குள் வளையவரும் பிள்ளைப் பெறும் யந்திரமல்ல. பெண்களின் தொகை அதிகரித்துக்கொண்டே வரும் இந்தக் காலத்தில் ஒரு பெண்ணுக்குச் சகல துறைகளிலும் ஆர்வமும் பரிச்சயமும் இருக்க வேண்டும். தேவையேற்படின் சமுதாயத்தில் முக்கியமான பொறுப்புக்களை வகிக்கவும் அவள் ஆயத்தப் பட்டிருத்தல் வேண்டும். ஏதாவது ஒரு துறையில் ஒவ்

வொரு பெண்ணுமே உயர் கல்வியைப் பெற்றிருக்க வேண்டும், என்றெல்லாம் அடித்துப் பேசுபவள் அவள். இப்படியானவளிடம் தன் இதயத்தில் பொங்கும் உணர்வுகளையும் ஆவலையும் வாசுகி இதுவரை மனந்திறந்து கூறியதில்லை.

அவை பற்றித் தெளிவாகக் கூறுவதற்கு அவற்றை யிட்டு வாசுகிக்கே விவரம் புரியவில்லை. மலரவிருக்கும் தாமரை மொட்டின் இறுக்கத்துள்ளே கட்டுண்டிருக்கும் இனிமையான சுகந்தத்தைப் போல அவளுடைய இளைய இதயத்தினுள்ளும் இனம்புரியாத சில இனிய இரகசியங்கள் பொதிந்து கிடந்தன. ஒவ்வோர் சமயங்களில் மெல்லத் தலைதூக்கி அவளை ஒருவகைப் பரபரப்பான பரவசத்தில் ஆழ்த்தும் அந்த அற்புத உணர்வுகளை தன்னாலேயே தெளிவாக இனங்கண்டு கொள்ள முடியாத வாசுகி எப்படித் தான் ராஜிக்கு அவற்றையிட்டுக் கூற முடியும்!

இருப்பினும் ராஜியின் அக்கறையும் ஆத்திரமும் நிறைந்த வினாவுக்கு என்ன விடையைக் கூறலாம் எனச் சிந்தித்தவளுடைய பார்வையில் சற்று அப்பால் நின்ற தொரு இளமாமரம் தென்பட்டது.

சில நாட்களுக்கு முன்னர் குப்பென்று பூத்து நின்ற ஒட்டு மாமரத்தில் நிறையப் பிஞ்சுகள் பிடித்திருந்தன. யாழ்ப்பாணச் செம்மண்ணின் ஊட்டமும் அந்த மண்ணின் கீழே சுண்ணப் பாறைகளுக்கு அடியிலிருந்து ஊறிச் சுரக்கும் நீரின் தன்மையும் அந்த மாங்கன்றுக்குச் சொல்லரிய செழுமையை வழங்கியிருந்தது. அதில் பிடித்திருந்த சின்னஞ்சிறு மாம்பிஞ்சுகள் வாசுகியின் மனதில் ஒரு எண்ணத்தைப் பிறப்பிக்கவே அவள் அவற்றைப் பக்கத்திலிருந்த ராஜிக்குச் சுட்டிக் காட்டினாள்.

''ராஜி!...அந்த மாங்கன்றைப் பார்த்தாயா...அதைப் போலத்தான் பெண்களின் வாழ்க்கையும். பருவ வயதில் தான் பெண்ணுக்கு ஒரு அதிசய மலரின் அழகும் மணமும் வந்து வாய்க்கின்றன. அந்த அழகும் ஆரோக்கியமும்

இருக்கும்போதுதான் அவள் வாழ்வை அனுபவிக்கத் தயாராக இருக்கிருள். உரிய பருவத்தில் அந்த மலர் பிஞ்சாகிக் காயாகிக் கனிவதைத்தவிர அதற்கு வேறு என்ன தான் கடமையுண்டு?'' என்று கூறிய வாசுகியின் வதனத்தில் பொலிந்த அழகில்அவளுடைய களங்கமற்ற இதயத்தையும் அந்த இளம் இதயத்தின் இயற்கையான உணர்வுகளையும் ராஜியினுல் துல்லியமாகக் காண முடிந்தது.

கவலையின் சுவடே தெரியாமல் செல்வச் செழிப்பிலும் உற்றவர்களின் பாசப்பிணைப்பிலும் குறையே தெரியாமல் வளர்ந்து நல்லதொரு கான்வென்டில் படித்த வாசுகியின் வாழ்க்கையில் துன்பத்தின் நிழலே படுவதற்கு நியாய மில்லாத போது அவளுடைய மனதில் எப்படித்தான் கறையோ களங்கமோ படிய முடியும்? பாசமும் பணமும் இல்லாத ஒரு நிலையில் இந்த உலகத்தின் இடர்களுக்கு முகங்கொடுத்து முன்னேற இவளால் முடியுமா? வயதும் வசதியும் இருக்கும் போதே மேலேபடிப்பைத் தொடராமல் ஏன் தான் இப்படி இவளுடைய உள்ளத்தில் திருமண ஆசை வந்ததோ எனக் கவலைப்பட்ட ராஜி இவளுடைய ஆசைக்கு நல்லதொரு கணவன் வந்து வாய்க்க வேண்டும் இறைவா என நெஞ்சுக்குள் வேண்டிக் கொண்டாள்.

## 2

யாழ்ப்பாணத் தீபகற்பத்தின் இன்றுமோர் கோடியி லுள்ள ஒரு பட்டணத்தில் பொழுது புலர்ந்து கொண் டிருந்தது.

சின்னதொரு வீட்டின் விருந்தையிலே யாரையோ எதிர் பார்ப்பது போலக் காத்துக் கொண்டிருந்தனர் ஒரு தாயும் மகனும். விதவைக் கோலத்திலிருந்த தாய்க்கு இன்னமும ஐம்பது வயதாகாத போதும் அவளுடைய

கூந்தல் பெரும்பாலும் நரைத்து முதுகும் சற்றுக் கூன் விழுந்திருந்தது. வாழ்க்கையின் ஆரம்பத்திலேயே கணவனையிழந்து கைக்குழந்தையுடன் விடப்பட்ட அவள் கடந்துவந்த பாதையில்தான் எத்தனை இடர்கள்! கணவன் விட்டுச் சென்ற சிறியதொரு காணியில் விவசாயம் மேற் கொண்ட அவளுடைய உழைப்பை ஊரிலே பாராட்டாத வர்கள் இல்லை. தன் ஆசாபாசங்கள் அத்தனையையுமே அந்த மண்ணின் கீழ்ப் புதைத்து விட்டு அதன் மேல் இரத்த வியர்வை சிந்தி சிறுபயிர் விளைவித்து அவள் தன் ஒரே மகனை ஆளாக்கியிருந்தாள்.

அவள் வளர்த்து ஆளாக்கிய அந்த மகன் இப்போ ஒரு டாக்டராக, வனப்புமிகு வாலிபனாக தன் முன் அமர்ந் திருக்கக் கண்ட அந்தத் தாயின் உள்ளம் பாசத்தினாலும் பெருமிதத்தினாலும் விம்மிக் கொண்டது.

''ராசா...இந்தத் தடவை வந்து இரண்டு நாட்கள்கூட நீ தங்கவில்லை அதற்குள்புறப்பட்டுவிட்டாயே!...உடம்பைக் கவனித்துக் கொள் ஐயா!...நானும் உன் கூட வந்து தங்கி உனக்குச் சமைத்துப் போடுகிறேன் என்றால் அதற்கும் சம்மதிக்கின்றாயில்லை!'' என மீனாட்சி அங்கலாய்த்துக் கொண்டிருக்கையில் அவர்களுடைய வீட்டுக்கு முன்பாகக் காரொன்று வந்து நின்றது.

''அம்மா! இதோ கணேஷ் வந்து விட்டான்...நான் போய் வருகின்றேன்!'' எனப் புறப்பட்ட மகன் சுபேசனை பரிவுடன் முத்தமிட்டு கண்கள் கலங்க விடை கொடுத்தாள் மீனாட்சி.

காரை விட்டிறங்கிய கணேஷ் அவளிடம் ''என்னம்மா இப்போதும் கண்கலங்குகின்றீர்கள்! உங்கள் பிள்ளை இப்போ ஒரு இளம் டாக்டர்...இனிமேல் உங்களை உட்கார வைத்து நீங்கள் இதுவரை பட்ட கஷ்டமெல்லாவற்றையும் ஈடு செய்யும் வகையில் கவனிக்கப் போகின்றான்! இல்லையா

சபேசன்!'' என ஆர்ப்பாட்டமாகக் கூறியபோது மீனாட்சி யின் முகத்தில் மகிழ்ச்சி பெருக்கெடுத்தது.

''அவன் எங்கே என் சொல்லைக் கேட்கிறான்...நான் எவ்வளவோ கேட்டும் என்னை அழைத்துச் செல்கிறா னில்லையே!'' என மீனாட்சி மீண்டும் ஆரம்பித்தபோது இடையில் குறுக்கிட்டான் சபேசன்.

''அம்மா! இப்போ நான் இருக்கும் அறையில் நீயும் வந்து தங்க இடவசதியில்லையே...விரைவில் குவாட்டர்ஸ் கிடைத்துவிடும்...அதன் பின்னர் நீ எப்போதுமே என்கூடச் சந்தோஷமாக இருக்கலாம்...இப்போ எனக்கு நேர மாகின்றது. மத்தியான டியூட்டிக்கு நான் ஹாஸ்பிட்டலில் இருந்தாக வேண்டும்...போய் வருகிறோம்!...கவலைப் படாதே!'' என்று ஆறுதல் கூறிவிட்டுக் கணேஷையும் இழுத்துக் கொண்டு காரடிக்குச் சென்றான் சபேசன்.

கார் கண்ணிலிருந்து மறையும் வரை அங்கேயே நின்று பார்த்துக் கொண்டிருந்த மீனாட்சியின் கவனத்தை ஒரு குரல் இழுத்தது.

''என்ன மீனாட்சியம்மா! கண்கலங்கி நிற்கிறீர்கள்?... மகனைப் பிரிந்த துயரா?''

நவாலியூர் சின்னத்துரைத் தரகர் சைக்கிளைப் பிடித்த வாறே நின்று கொண்டிருந்தார். கல்யாணத் தரகர் சின்னத்துரை சபேசனுடைய தந்தையின் நண்பரா யிருந்தவர்.

கண்களைத் துடைத்துக் கொண்டு சிரித்தாள் மீனாட்சி.

''எங்கே இந்தப் பக்கம்? வாவேன் ஒரு வாய் காப்பி சாப்பிட்டுவிட்டுப் போகலாம்!''

''ஓ! தாராளமாக!'' சைக்கிளைத் தள்ளியவாறே மீனாட்சியைப் பின்தொடர்ந்தார் தரகர்.

மிகுந்த வறுமையிலும் தன் வாயைக் கட்டி வயிற்றைக் கட்டிக் கஷ்டப்பட்டு உழைத்து மகனை ஒரு டாக்டராக்கிய மீனாட்சிமீது பெருமதிப்பு வைத்திருந்தார் சின்னத்துரை. தன் தொழில் ரீதியாக அவருக்கு சபேசன்மேல் ஒருகண் இருந்தது உண்மைதான். ஆனால் தனது கமிஷனைவிட மேலாக, மீனாட்சிக்கு ஒரு நல்ல மருமகள் கிடைக்க வேண்டும். அவள் கடைசிவரை மாமியாரை அன்புடன் பராமரிக்க வேண்டும் என்பதில் அவருக்கு விசேட அக்கறை இருந்தது.

அண்மையில் அவர் சபேசனைப்பற்றிக் கேள்விப்பட்ட விஷயங்கள் அந்த எண்ணத்துக்குப் பாதகமாக இருக்கவே அது சம்பந்தமாகப் பேசவே அவர் மீனாட்சியைத் தேடிக் கொண்டு வந்திருந்தார்.

மீனாட்சி கொடுத்த காப்பியைப் பருகியவாறே அவர் மெல்ல விஷயத்துக்கு வந்தார்.

''மீனாட்சியம்மா! நான் சொல்வதைக் கேட்டு நீங்கள் அதிர்ச்சி அடையக்கூடாது... உங்கள் மகனுக்கு நல்லதொரு இடத்தில் பெண் கிடைக்க வேண்டும். உங்களுக்கு நல்ல தொரு மருமகள் அமையவேண்டும்... இன்னும் இரண்டு வருடம் கழித்து இந்த விஷயத்தில் இறங்கலாமென்றிருந் தேன்'' எனத் தரகர் பீடிகை போட்டபோது மீனாட்சிக்குத் திக்கென்றிருந்தது.

அதைக் கவனித்த சின்னத்துரை ''நீங்கள் பயப்படும் அளவுக்கு ஒன்றுமில்லை... சபேசன் தொழில் பார்க்கும் வைத்தியசாலையில் வேலை செய்யும் ஒரு சிங்கள நர்ஸ்சுக்கும் எங்கள் சபேசனுக்கும் இடையே தொடர்பு இருப்பதாக அறிந்தேன்'' எனச் சொன்னபோது ஏங்கிப் போனாள் மீனாட்சி.

தன் ஒரே மகனை அத்திவாரமாகக் கொண்டு அவள் அமைத்திருந்த கற்பனைக் கோட்டைகள் அவள் கண்ணெதி

ரிலேயே பொலபொலவென உதிர்வது போலிருந்தது அவளுக்கு. என்ன சொல்வதென்றே தெரியாமல் மலைத்துப் போன அவளுடைய ஒட்டிப்போன கன்னங்களைக் கண்ணீர் நனைத்தது.

''அழாதீர்கள்!... இதெல்லாம் வயதுக் கோளாறு! கண்டிச் சிங்களப் பெண்கள் பொதுவாகவே அழகான வர்கள்... ஆண்களுடன் நெருங்கிப் பழகக் கூடியவர்கள். அந்தச் சிங்கள நர்ஸ் நமது சபேசன் மனதில் சபலத்தை ஏற்படுத்தி அவனை வளைத்துப்போட முயல்கிறாள் போலிருக் கிறது!... இதற்கெல்லாம் மாற்று மருந்து என்னிடம் இருக் கிறது!'' எனத் தரகர் தீர்மானமாகக் கூறியபோது எது என்பதுபோலப் பார்த்த மீனாட்சியின் கண்களில் ஆவல் தெரிந்தது.

''அம்மா! சபேசன் உங்கள் கண்காணிப்பிலும் வளர்ப் பிலும் ஒழுக்கமாக வளர்ந்த பிள்ளை... ஆனால் இப்போ அங்கே அவனைக் கண்டிக்கவோ கண்காணிக்கவோ எவரும் கிடையாது. வாலிபப் பருவம்... இளங்கன்று பயம் அறியாதென்பார்கள்... ஆனால் நாங்கள் அவனுக்கு உடனடியாகவே ஒரு திருமணத்தைச் செய்து வைத்து விட்டால் தீர்ந்து போகின்றது பிரச்சனை!'' எனத் தரகர் கூறியது மீனாட்சிக்கு சற்று நம்பிக்கையைக் கொடுத்தது.

இருந்தாலும் திடீரென்று எப்படி ஒரு நல்ல பெண்ணைத் தேடிப் பிடிப்பது. அவனுடைய படிப்புக்கெனப் பட்ட கடனைக்கூட இன்னமும் முழுதாக அடைக்கவில்லையே! திருமணத்துக்குப் பணத்துக்கு என்ன செய்வது என்று மீனாட்சி குழம்பியதை உணர்ந்ததுபோலப் பேச ஆரம் பித்தார் சின்னத்துரையர்.

''சபேசனுக்கு நான் ஏற்கெனவே ஒரு நல்ல இடத்தைக் கணித்து வைத்திருக்கிறேன். .அந்தப் பெண்ணுக்கு இப்போ பதினெட்டு வயதுதான் ஆகின்றது. இன்னும் இரண்டு

வருடம் கழியத் திருமணப் பேச்சை எடுக்கலாம் என்று நினைத்தேன்...''

''நல்ல இடமா சின்னத்துரை?... பெண் படித்திருக்கிறளா?'' மீனாட்சியின் குரலில் ஆர்வம் தொனித்தது.

''மீனாட்சியம்மா! நான் பேச்சுக்குச் சொல்லவில்லை. பெண்ணென்றால் கிளி மாதிரி. இன்றெல்லாம் பார்த்துக்கொண்டிருக்கலாம்.. தாயில்லை... தகப்பன் பெரிய செல்வந்தர்... பெண்ணின் அக்காவின் புருஷன் ஒரு அக்கவுண்டன்... இரண்டு அண்ணன்மார்... அவர்களுக்கும் நல்ல இடங்களில் திருமணமாகி விட்டது... எஞ்சியிருப்பது இந்தக் கடைக்குட்டிப் பெண்தான்'' எனக் கூறிய தரகர் சற்றுச் சிந்தனையில் ஆழ்ந்தார்.

''சின்னத்துரை! எனக்கென்றால் என்ன செய்வதென்றே புரியவில்லை... முதலாவது முருகன்... அதற்கப்புறம் உன்னைத்தான் நம்பியிருக்கின்றேன்!'' எனக் கலங்கிய மீனாட்சியைப் பார்க்க அவருக்குப் பரிதாபமாகவிருந்தது.

கல்யாணத் தரகு வேலைகளில் இல்லாததையும் பொல்லாததையும் சொல்லி எத்தனையோ கல்யாணங்களை நடத்தி வைத்தவர் சின்னத்துரையர். சொல்வதைச் சொல்ல வேண்டிய விதத்தில் சொல்ல வேண்டிய இடத்தில் சொன்னால் நடக்காததா... என நினைத்தவர் ''அம்மா! நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாதீர்கள்! எப்படியாவது நான் அவர்களைச் சம்மதிக்க வைத்துவிடுவேன்! ஆனால் உங்கள் மகனை வழிக்குக் கொண்டுவர வேண்டியது உங்கள் பொறுப்பு... அவருக்கு இதைப்பற்றி ஒன்றும் தெரியக்கூடாது... திருமணத்தைப் பேசி நேரத்தைக் குறித்துக் கொண்டு சட்டென ஆளைக் கொண்டு வந்து பதிவை முதலில் முடிக்க வேண்டும்... இரண்டொரு நாட்களில் நல்ல முடிவோடு வருகின்றேன்!'' என விடை பெற்றவர் மீனாட்சியிடம் சபேசனுடைய போட்டோவையும், ஜாதகக் குறிப்பையும் பெற்றுக்கொண்டு புறப்பட்டார்.

அவர் சென்ற பின்னரும் அப்படியே உட்கார்ந்திருந்த மீனாட்சி மகன் சபேசனை எண்ணி கவலைப்பட்டுக் கொண்டாள். கோழி குஞ்சை வளர்ப்பது போலப் பொத்திப் பொத்தி வளர்த்த மகனை இப்போ பருந்து கொத்திக் கொண்டு போவதென்றால்!... அதுவும் ஒரு சிங்களப் பெண்! நாடிருக்கும் நிலைமையில் ஏன்தான் இவனுக்கு இப்படிப் புத்தி பேதலித்ததோ... அவளுக்கும் இவனுக்கும் எந்த அளவில் பழக்கம் இருக்கின்றதோ...என்றெல்லாம் கலங்கித் தவித்தது அந்த பெற்ற மனம்.

★

## 3

கார் புறப்பட்டு இரண்டொரு கிலோமீட்டர் கடப்பதற்கிடையில் "கணேஷ்! ஏதாவது ஒரு கடையைப் பார்த்துக் காரை நிறுத்து...சிகரெட் வாங்க வேண்டும்... இரண்டு நாட்கள் சிகரெட் புகைக்காதது என்னவோ போலிருக்கிறது!" எனச் சபேசன் கூறியதைக் கேட்டு அடுத்தாற்போல் வீதியோரமாக இருந்த பெட்டிக் கடையருகில் காரை நிறுத்தினான் கணேஷ்.

ஓடி வந்த கடைப் பையனிடம் தன் பர்ஸை எடுத்துப் பணத்தைக் கொடுத்து "ஒரு பாக்கட் பிறிஸ்ரல்!" எனச் சபேசன் சொன்னபோது அந்தப் பர்ஸிலிருந்த ஒரு பெண்ணின் போட்டோ கணேஷின் பார்வையில் பட்டது.

அழகாகச் சிரித்துக் கொண்டிருக்கும் ஒரு இளம் பெண்...கண்டிய சிங்களப் பெண்கள் அணிவது போல மேலே ரவிக்கை மட்டும் அணிந்திருந்த அந்தப் பெண்ணின் முகத்திலும் உடலிலும் இளமை திமிறியது.

"இது யாரடா சபேசன்!...யாராவது சிங்களப் பிலிம் ஸ்டாரா?..." எனக் கணேஷ் விசாரித்தபோது

சற்றுக் கூச்சத்துடன் சிரித்த சபேசன் "இது என்னுடன் வேலை செய்யும் ஒரு நர்ஸ்! பெயர் சந்திரிகா!...சிங்களப் பெண்..." என்ற போது "அதுதான் படத்தைப் பார்த் தாலே தெரிகிறதே!.. ஆமாம்! அவளுடைய படத்தை நீயேன் பர்ஸில் வைத்திருக்கிறாய்! என்ன லவ்வா?"

"சிச்சீ!...அப்படியொன்றுமில்லை கணேஷ்...சும்மா... ஒரு பிரண்ட்ஷிப் தான்!" எனச் சிரித்தான்.

இதற்குள் கடைப் பையன் சிகெரட் பாக்கட்டையும் சில்லறையையும் கொண்டு வந்து தரவே கணேஷ் காரைக் கிளப்பினான்.

ஆவலோடு சிகெரட்டைப் பற்றிக் கொண்டு திருப்தி யோடு புகையை இழுத்த சபேசனைத் திரும்பிப் பார்த்தான் கணேஷ்.

சிறு வயது முதலே ஒன்றாகப் படித்தவர்கள். நெருங்கிய நண்பர்கள். எனவே அவர்களுக்கிடையில் இரகசியங்கள் இருந்ததில்லை. அவர்கள் படித்தது ஒரு ஆண்கள் பாடசாலையாதலால் பெண்களுடன் நெருங்கிப் பழகும் சந்தர்ப்பம் இருந்ததில்லை. பின்னர் சபேசன் மெடிகல் காலேஜுக்குத் தெரிவு செய்யப் பட்டபோது, கணேஷின் தந்தை இறந்துவிடவே கணேஷ் அவருடைய வியாபார நிலையத்தைக் கவனிக்க வேண்டியிருந்ததனால் அவனால் தொடர்ந்து மேலே படிக்க இயலாமற் போயிற்று. அதன்பின் அவர்கள் அடிக்கடி சந்திக்க முடியாவிடினும் அவர்களிடையே இருந்த நட்பின் இறுக்கம் குறைய வில்லை.

மலைநாட்டில் ஹற்றன் நகரில் பெரிய ஜவுளிக்கடை நடத்திய கணேஷ் மாதம் ஒரு தடவையாவது ஊருக்கு வந்து போவான். அப்போது கண்டிக்கு வந்து சபேசனையும் கூடவே அழைத்து வருவதை இப்போ அவர்கள் வழக்க மாக்கிக் கொண்டிருந்தனர்.

ஏழைப் பையனாக இருந்த தன் நண்பன் இப்போது ஒரு இளம் டாக்டராக இருப்பதைக் குறித்து கணேஷுக்கு மட்டற்ற மகிழ்ச்சி. அவனை இந்த நிலைக்கு உயர்த்திய மீனாட்சியின் மேல் அபார மதிப்பு வைத்திருந்தான்.

சபேசன் யாழ்ப்பாண மெடிகல் காலேஜில் இருக்கையில் தன் படிப்பொன்றிலேயே கவனமாக இருந்தானன்றி வேறு விஷயங்களில் அவன் நாட்டம் சென்றதில்லை. கணேஷுக்குத் தெரிந்தவரையில் சபேசன் வாழ்க்கையில் அவனுடைய தாயைத்தவிர வேறு பெண்களே இடம் பெற்றிருக்கவில்லை. அப்படியிருந்தவன் இப்போது ஒரு அழகான பெண்ணின் படத்தைப் பர்ஸில் வைத்திருக்கின்றான் என்றால்! இண்டர்ண்ஷிப் முடிந்து முழு டாக்டராகி மூன்று மாதங்கள் ஆகவில்லை அதற்குள் சிகெரட் பிடிக்க ஆரம்பித்துவிட்டான். இன்னும் என்னவோ...என்று சிந்தித்தபடியே காரைச் செலுத்திய கணேஷ் சபேசனிடம் ''ஆமாம்!...இந்த சிகெரட் பிடிப்பதற்கே உன் அம்மாவுக்குப் பயப்படுகின்றாயே...சந்திரிகா சமாச்சாரம் உன் அம்மாவுக்குத் தெரிந்தால் என்னடா செய்வாய்?'' எனக் கேட்டபோது சபேசனுடைய முகம் சற்றுக் கலவரமடைந்தது போல் தோன்றியது.

''அம்மாவுக்குப் பயம் என்றில்லை கணேஷ்...அம்மா எனக்காகப்பட்ட கஷ்டங்கள் எனக்குத் தெரியும்... அவளுடைய மனம் புண்படுமே என்றுதான்...'' என அவசரமாகக் கூறினான் சபேசன்.

''நீ சிகெரட் பிடிப்பதற்கே அம்மாவின் மனம் புண்படும் எனப்பயப்படுகின்றாயே.. ஒரு சிங்களப் பெண்ணுடன் நீ பழகுவதை அறிந்தால் அவளுடைய மனம் என்ன பாடுபடும் என்பதை நீ யோசித்தாயாடா?''

''கணேஷ்! நீ நினைக்கும் அளவுக்கு அப்படியொன்றும் இல்லையடா...சும்மா ஒரு இதுதான்...தெரியாதா?'' எனச்

சிரித்த சபேசனை ஒரு தடவை திரும்பிப் பார்த்தான் கணேஷ்.

மறுபடியும் பார்வையை வீதியிலே பதித்து காரைச் செலுத்திய கணேஷ் சில நிமிடங்கள் மௌனமாக இருந்தான். பின்னர் நிதானமாகப் பேச ஆரம்பித்தான். அவனுடைய பேச்சில் அக்கறையும் கவலையும் இருந்தன.

''சபேசன்! உன்னை எனக்கு நன்றாகத் தெரியும்...ஒரு டாக்டராகிவிட வேண்டும் என்ற இலட்சிய வேட்கையில் இருந்த உனக்குப் பெண்களின் நெருங்கிய பரிச்சயமே முன்பு இருந்ததில்லை. அந்தக் கூண்டுக்குள் இதுவரை பாதுகாப்பாக இருந்த நீ இப்போது திறந்ததொரு உலகத்தில் பிரவேசித்திருக்கிறாய்...பெண்மையும் அதன் மென்மையும் உனக்குப் புதிது.. மேலும் அழகும் இளமையும் கொண்ட ஒரு டாக்டர் நீ! உன்னை வலைவிரித்துப் பிடித்துக் கொள்ள எத்தனையோ பெண்கள் முயல்வார்கள்... கவனம்...சும்மா ஒரு இதுதானே என விளையாடப் போய்க் கையைக் காலை முறித்துக் கொள்ளப் போகிறாய்...அதுவும் அவள் ஒரு சிங்களப் பெண்...நாடிருக்கும் நிலையில் எக்கசக்கமாக எதுவும் நடந்துவிடப் போகிறது கவனம்!'' என எச்சரித்தான் கணேஷ்.

''என்ன! பெரிய அனுபவசாலிபோல் பேசுகின்றாயே! உன்னுடைய வாழ்க்கையில் இப்படிப் பெண்களே குறுக்கிட்டதில்லையா?''

''சபேசன்!...நான் ஒரு வியாபாரி. உலகத்தையும் மனிதர்களின் போக்கையும் நன்றாக அறியாதவன் ஒரு கெட்டிக்கார வியாபாரியாகவே இருக்க முடியாது. விஷயங்கள் போகிற போக்கில் சிங்களப் பகுதியில் கடை வைத்திருப்பது மடைத்தனமான காரியமாகத் தோன்றுகிறது. மெல்ல மெல்ல இங்குள்ள வியாபாரத்தை எமது ஊருக்கு மாற்றிக்கொண்டு வருகின்றேன்..முதலில் அது நடந்து என் வியாபார நிலையம் யாழ்ப்பாணத்தில் ஸ்திரமாக

வேண்டும்...அதற்கப்புறந்தான் கல்யாணம் காட்சியெல்லாம்...இதற்கிடையில் எந்த வலையிலும் அகப்படுவதற்கு நான் இடமே கொடுக்க மாட்டேன்.. நான்தானே சொன்னேன்...நான் ஒரு கெட்டிக்கார வியாபாரியென்று!'' எனச் சிரித்தான் கணேஷன்.

''டேய் கணேஷ்!... நானும் ஒரு கெட்டிக்கார டாக்டர் தான். மறக்காதே!'' எனச் சேர்ந்து சிரித்தான் சபேசன்.

''ம்ம்...பார்க்கலாம்...எதற்கும் கவனமாக இரு!...'' என்று மீண்டும் அக்கறையுடன் எச்சரித்தான் கணேஷ்.

அதிகாலை வேளையாதலால் வீதியில் போக்குவரத்துக் குறைவாகவிருந்தது. வெய்யில் ஏறுவதற்குள் அனுராதபுரத்தைத் தாண்டி விட வேண்டும் என்ற நினைப்பில் கணேஷ் ஆக்சிலேட்டரை அழுத்தவே அந்தப் புதிய கார் காற்றெனப் பறந்தது.

அந்த வேகத்தை விரும்பியவனாய் சீட்டில் நன்ருகச் சாய்ந்து உட்கார்ந்து கண்களை மூடிக்கொண்ட சபேசனுடைய மனதில் கணேஷின் எச்சரிப்பு இன்னமும் ஒலித்துக் கொண்டேயிருந்தது. அத்துடன் கூடவே முதன் முதலாக அவன் சந்திரிகாவைச் சந்திக்க நேர்ந்த சம்பவமும் அவனுக்கு நினைவுக்கு வந்தது.

## 4

அப்போதுதான் அவன் கண்டி ஹாஸ்பிட்டலில் முதன் முதலாக வேலைக்குச் சேர்ந்திருந்தான். பெரிய ஹாஸ்பிட்டல் பத்துப்பதினைந்து டாக்டர்மார்... நிறைய நர்ஸ்மார். யாழ்ப்பாணத்தில் டியூஷன் கற்றுக்கொண்ட சிங்களத்தை அவன் அரைகுறையாய்ப் பயன்படுத்திக் கொண்டிருந்த காலம்,

அன்று சபேசனுக்கு நைட் டியூட்டி. பகல் முழுவதுமே பிசுபிசுத்துக் கொண்டிருந்த மழை இரவு பலமாகப் பிடித்துக் கொண்டது. இரவு பத்து மணி போல் ஹாஸ்பிட்டலிருந்து சுமார் கால்மைல் தூரம் தள்ளியிருந்த அறையை அவன் அடைவதற்குள் பெரும்பாடாய்ப் போயிற்று.

அறையில் நுழைந்து உடைமாற்றிக்கொண்டு அவன் படுக்கைக்குப் போக எண்ணியபோது அறைக் கதவை யாரோ படபடவெனத் தட்டுவது மழை இரைச்சலையும் மீறிக் கொண்டு கேட்டது.

இந்த நேரத்தில் யாராக இருக்கலாம் என்று யோசித்த படி கதவைத் திறந்தான் சபேசன்.

அங்கே மழையில் தெப்பமாய் நனைந்து போன நர்ஸ் சந்திரிகா கையில் குடையுடன் நின்றிருந்தாள்.

''மன்னிக்கவேணும் டாக்டர்... நான் என் அறைக்குள் போய் விடுவதற்குள் மழையுடன் காற்றும் சேர்ந்து கொண்டது. குடையும் முறிந்து போய்விட்டது!'' என அவள் குளிரில் நடுங்கியபடியே குடையைக் காட்டினாள்.

அழகுக்குப் பிடிக்கும் குடை இப்போ அவசியத்துக்கு உதவாமல் தொங்கியது.

பலமாக வீசிய காற்று சாரலை அள்ளிக் கொட்டவே ''குடையை வைத்துவிட்டு உள்ளே வா சந்திரிகா!'' என அழைத்தான் சபேசன்.

அறைக் கதவைச் சாத்தியபோதும் மழையின் பேய் இரைச்சல் ஓவெனக் கேட்டுக் கொண்டிருந்தது.

அறையின் ஒரு மூலையில் ஈரஞ் சொட்ட நின்று கொண்டிருந்தாள் சந்திரிகா. அவளுடைய சிக்கென்ற வெள்ளை பாலியஸ்டர் யூனிபாரம் நனைந்து உடலுடன் ஒட்டிக் கொண்டிருந்தது. அவளுடைய உடல் படபட

வென நடுங்குவதைக் கண்ட சபேசன் ஒரு டவலை எடுத்து அவளிடம் தந்தான்.

"பரவாயில்லை டாக்டர்! மழை குறைந்ததும் நான் போய்விடுகிறேன்... எனக்கொரு குடை இரவல் தந்தால் போதும்... நாளைக்குத் திருப்பித்தந்துவிடுகின்றேன்!" எனக் கூறிக்கொண்டே அவள் தன் தலையணியைக் சுழற்றிவிட்டு கூந்தலை விரித்துத் துவட்டிக் கொண்டாள். மழையில் நனைந்து மின்னிய அவளுடைய அழகிய கருங்கூந்தல் சந்திரிகாவின் சிவந்த முகத்துக்கு மேலும் அழகு செய்தது.

மழை இப்போதைக்கு விடாது போல் தோன்றுகிறது... உடலில் குளிர்பிடித்து ஜுரம் வந்துவிடப் போகின்றது... உடையைக் கழற்றி ஈரத்தைப் பிழிந்துவிட்டால் உலர்ந்து போய்விடும்... அதோ பாத்ரூம்!" எனச் சபேசன் கூறிய போது குளிரில் தவித்த சந்திரிகாவுக்கும் அது அவசியமாக படவே "தாங்யூ டாக்டர்!" என டவலுடன் பாத்ரூமுக்குள் நுழைந்து கொண்டாள்.

அறையிலிருந்த ஹீட்டரில் தண்ணீரை வைத்துத் தேனீர் தயாரித்தான் சபேசன்.

அவன் இங்கு வேலைசெய்ய வந்த சில நாட்களில் சந்திரிகாவின் வார்ட்டுக்கும் இரண்டு மூன்று தடவை நோயாளிகளைப் பார்வையிடச் சென்றிருந்தான். அழகான பெண், வேலையிலும் கெட்டிக்காரி என்ற அபிப்பிராயமே அவன் மனதில் ஏற்பட்டிருந்தது. சந்திரிகா இங்கு அண்மையில் தான் எங்கோ அறையெடுத்து இருக்கின்றாள் போலும் என எண்ணிக் கொண்டே டீயைத் தயாரித்து விட்டு பாத்ரூம் பக்கம் பார்த்தான்.

கதவு சாத்தியிருந்தது. உடையைப் பிழிந்து போட்டு விட்டு அது சற்று உலர்வதற்காகக் காத்திருக்கிறாள் போலும்... பாவம்... குளிராயிருக்கும் என்ற நினைவில் டீ

கப்பைக் கையில் எடுத்துச் சென்று பாத்ரூம் கதவைத் தட்டினான்.

கதவை ஒருக்களித்துத் திறந்த சந்திரிகாவிடம் டீ கப்பை சபேசன் நீட்டியபோது "ஓ! தாங்க்யூ டாக்டர்!" என அதை வாங்கிக் கொண்ட சந்திரிகாவின் கோலத்தை சபேசனால் கவனிக்காமல் இருக்க முடியவில்லை.

அவன் கொடுத்த டவலை அவள் உடலுக்குக் குறுக்காக கட்டிக் கொண்டிருந்தாள். அவளுடைய உடலை முழுவதுமே மறைப்பதற்கு அது போதுமானதாக இருக்க வில்லை. யானைத் தந்தத்தில் இழைத்த அழகுச் சிலை போன்றிருந்த அந்த இளைய உடலும் கன்னங்குழியச் சிரித்த சந்திரிகாவின் கருவிழிகளின் அழகும் அவன் கண் களைத் தம்பால் இழுத்து நிறுத்தின.

சபேசனுக்குத் தொண்டைக்குள் எதுவோ செய்தது. சூடான டீயை ஆவலுடன் பருகிக் கொண்டிருந்த சந்திரிகாவின் உடல் இப்போதும் நடுங்குவதை அவன் கண்டான். தரை ஈரமாயிருந்த அந்த பாத்ரூமில் இப்படியே உடை உலரும் வரையில் அவள் குளிரில் நின்றிருக்க வேண்டுமே என நினைத்தவன் கட்டிலுக்குச் சென்று அதன் மேல் விரித்திருந்த மெல்லிய கம்பளியை எடுத்து வந்து அவளிடம் கொடுத்து "இதைக் கட்டிக் கொண்டு வெளியே வந்திரு சந்திரிகா... உடை காய்ந்தபின் அணிந்து கொள்ளலாம்!" என்றான் சபேசன்.

சிறிது நேரத்துள் அதனைப் போர்த்திக் கொண்டு வெளியே வந்த சந்திரிகா சபேசனைப் பார்த்து வெட்கத் துடன் சிரித்துக் கொண்டாள். அந்தச் சிரிப்பும் அந்த வெட்கமும் சபேசனுடைய உள்ளத்தை என்னவோ செய்து உடலில் வெம்மையை ஏற்படுத்தியது.

அறையில் ஒரு நாற்காலிதான் இருந்தது. சந்திரிகா வைக் கட்டிலில் அமரச் சொல்லிவிட்டு சபேசன் அந்த

நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு ஜன்னலுக்கு வெளியே பார்த்தான். இடைக்கிடை ஒளிர்ந்த மின்னலில் மரங்கள் காற்றில் பேயாட்டம் போடுவது தெரிந்தது.

கட்டிலில் அமர்ந்திருந்த சந்திரிகாவைத் திரும்பிப் பார்த்தான் சபேசன். அந்த மெல்லிய போர்வையினுள் இருக்கும் அழகிய உடலேயும் சிலே போன்ற அங்கங்களேயும் அவனுல் நினேத்துப் பார்க்காமல் இருக்க முடியவில்லே.

இதுவரை காலமும் அவன் தன் படிப்பிலும் வாழ்க்கையிலும் பெண்ணின் உடலே ஒரு டாக்டரின் கண்ணேட்டத்தில் பார்த்ததேயன்றி வேறு வகையான சலனங்கள் அவன் மனதில் ஏற்பட்டதேயில்லே.

இப்போ படிப்பு முடிந்து தனது இலட்சியம் நிறைவேறி சமூகத்தில் ஒரு நல்ல அந்தஸ்தையும் பெற்றுவிட்டேன். இனியென்ன, இந்த உலகத்தையும் அதன் இனிமைகளேயும் அனுபவிக்க எதுவிதத் தடைகளுமில்லேயே என்று அவனுள் புதிதாக ஒரு ஆவலும் எதிர்பார்ப்பும் தோன்ற ஆரம்பித்திருந்த இந்த நாட்களில், அதுவும் இப்போ தன்னெதிரே போர்வையை மட்டும் போர்த்திக் கொண்டிருந்த சந்திரிகாவைப் பார்க்கையில் அவன் உடலின் உணர்ச்சிகள் மெல்ல விழித்துக் கொண்டன.

மழையில் தனக்கு அடைக்கலம் அளித்துக் கூடவே சூடான டீயும் தயாரித்துக் கொடுத்த சபேசனே நன்றியுணர்வுடன் இதுவரை ஒரு டாக்டராகவே கண்ட சந்திரிகா, இப்போ அவனுடைய கண்களே ஒருதடவை சந்திக்க நேர்ந்தபோது, பெண்ணுக்கேயுரிய உள்ளுணர்விஞல் அந்த விழிகளின் பின்னே தெரிந்த வேட்கையை இனம் புரிந்து கொண்டாள்.

டாக்டர் சபேசன் முதன் முதலில் கண்டி ஹாஸ்பிட்டலுக்கு வேலேக்கு வந்தபோது அங்கு பணியாற்றிய இளம் நர்ஸ்கள் மத்தியில் சலசலப்பு ஏற்பட்டிருந்தது.

அழகும் இளமையுங் கொண்ட எத்தனையோ கம்பீர மான டாக்டர்களை அவர்கள் பார்த்ததுண்டு. ஆனால் சபேசனுடைய களங்கமற்ற முகமும், அமைதியான சுபாவ மும் அப்பழுக்கற்ற நடத்தையும் இந்தச் சொற்ப நாட்களுக் குள்ளேயே அவர்கள் யாவரையும் கவர வைத்திருந்தது.

அவர்கள் அத்தனைபேரும் சிங்கள நர்ஸ்கள்- தமிழன் என்ற வித்தியாசமான பார்வையில் அவன் அவர்களுடைய அனுபவம் நிறைந்த விஷமப் பேச்சுக்களில் அடிக்கடி அடிபடவே செய்தான்.

''டாக்டர் சபேசனுக்கு அரிச்சுவடியே தெரியாதடி! எனக்கு மட்டும் அவருக்கு ஆனா ஆவன்னா சொல்லிக் கொடுக்க ஒரு வாய்ப்புக் கிடைத்தால்'' என்று அவர்களுள் ஒருத்தி அன்று குறும்பாகப் பேசியதை இப்போது நினைத் துக் கொண்ட சந்திரிகாவுக்கு உடல் சிலிர்த்துக்கொண்டது.

அவள் நிமிர்ந்து சபேசனுடைய கண்களை ஊடுருவிப் பார்த்தாள். அவளையே பார்த்திருந்த சபேசன் தன் பார்வையை விலக்கிக் கொண்டபோது வெளியே இடி யொன்று பயங்கர ஓசையுடன் இடித்தது.

அதைத் தொடர்ந்து சில கணங்களில் மின்சாரம் துண்டிக்கப்பட்டு அந்தப் பிராந்தியமே இருளில் மூழ்கிய போது சபேசன் ''அட! பவர் கட்டாய்ப் போய்விட்டதே! மெழுகுவர்த்தி இருக்கிறது... இதோ!'' என்றெழுந்து மேஜையை நோக்கி இருளில் தடுமாறிக் கொண்டே சென்ற போது அவனுடைய கைகளில் முதலில் தட்டுப்பட்டது மெழுகுவர்த்தியல்ல...பவர் கட்டானதும் பதைத்துப்போய் எழுந்து நின்ற சந்திரிகாவின் உடல்தான்!

அவளைத் தொட்டதுமே மின்சாரம் தீண்டியதுபோல் அப்படியே நின்றுவிட்டான் சபேசன்.

இருளும் குளிரும், தனிமையும் சலனமும் ஆட்சிசெய்த அந்தச் சிறிய அறையில் சிலையாய் நின்ற சபேசனை அப்படியே அணைத்துக்கொண்டாள் சந்திரிகா.

## 5

இனிய நினைவுகளும் புதிய பாடங்களும் காரில் கண்ணை மூடிப் பயணம் செய்துகொண்டிருந்த சபேசனுக்கு முழுமையாக மறுபடியும் ஞாபகத்துக்கு வந்தபோது அவனுடைய உடலில் ஒரு பரவசம் தொடங்கி அது அவன் முகத்திலும் பிரதிபலித்தபோது அவனைப் பார்க்க நேர்ந்த கணேஷனும் அதைக் கண்டு கொண்டான்.

''என்னடா?... கண்ணை மூடிக்கொண்டு உனக்குள் மகிழ்கிறாயே! என்ன அந்த நர்ஸின் நினைவா?'' குறும்புடன் கேட்டான் கணேஷ்.

''அப்படித்தான் வைத்துக் கொள்ளேன்!'' சபேசன் சிரித்தான்.

''அவளைப்பற்றிக் கொஞ்சம் விபரமாகவே சொல்லேன்!'' எனக் கணேஷ் சீண்டியபோது தான் முதலில் சந்திரிகாவைச் சந்திக்க நேர்ந்ததையும் அதன் பின் இந்த மூன்று மாதங்களுள் அவர்களுடைய உறவு சற்று நெருக்கமாய்ப் போனதையும் கூறினான் சபேசன்.

''அவளுக்கு எந்த ஊர்?...எப்படியான குடும்பம்?'' எனக் கணேஷ் விசாரித்தான்.

''சந்திரிகா கொழும்பைச் சேர்ந்தவள் ... சுமாரான குடும்பம்போல் தெரிகிறது. தாய் மட்டுந்தான் இருக்கிறாள். ஒரே ஒரு அண்ணன்... இப்போது ஹாலந்தில் இருக்கிறானும்...அங்கே ஒரு ஹாலந்துக்காரியைக் கட்டிக் கொண்டு கடையும் வைத்திருககிறானும்...'' எனச் சபேசன் சொன்னபோது ''சபேசன்! நீ சொல்வதைப் பார்த்தால் உன் சந்திரிகா உன்னைச் சீரியஸாகத்தான் விரும்புகிறாள் போல் தெரிகிறது...சிங்களப் பெண்களிலும் எத்தனையோ நல்லவர்கள் இருக்கிறார்கள்...பாசம் முற்றினால் அந்தச் சிக்கலில் இருந்து நீ விடுபடுவது மிகவுஞ் சிரமம்...அதுவும்

இளம் வயதென்கிறாய்...பெண்பாவம் பொல்லாதடா!'' என எச்சரித்தான் கணேஷ்.

''கணேஷ்!...சந்திரிகா என்னைச் சந்திக்கும்போது... நான்தான் புதிது...அவள் அப்படியல்ல... நீ ஒரு கெட்டிக் கார வியாபாரியென்றால் நான் ஒரு கெட்டிக்கார டாக்டர்.. மறந்து விடாதே!'' எனச் சபேசன் கூறியதைக் கவனமாகக் கேட்ட கணேஷ்.,.'' அது எப்படித்தான் இருக்கட்டுமே... அவளுடன் இனிமேலும் நெருக்கமாகப் பழகாதே! ஆப்பிழுத்த குரங்குபோல மாட்டிக்கொண்டு விழிக்கப் போகின்றாய் ... விரைவில் உன்னைக் கண்டியிலிருந்து மாற்றல் எடுக்க வேண்டும்...பார்க்கலாம்...யாராவது மினிஸ்டரைப் பிடித்து...'' எனத் தனக்குத்தானே சொல்லி கொண்டான்.

சிறிதுநேரம் அமைதியாக இருந்த சபேசன் ''அதுவும் நல்ல யோசனைதான் கணேஷ்...'' என்று சொன்னான்.

## 6

யாழ்ப்பாணத்தின் இன்னுமொரு பெரிய கிராமமாகிய நல்லூரில் வாசுகியின் தந்தை கட்டியிருந்த பெரிய பங்களா அந்த இரண்டு ஏக்கர் பூமியில் கம்பீரமாக நின்றது. அதற்கு அருகிலேயே கடைசி மகள் வாசுகிக்கென அவர் அமைத்திருந்த சின்ன பங்களா புது மெருகுடன் காட்சி யளித்தது. இன்னமும் அந்த வீட்டுக்குக் குடிபோகும் வைபவமும் நடக்கவில்லை. வாசுகி வீட்டில் நிற்கும் நாட் களில் அந்தப் பங்களாவைத் திறந்து வேலையாட்களையும் வைத்துக்கொண்டு சுத்தம் செய்வதும் அதைச் சுற்றியிருந்த தோட்டத்தில் புதிய புதிய மலர்ச் செடிகளை நாட்டிப் பரா மரிப்பதுமாக இருப்பாள்.

அவளைப் பொறுத்தவரையில் அதுதான் அவளுடைய வசந்தமாளிகை. அவளுக்குச் சீராகக் கொடுக்கவிருக்கும்

பங்களாவை விதம்விதமாக அலங்கரித்து, தளபாடங்களை மாற்றி ஒழுங்குபடுத்தி வைக்கையில் அவள் இதயத்திலே அவளுடைய வருங்காலக் கணவனைப் பற்றிய இனிய கற்பனைகள் சதா ஊற்றெடுத்துப் பொங்கிய வண்ணமே இருக்கும்.

காம்பவுண்டின் ஓரமாக இவளுடைய தந்தை சங்கரப் பிள்ளையருக்கென ஒரு சிறிய வீடு மண்ணினுல் கட்டப்பட்டு பனையோலையினுல் வேயப் பட்டிருந்தது. அந்த வீட்டில் எளிமையாக வாழ்வதையே அவர் விரும்பினுர்.

ஐந்தாறு வருடங்களுக்கு முன்னர் அவருடைய மனைவி மாரடைப்பில் காலமாகிவிட அவருக்கு வாழ்வே வெறுத்து விட்டதைப் போல அவர் வியாபாரத்தை தனது இரு மகன்மாரிடமும் ஒப்படைத்து விட்டு இந்த மண் வீட்டை அமைத்து அதற்குக் குடிவந்து விட்டார்.

ஒரு படுக்கையறை, அதற்கு முன்னுல் வெளிச்சமும் காற்றோட்டமும் நன்கு வரக் கூடிய ஹால். சாணத்தினுல் மெழுகப்பட்ட தரை. சுவர் அலமாரிகளில் அவருக்குப் பிடித்தமான நூல்கள். காலையும் மாலையும் பக்கத்தில் உள்ள நல்லூர்க் கந்தனை தரிசிக்கும் வாய்ப்பு. இந்த எளிமையான வாழ்வில் ஒரு நெஞ்சு நிறைந்த நிம்மதி அவருக்குக் கிடைத்தது. வாசுகிக்கும் ஒரு நல்ல இடமாக அமைந்து விட்டால் அதன்பின் அவருக்கு வாழ்வில் பிரச்சனையே இல்லை. நிம்மதியாக நானும் அவள் போன இடத்திற்குப் போய்விடுவேன் என்ற நினைப்பில் காலத்தைக் கடத்திக் கொண்டு வந்தார் சங்கரப்பிள்ளையர்.

பெரிய பங்களாவின் பொறுப்பை மூத்த மருமகள் சரோஜா கவனித்து கொண்டாள். அவளுடைய புருஷன் சிவசுந்தரம் யாழ்ப்பாணக் கடைக்குப் பொறுப்பாக இருந்தான். இளையவன் சதானந்தம் கொழும்புக் கடையைப் பார்த்துக் கொண்டான். அவனுக்கும் மணமாகியிருந்தது. வியாபாரத்தைக் கவனிப்பதற்காகக் கொழும்பில்

கொட்டஹெனவில் உள்ள அவர்களுடைய சொந்த வீட்டில் மனைவி சீதாவுடன் வசித்து வந்தான். இவர்களுக்கு அடுத்தவள் கௌரி. அவளுடைய கணவன் கொழும்பில் உள்ள பெரியதொரு கம்பெனியின் பிரதான அக்கவுண்டன் அவர்களுக்கு ஆணும் பெண்ணுமாய் அழகான இரு குழந்தைகள். இளைய மருமகளுக்கு இப்போதுதான் வயிற்றில் உண்டாகியிருந்தது. மொத்தத்தில் நல்லூர்க் கந்தனின் அருளே இந்த ஆசீர்வாதங்கள் என அடிக்கடி எண்ணி நன்றி சொல்லிக் கொள்வார் சங்கரப்பிள்ளையர்.

கௌரியின் கணவன் ஸ்ரீதரன் கம்பெனி விஷயமாக பாரிஸுக்கு இரண்டு நாட்களுக்கு முன்னர்தான் போயிருந்தான். அவன் திரும்புவதற்கு இரண்டு வாரம் ஆகும் என்பதனாலும் குழந்தைகளுக்கு விடுமுறை இருந்ததனாலும் பிள்ளைகளுடன் பிறந்தகம் வந்திருந்தாள். அவளை யாழ்ப்பாணம் அழைத்து வரும் சாக்கில் இளையவன் சதானந்தனும் மனைவி சீதாவும் கூடவே நல்லூருக்கு வந்திருந்தார்கள்.

நீண்ட நாட்களுக்குப் பின்னர் யாவரும் ஒன்று கூடியதில் வீடு ஒரே கலகலப்பாக இருந்தது.

சங்கரப்பிள்ளையரும் டின்னர் சாப்பிட்டபின் பெரிய பங்களா ஹாலில் யாவருடனும் உட்கார்ந்து மகிழ்ச்சியாகப் பேசிக் கொண்டிருந்தபோது வாசுகியின் வருங்காலம் பற்றியும் அவளுடைய திருமணம் பற்றியும் பேச்சு வந்தது.

"அவளுக்கும் பதினெட்டு முடியப் போகின்றது. எங்காவது நல்லதொரு இடத்தில் அவளை விட்டு விட்டால் பிறகு எனக்கென்ன கவலை!" எனச் சங்கரப்பிள்ளையர் கூறியபோதுதான் மூத்தவன் சிவசுந்தரத்துக்கு அன்று காலையில் தன்னைத் தேடிக் கடைக்கு வந்திருந்த புரோக்கர் சின்னத்துரை குறிப்பிட்ட விஷயம் ஞாபகத்துக்கு வந்தது.

''அப்பா! காலையில் புறேக்கர் சின்னத்துரை வாசுகிக்கு ஒரு சம்பந்தம் பேசி வந்தார். பையன் இப்போதுதான் இண்டர்ண்ஷிப் முடிந்து கண்டியில் டாக்டராக வேலை பார்க்கிருன். சாவகச்சேரியில் நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்...ஒரே பிள்ளை...ஆனுல் மிகவும் கஷ்டப்பட்ட குடும்பம். தகப்பன் இறந்துபோக தாய்தான் மிகவுங் கஷ்டப்பட்டு மகனைப் படிக்கவைத்து டாக்டராக்கியிருக்கிருர்!'' எனக் கூறிவருகையிலேயே ''அப்படியானுல் மிகவும் கெட்டிக்காரப் பையனுகத்தான் இருக்க வேண்டும்! ஆள் எப்படியாம்?'' எனக் கேட்டார் சங்கரப்பிள்ளையர்.

''அழகான வாலிபன்தான்! தரகர் பையனுடைய போட்டோவைக் கூடக் காட்டினுர்...நல்ல இடந்தான்... ஆனுல் ஒரு பிரச்சனை...அதுதான் நான் மேற் கொண்டு அதையிட்டுத் தொடர விரும்பவில்லை அப்பா!'' என்ருன் சிவசுந்தரம்.

அதைக் கேட்ட யாவருமே அது என்ன பிரச்சனை என அறிய விரும்பியவர்களாய் அவனுடைய வாயையே பார்த்தனர். வாசுகிக்கோ இதயம் பரபரத்தது. டாக்டராமே... அதுவும் அழகான வாலிபராமே!...நினைக்கவே அவளுக்கு நாணம் பொங்கியது. கிளுகிளுத்த நெஞ்சத்தைக் கட்டுப் படுத்திக் கொண்டு கண்களைத் தாழ்த்திக் காதை மட்டும் தீட்டிக் கொண்டாள்.

''என்ன பிரச்சனை? சொல்லேன் அண்ணு!'' எனக் கௌரி ஆவல்மிக்கவளாய்த் தூண்டினுள்.

''ஒன்றுமில்லை... பையனைப் படிக்க வைத்ததில் தாயாருக்கு ஏகப்பட்ட கடன். கடனைக் கொடுத்தவர் கடனை உடனே அடைக்க வேண்டும்... இல்லையேல் தன்னுடைய மகளை அந்தப் பையன் கட்டிக் கொள்ள வேண்டும் எனக் கஷ்டப்படுத்துகின்ருராம். அந்தக் குடும்பத்தில் பையனை விடுவதில் தாய்க்கு இஷ்ட

மில்லையாம். எனவேதான் தரகர் சின்னத்துரையர் அவசரமாகப் பருத்தித்துறையில் ஒரு பெண்ணைப் பார்த்திருக்கிறார். அடுத்த வாரமே விவாகப் பதிவை வைத்துக்கொண்டு கிடைக்கும் சீதனப் பணத்தில் கடனை உடன் அடைக்க வேண்டுமென்று அவசரப்படுகிறார்கள். அருமையான பையன்! நம்ம வாசுகிக்கு மிகவும் பொருத்தமானவன் எனத் தரகர் சொன்னார்...ஆனால் ஒரு வாரத்துள் நாம் எப்படி விவாகப் பதிவை வைக்க முடியும்? பையனைப் பற்றி இன்னமும் நன்றாகத் தெரியாது. இந்தக் கல்யாணத் தரகர்மாரை நம்ப முடியாது...எல்லாவற்றுக்கும் மேலாக அத்தான் கூட ஊரில் இல்லை. எப்படித்தான் அது நமக்குப் பொருந்தும் என்று நான் அக்கறையின்றி விட்டு விட்டேன்.'' என்று கூறினான் சிவசுந்தரம்.

கௌரிக்கென்றால் இதைக் கேட்டதும் மனம் துடிக்கலாயிற்று. தங்கள் குடும்பத்தில் யாரும் பெரிய பதவிகளில் இல்லையே என்ற குறை அவளுக்கு ஏற்கெனவே உண்டு. தனக்கு உயர்ந்த உத்தியோகத்தில் ஒரு மாப்பிள்ளை கிடைத்தது போலத் தங்கை வாசுகிக்கும் நல்லதொரு டாக்டரோ எஞ்சினியரோ வரனாக அமைய வேண்டுமென அவள் ஆசைப்பட்டுக் கொண்டிருந்தாள்.

எனவே ''அண்ணா! நீயும் சதா அண்ணனும் ஒரு தடவை கண்டிக்குப் போய் மாப்பிள்ளையைப் பார்த்து விட்டு, விசாரித்துப் பார்த்து நல்ல இடமென்றால்...அவர்களுடைய கடனை அடைக்க உதவலாமே!...கடனைக் கட்டி விட்டால் பின்னர் ஆறுதலாக அத்தான் பாரிஸிலிருந்து வந்ததும் மற்ற ஒழுங்குகளைப் பார்க்கலாமே!'' என்றாள்.

சதாசிவம் ''அதெப்படி கௌரி! வாசுகிக்கென ஒரு இடத்தில் நாம் மாப்பிள்ளை பார்த்துப் பணமும் கொடுத்து விட்டு...பின்னர் ஏதாவது நடந்து திருமணம்நடக்காவிடில் பின் வாசுகிக்கு வேறு இடத்தில் நாம் மாப்பிள்ளை பார்க்கப் புறப்படும்போது நாலுபேர் நாலுவிதமாகப்

பேச வேண்டியல்லவா வரும்!...அவளுடைய அழகுக்கும் படிப்புக்கும் நல்ல இடமா கிடைக்காது!'' என்று அடித்துப் பேசினன்.

''உனக்கென்ன அண்ணு தெரியும்...இந்தக் காலத்தில் மெடிகல் காலேஜ் அட்மிஷன் கிடைத்ததுமே மாப் பிள்ளையை புக்பண்ணி விடுகிருர்கள்! பிக்குப்பிடுங்கல் இல்லாத குடும்பம்...எனக்கென்றுல் இது ஏதோ நல்ல இடமாகப் படுகின்றது...அப்பா!...நீங்கள் என்ன நினைக் கிறீர்கள்?'' என வினவினுள் கௌரி.

''கௌரி சொல்வதிலும் உண்மை உண்டு மாமா! இந்த நாட்களில் நல்லதொரு மாப்பிள்ளையை எடுப்பது கஷ்டம்... வாசுகிக்காகப் படையெடுத்து வரப்போகிற பணக்கார இடங்களைவிட இப்படியொரு இடத்தில் வரன் கிடைப்பது நல்லது மாமா!'' எனத் தன் அபிப் பிராயத்தைச் சொன்னுள் மூத்த மருமகள் சரோஜா.

இவற்றைக் கேட்ட சங்கரப்பிள்ளையர் ''சின்னத்துரை புரோக்கரை எனக்கு நீண்டகாலமாகத் தெரியும்...நாணய மானவன்தான்...'' என்று யோசித்தவர் ''நவாலியில் தானே அவனுடைய வீடு...காரை அனுப்பி அவனை அழைத்துவரச் சொல்! நானே அவனிடம் நேரில் பேசிப் பார்க்கிறேன். பையனின் போட்டோவையும் பார்த்தது போலிருக்கும்!'' என்று சொன்னுர். யாவருக்கும் அது சிறந்த யோசனையாகவே பட்டது. பையனின் போட்டோ வரப் போகின்றது எனக் கேட்ட வாசுகியின் இதயம் படபடவென அடித்துக் கொண்டது.

சங்கரப் பிள்ளையர் வீட்டுக் கார் தன்னைத் தேடி வந்ததுமே இந்தக் கல்யாணம் நிச்சயம் நிறைவேறத்தான் போகின்றது என எண்ணிக் கொண்டு புறப்பட்டார் புரோக்கர்.

சங்கரப்பிள்ளையரின் பங்களாவில் அவர் தனது திறமை முழுவதையுமே பயன்படுத்தி டாக்டர் சபேசனைப் பற்றிக்

கூறியபோது அவர்கள் யாவருமே சின்னத்துரையரின் வாய்ச் சாதுரியத்தில் எடுபட்டுப் போயினர். அவர்கள் மனங்களில் கொஞ்ச நஞ்சமிருந்த தயக்கத்தையும் சபேச னுடைய கம்பீரமான அழகு பறக்கடித்துவிட்டது.

சபேசனுடைய போட்டோவை மாறி மாறி மற்றவர் கள் யாவரும் பார்த்துப் பாராட்டிக் கொண்டபோது வாசுகிக்கு எப்போது படம் தன் கைக்கு வரும் என்ற ஆசை நெஞ்சை நிறைத்தது. கௌரியின் கைக்கு மறுபடியும் போட்டோ வந்தபோது "வாசுகி!... இதோ இதுதான் டாக்டர்!" எனக் குறும்புடன் வாசுகிக்குப் போட்டோ வைக் காட்டினுள் கௌரி. அதைப் பார்த்ததுமே அவளது முகம் நாணத்தில் சிவந்து போயிற்று. "போ அக்கா!" எனச் செல்லமாகத் தமக்கையைக் கடிந்துவிட்டு வெட்கத் தில் தன்னுடைய அறைக்கு ஓடிவிட்டாள்.

ஆனுல் சபேசனுடைய களங்கமற்ற களை நிறைந்த முகம் அவள் புது நெஞ்சில் அப்படியே சித்திரமாகப் பதிந்து போயிற்று. இதுவரை காலமும் முகம் தெரியாமல் வெள்ளைக் குதிரையில் மனதில் வலம் வந்த ராஜகுமார னுக்கு இப்போ ஒரு நிஜமான முகம் கிடைத்துவிட்டிருந்தது.

யாவற்றையும் விபரமாக விசாரித்துத் தெரிந்து கொண்ட சங்கரப்பிள்ளையர் கௌரியைக் கூப்பிட்டு "மாப்பிள்ளைக்கு பாரிஸுக்கு ஒரு கால் புக் பண்ணம்மா... இந்த விஷயத்தையிட்டு அவருடைய ஆலோசனையைக் கேட்போம்!" என்றபோது கௌரி உற்சாகத்துடன் எழுந்தாள்.

கால் கிடைத்ததும் விஷயத்தை முதலில் கூறினுர் சங்கரப்பிள்ளையர். அவர் கூறிய யாவற்றையும் அவதான மாகக் கேட்ட ஸ்ரீதரன் "நீங்கள் பார்த்துத் திருப்தி யென்ருல் எனக்கும் சம்மதந்தான்... நாளை சதாவும் சீதா வும் கொழும்புக்குப் போகையில் கூடவே சிவசுந்தரத்தை யும் அவர்களுடன் அனுப்பி வையுங்கள். அவர்கள் முதலில்

கண்டிக்குச் சென்று டாக்டரை ஒரு தடவை நேரில் பார்க்கட்டும். முடிந்த அளவுக்கு அங்கு விசாரித்துப் பார்க்கலாம்... அவர்கள் கண்டியிலிருந்து திரும்பியதும் பையன் பொருத்தமானவன் என்றால் உடனே நீங்களும் கௌரியும் புரோக்கருடன் அந்தப் பையனின் தாயாரைப் போய்ப் பார்த்துப் பேசுங்கள். இரண்டு வகையிலும் யாவும் திருப்திகரமாக இருப்பின் உடனேயே விவாகப் பதிவுக்கு ஏற்பாடு செய்யுங்கள். இந்தக் காலத்தில் நல்ல பையன் கிடைப்பது கஷ்டம்!'' என்று கூறினான்.

வீட்டுக்கு மூத்த மருமகன் விஷயத்தை ஓகே பண்ணி வழிகளையும் வகுத்துக் கொடுத்தபோது யாவரும் மகிழ்ச்சியும் எதிர்பார்ப்புக்களும் நிறைந்த உள்ளங்களுடன் படுக்கைக்குச் சென்றனர்.

வாசுகிக்கு முதலில் நித்திரையே வரவில்லை. பின்னர் நித்திரை வந்தாலும் நிறையக் கனவுகளே வந்தன. அத்தனையும் இனிய புதிய கனவுகள்.

□

# 7

அன்று ஞாயிற்றுக்கிழமை. காலையில் கண்விழித்த டாக்டர் சபேசனுக்கு மனதில் உற்சாகம் பொங்கியது. இன்று நைட் டியூட்டி கிடையாது. நாள் முழுவதும் ஓய்வு தான் என்ற நினைவே சுகமாக இருந்தது சபேசனுக்கு.

அத்துடன் அன்று மாலை சந்திரிகாவும் அவனும் பேராதனிய பூங்காவுக்குச் செல்வதென்று திட்டமிட்டிருந்தனர். அந்த அழகிய சூழலில் சந்திரிகாவின் கையைப் பிடித்துக்கொண்டு நடக்கும் இனிமை! அதன்பிறகு நல்லதொரு ஹோட்டலில் சுவையான டின்னர்! அதன் பின்பு

அவளை அணைத்தபடியே அறைக்கு வந்து... என்று நினைக்கவே அவனுக்குத் தேகம் துடித்தது. உடலில் உஷ்ணம் பரவப் புரண்டு படுத்துக் கொண்டான். சந்திரிகாவின் இளமையும் மென்மையும் இப்போதே வேண்டும்போல் ஒரு தவிப்பு ஏற்பட்டு அவனை அலைக்கழித்தது.

குளிர்ந்த நீரில் குளிக்க வேண்டும் போலத் தோன்றவே எழுந்தவன் யாரோ கதவைத் தட்டும் ஒலி கேட்டுக் கதவைத் திறந்தான்.

அங்கே புரோக்கர் சின்னத்துரையர் நின்று கொண்டிருந்தார். அவர் பின்னே நின்ற தன் தாயைக் கண்ட போது அவனுக்குத் தன் விழிகளையே நம்ப முடியவில்லை. "அம்மா!" என்று ஓடிப்போய் அணைத்துக் கொண்டான். "ராசா எப்படியிருக்கிறாய்?" என அவனை முத்தமிட்ட மீனாட்சியின் கண்களில் நீர் ததும்பியது.

வாசலில் நின்ற பெரிய காரையும் அதனருகில் நின்ற டிரைவரையும் பார்த்த சபேசனுக்கு ஒன்றுமே புரியவில்லை.

"தம்பி!... நாம் இப்போ உடனேயே வீட்டுக்குப் போக வேண்டும்! லீவு போட்டுவிட்டு வா!" என அவள் சொன்ன போது "ஏன் அம்மா! என்ன?" என்று அவசரமாகக் கேட்டான் சபேசன்.

"அதையெல்லாம் காரில் போகும்போது பேசிக் கொள்ளலாம்... இப்போதே போய் லீவு போட்டுவிட்டுப் புறப்படலாம்!" என்றார் சின்னத்துரையர்.

"இன்று எனக்கு லீவுதான் மாமா!... ஆனால் நாளை காலை நான் பத்துமணிக்கு இங்கே நீதிமன்றத்தில் ஒரு வழக்கு சம்பந்தமாக ஆஜராக வேண்டுமே!" எனச் சபேசன் சொன்னபோது சட்டென மனசுக்குள் அவனுக்கு புரோக்கிராமைக் கணித்துக் கொண்டார் சின்னத்துரையர்.

"நாளைக் காலை நான்கு மணிக்கு அங்கிருந்து காரில் புறப்பட்டால் ஒன்பது மணிக்கு அழகாக இங்கு வந்து

விடலாம்... உடுப்பை மாற்றிக் கொண்டு புறப்படு தம்பி!... நேரமாகின்றது!'' என அவசரப் படுத்தினுர் தரகர்.

மகனையே விழுங்கிவிடுவதைப் போலப்பார்த்த மீனுட்சி ''விரைந்துவா தம்பி... எல்லாவற்றையும் போகும்போது சொல்கிறேன்'' எனக் கூறியபோது அவளுடையஅன்பிலும் பாசத்திலும் கட்டுண்டவனுய் புறப்படுவதற்கான ஆயத்தங் களைச் செய்தான் சபேசன்.

யாழ்ப்பாணத்தை நோக்கி விரைந்த காரில்பின் சீட்டில் தன்னருகே அமர்ந்திருந்த சபேசனுடைய கரத்தைப் பிடித்தபடி மீனுட்சி விஷய'த்தைக் கூறியபோது சபேசன் திகைத்துப் போனுன்.

''மகனே! உனக்கு இன்று மாலை விவாகப் பதிவு. உன்னை எதுவும் கேளாமலேயே நான் இதற்கு ஒழுங்கு செய்ததன் காரணம் உனனுடைய வாழ்க்கை சிறப்பாக அமைய வேண்டுமென்ற ஒரே நோக்கந்தான்! அதனுல்தான் இந்தத் திருமண ஏற்பாட்டை இவ்வளவு அவசரமாகச் செய்யவேண்டி வந்தது. அந்தச் சிங்களப் பெண்ணின் சிநேகிதம் உன்னை எங்கு கொண்டு போய்விடுமோ என்ற பயத்தினுலேயே நான் உன்னைக்கூட இதையிட்டு முதலில் கேட்காமல் யாவற்றையும் ஒழுங்கு செய்துவிட்டு வந்தேன். இது வரை காலமும் என்னுடைய ஒரு சொல்லையாவது தட்டியது கிடையாது. இப்போதும் நீ என் சொல்லை மீற மாட்டாய் என்ற நம்பிக்கை எனக்குண்டு... அப்படியேதும் நடந்தால்...'' என்ற சற்றுத் தயங்கிய மீனுட்சி பின் தொடர்ந்து வைராக்கியமாக ''அப்படியேதும் நடந்தால் பின்பு நீ என் பிணத்தைத்தான் காண்பாய்!'' எனச் சொல்லி அழுதபோது சபேசன் ''என்னம்மா இது'' எனத் தவித்துக் கொண்டான்.

முன் சீட்டில் அமர்ந்திருந்த சின்னத்துரையர் சபேச னுடைய தவிப்பை உணர்ந்தவராய் ''மீனுட்சியம்மா! தம்பி தான் நாம் சொன்னதும் ஏனென்று கேட்காமல் கூடப்

புறப்பட்டு வந்துவிட்டாரே!... உயிரையே கொடுத்து வளர்த்து ஆளாக்கிய உங்களுடைய சொல்லைக் கேட்காமல் அவர் வேறு யாருடைய சொல்லைக் கேட்கப் போகிறார்!... அதுவும் யாழ்ப்பாணத்திலேயே பிரபல புள்ளி சங்கரப் பிள்ளையரின் கடைசி மகள் வாசுகியைக் கல்யாணஞ் செய்ய அவருக்குக் கசக்கவா செய்யும்? இதோ உங்கள் வருங்கால மனைவியின் போட்டோ!" என வாசுகியின் போட்டோவை அவர் நீட்டிய போது அதை மெல்ல வாங்கிப் பார்த்தான் சபேசன்.

பூவும் பொட்டுமாய்த் தழையத் தழையச் சேலைக் கட்டி கொண்டு தங்கக் குத்துவிளக்குப் போல ஒளிவீசிய வாசுகி யின் அமைதியான அழகு அவன் நெஞ்சை அள்ளியது.

அவனுடைய முகத்தைக் கவனித்த மீனாட்சிக்கு வயிற்றில் பால் வார்த்தது போலிருந்தது. முருகா யாவும் உன் செயலே! என மனதுக்குள் நன்றி செலுத்திக் கொண்டாள்.

சபேசனுடைய மனநிலையைப் புரிந்துகொண்ட தரகர் சந்தோஷம் மிக்கவராய் வாசுகி குடும்பத்துப் பெருமையை யும் அவனுக்குக் கிடைக்கும் சீர் செனத்திகளையும் வரிசை யாக அடுக்க ஆரம்பித்தார்.

சபேசனுடைய உள்ளம் ஒரு சில கணம் சந்திரிகாவை நினைத்துக் கொண்டது.

இப்போதெல்லாம் அவள் அவனுடன் சற்று உரிமை யுடனே நெருங்கிப் பழக ஆரம்பித்திருந்தாள். மாதத்தில் இரண்டு மூன்று தடவையாவது அவனுடைய அறைக்கு அவனைத் தேடி வருபவள், விரைவிலேயே தன்னுடைய அண்ணன் ருத்ரா ஹாலந்திலிருந்து வரவிருப்பதாகவும் அப்போது சபேசன் கொழும்புக்குத் தங்கள் வீட்டுக்கு விருந்தாளியாக வரவேண்டும் எனவும் கேட்டுக் கொண் டிருந்தாள். விரைவில் அவள் தன்னை விவாகஞ் செய்யும்படி

கேட்பாள் என்ற உணர்வு சபேசனை இப்போ சில நாட்களாகச் சங்கடப்படுத்த ஆரம்பித்திருந்தது. அவளுடைய காதல் வாழ்க்கையின் அந்தரங்கங்களில் தான் முதலாவது நபரில்லை என்பதை அவன் தெளிவாகத் தெரிந் திருந்தபோதும் சந்திரிகா இந்த உறவெல்லாம் சும்மா ஒரு இதுக்குத்தான்...தயவு செய்து சீரியஸ்ஸாக எடுத்துத் தொலைக்காதே! என்று சொல்ல வேண்டும் என அவன் நினைத்தாலும் அவள் அவனுடன் இருக்கும் சமயங்களில், அதுவும் அவள் அவன் ஆசையைத் தூண்டி அவனை அள்ளி அணைத்துக் கொள்ளும் வேளையில் சொல்ல நினைத்ததெல் லாம் அவனுக்கு மறந்து போய்விடும்! மற்றும் சமயங்களில் அவளுடைய முகத்தை முறித்து அதைச் சொல்ல அவனுக் குத் திராணியில்லாது போய்விடும். இது எங்கோ விபரீதத் தில்தான் கொண்டுபோய் விடப்போகின்றது என அவனுக்குள்ளே ஒரு உணர்வு எச்சரிக்கஆரம்பித்திருந்தது.

இப்போ தாய் ஏற்பாடு செய்த இந்தத் திருமணம் இந்தப் பிரச்சனைக்கு ஒரு முடிவை ஏற்படுத்தும்...சந்திரிகா ஏதாவது கேட்டால் நான் என்ன செய்வது? நான் இதற்குச் சம்மதிக்காது போனால் என்னுடைய அம்மா தான் தற்கொலை செய்வதாகக் கூறியதால் என்னால் மறுக்க முடிய வில்லை. என்று சொல்லிவிடலாம்...விவாகப் பதிவு நடந்து விட்டால் பிறகு அவளால் என்னதான் செய்ய முடியும்! என்ற ரீதியில் சிந்தித்த சபேசனுடைய மனம் இப்போது தெளிவடைந்து விட்டிருந்தது.

சபேசனுடைய மௌனம் சம்மதத்துக்கு அறிகுறி என உணர்ந்த மீனாட்சி நிம்மதியாக மூச்சு விட்டாள்.

சபேசனுடைய போட்டோவையும் குறிப்பையும் வாங்கிச் சென்ற புரோக்கர் சின்னத்துரையர் அடுத்தநாள் அதிகாலையிலேயே வந்து சொன்ன விஷயத்தைக் கேட்டுப் பிரமித்துப் போனாள்.

உங்களுக்குக் கடன் கொடுத்தவரின் கெடுபிடியால் நீங்கள் அவசரமாகப் பருத்தித்துறையில் ஒரு பெண்ணைப் பார்த்ததாகவும்... ஒரு வாரத்துள் விவாகத்தை முடிக்க நீங்கள் அவசரப்படுவதாகவும் சங்கரப்பிள்ளையரின் வீட்டில் கூறி அவசரமாக விவாகப் பதிவை வைக்க அவர்களுடைய மனதை ஒப்புக்கொள்ள வைத்திருக்கின்றேன். அவர் தன் பிள்ளைகளை கண்டிக்கு அனுப்பி அவர்களும் சபேசன் அறியாமலே அவனைப் பார்த்து அவனையிட்டு விசாரித்துவிட்டு வந்திருக்கிறார்கள். உங்களுடைய நல்ல காலம்...சபேசனுக்கும் அந்தச் சிங்களப் பெண்ணுக்கும் இடையே உள்ள தொடர்பு அவர்களுடைய காதுக்கு எட்டவில்லை. வாசுகி உங்களுக்கு மருமகளாய்க் கிடைக்க நீங்கள் கொடுத்து வைத்தவர்கள் அம்மா!" என அவர் சொல்லி வாசுகியின் போட்டோவையும் காட்டியபோது மீனாட்சியால் தரகரின் சொல்லுக்கு மறுப்புச் சொல்ல முடியவில்லை. எப்படியாவது அந்தச் சிங்களப் பெண்ணுடைய வலையிலிருந்து தன் மகன் தப்பித்தால் போதும் என்பதே அவளுடைய ஒரே நோக்கமாக இருந்தது. இப்போ யாவும் அவள் நினைத்தபடி நிறைவேறும் நேரம் வந்த போது அவள் மறுபடியும் இறைவனுக்கு நன்றி செலுத்திக் கொண்டாள்.

சாவகச்சேரியில் அவர்களுடைய வீட்டிலே குளித்து உடை மாற்றிக் கொண்டு மாலையில் சங்கரப்பிள்ளையர் வீட்டுக்கு மாப்பிள்ளையாகப் புறப்பட்டான் டாக்டர் சபேசன்.

சங்கரப்பிள்ளையருக்கு நெருங்கிய இனத்தவர்களும் நண்பர்களும் நிறைய இருந்தனர். இருப்பினும் அவசரமாக ஏற்பாடு செய்யப்பட்டதால். குடும்ப அங்கத்தினரைத் தவிர வேறு நெருங்கின உறவினரைக்கூட அவர் விவாகப் பதிவுக்கு அழைக்க விரும்பவில்லை. முக்கியமாகத் தன்னுடைய மருமகன் ஸ்ரீதரின் ஊரில் இல்லாதது அவருக்குப் பெரிய குறையாகவே தெரிந்தது. எனவேதான்

விவாகப் பதிவை அமைதியாக முடித்துக் கொண்டு மருமகன் பாரிஸிலிருந்து திரும்பியதும் திருமணத்தை அமர்க்களமாகச் செய்யலாம் என அவர்கள் தீர்மானித் திருந்தனர்.

கோட்டும் சூட்டுமாக மாப்பிள்ளை காரில் வந்து இறங்கியபோது ஆனுனப்பட்ட சங்கரப்பிள்ளையரே அசந்து போனுர். போட்டோவில் காணப்பட்டதைவிடக் களைநிறைந்த முகம். கண்களில் பிரகாசம். ஆட்களைக் கவரும் பளீரென்ற புன்னகை. வாசுகிக்கு மிகவும் பொருத்த மான பையன்தான் என அவர் உச்சி குளிர்ந்து போய் விட்டது.

சங்கரப்பிள்ளையரே அசந்து போய்விட்டால் மற்றவர் களைக் கேட்க வேண்டுமா? அக்கா கௌரி ஆனந்தத்தில் மிதந்தாள். அண்ணன் மாரும் அண்ணியரும் அடிக்கொரு தடவை மணமக்களின் ஜோடிப் பொருத்தம் பற்றி மனம் நிறையப் பேசிக் கொண்டனர்.

சபேசனை நேரில் கண்ட வாசுகியோ கண்ணனைக் கண்டமீரா போல அப்படியே தனக்குள் உருகிப் போனுள் இப்படி ஒரு ராஜகுமாரனையொத்த கணவன் தனக்கு வாய்த்ததை எண்ணியெண்ணி அவள் உள்ளம் சிலிர்த்துக் கண்கள் பனித்துக் கொண்டன.

விவாகப் பதிவு, டின்னர் இவையெல்லாம் முடிந்த சமயம் கௌரியின் கணவன் ஸ்ரீதரன் பாரிஸிலிருந்து போன்கால் போட்டு மணமக்களை வாழ்த்திய பின்னர் சபேசனுடைய தாயார் "இனிமேல் என்ன! சபேசன் உங்களுடைய பிள்ளைதான்! நான் வீட்டுக்குச் செல் கிறேன்... அவன் ஆறுதலாக வரட்டும்!" எனப் புறப்பட்ட போது அவளுக்கு விடை கொடுத்து காரில் அனுப்பிய பின்னர் சங்கரப்பிள்ளையரும் யாவரிடமும் சொல்லிக் கொண்டு தன்னுடைய அறைக்குப் போய்விட்டார்.

தம்பதிகளை இனிமேலாவது தனியே விடவேண்டும். வாழ்க்கை முழவதுமே சேர்ந்து இருக்கப் போகிறவர்கள் இன்றுதான் முதற் தடவையாகச் சந்தித்து இருக்கின்றனர். அவர்களுக்குள் பேசிக் கொள்வதற்கு ஆயிரம் விஷயங்கள் இருக்கும். அதுவும் டாக்டர் நாளைக் காலையில் நான்கு மணிக்கே கண்டிக்குப் புறப்பட்டாக வேண்டும். சின்னஞ் சிறிசுகளின் சந்தோஷத்துக்கு நாம் தான் ஏன் இனிமேல் குறுக்கே நிற்க வேண்டும் என்ற புரிந்துணர்வோடு மண மக்களை மாடியிலுள்ள வாசுகியின் அறைக்கு அனுப்பி வைத்தார்கள்.

சங்கரப்பிள்ளையரும் தனது அறைக்குச் சென்ற பின்னர் வீட்டில் பெரியவர்கள் யாரும் இருக்கவில்லை. அனேகமாக ஒத்தவயதாக இருந்ததனுல் யாவரும் கலகலப் பாகப் பேசி மகிழ்ந்து கொண்டனர். நல்லதொரு விஷயத்தை நிறைவேற்றி வைத்த திருப்தி அவர்களுடைய நெஞ்சங்களில் நிலவியது. வாசுகியின் திருமணத்தைத் தடல்புடலாகச் செய்ய வேண்டும் சொக்கட்டான் பந்தல் போட்டு, வீடியோ படமெடுத்து என்றெல்லாம் விடிய விடிய அவர்களுடைய திட்டங்கள் வளர்ந்து கொண்டே போயின.

வாசுகியின் அறையில் நுழைந்த சபேசன் அந்த அறை யின் ஒழுங்கையும் அழகையும் கண்டு பிரமித்துப் போனுன். அவனுடைய வாழ்க்கையில் இப்படியான ஒரு அறைக்குள் அவன் கால் வைத்ததில்லை. பெட்ரூம் விளக்கு மட்டும் மெல்லிதாக ஒளி சிந்திக் கொண்டிருந்தது. தரையில் மெத்தென்ற காப்பெட், ஒரு புறத்தில் டிரஸிங் டேபிள், மறுபுறம் சிற்ப வேலைப்பாடுகள் அமைந்த அழகிய கட்டில், ஒரு பக்கத்தில் இருவர் உட்கார்ந்து பேசுவதற்கு வசதியாக சோபா... இத்தியாதிகளுடன் விளங்கியது அந்த அறை.

சபேசன் அறையைக் கவனிப்பதைக் கண்ட வாசுகி அவனேடு ஏதாவது பேச வேண்டும் என்ற ஆசையில்

"எப்படி?... என்னுடைய ரூம் உங்களுக்குப் பிடித்திருக்கிறதா?" என அழகாகக் கேட்ட போது "உன்னுடைய ரூமும் உன்னைப் போலவே மிகவும் அழகாக இருக்கிறது!" என வாசுகியை அன்புடன் அணைத்துக் கொண்டான் சபேசன்.

உண்மையிலேயே வாசுகியின் அடக்கமான அழகு சபேசனுடைய நெஞ்சை மிகவும் கவர்ந்திருந்தது. இப்போது தனது அணைப்பினுள் அவளுடைய கொடி போன்ற உடல் மெல்ல நடுங்கியபோது "என்ன? என்னை உனக்குப் பிடிக்கவில்லையா வாசுகி?" எனக் கேட்டான் சபேசன்.

சட்டெனத் தலையை நிமிர்த்தி அவனைப் பார்த்த வாசுகி அவனுடைய வாயைத் தன் கையால் பொத்தி "சீச்சீ... அப்படியொன்றுமில்லை!" என அவசரமாக வாசுகி கூறிய போது அவளுடைய குரலின் இனிமையையும் அதைவிட இனிமையாகத் தோன்றிய அவளுடைய தளிர் விரல்களின் ஸ்பரிசத்தையும் சபேசன் மிகவும் ரசித்தான்,

இல்லற உறவின் ஆரம்பப் பாடங்களை ஓரளவு சந்திரிகாவிடம் கற்றிருந்த சபேசன் இப்போது அப்படியே வாசுகியை ஆரத்தழுவி அவளுடைய செவ்விதழ்களை மெல்ல முத்தமிட்ட போது வாசுகிக்கு இன்பத்தில் உயிரே போவது போலிருந்தது.

சற்றுநேரம் அந்த இனிமையை அனுபவித்து நின்றவர்கள் பின்னர் கட்டிலில் அமர்ந்து கைகளைப் பிடித்தபடியே பேச முயன்றனர். காலங்காலமாகவே இணைந்திருந்தவர்கள் பிரிந்து நெடுநாட்களின் பின்னர் மீண்டும் சந்தித்துக் கொண்டதுபோல உரிமை நிறைந்த உறவுடனும் ஆர்வத்துடனும் அவர்கள் ஒருவரையொருவர் விழுங்கி விடுவதைப் போலப் பார்த்துக் கொள்வதிலேயே பேரின்பம் கண்டனர்.

நிசப்தமான இரவு மங்கிய விளக்கொளி மாலைகளின் இனிய மணம் எனக்கென நீ, உனக்கென நான் என உறவு ஏற்படுத்திக் கொடுத்த உரிமை. இவை யாவும் ஒன்று சேர்ந்து அந்த இளைய உள்ளங்களை உணர்ச்சிக் கடலில் மெல்ல மெல்ல ஆழ்த்திக் கொண்டிருந்தன.

என்றுமே இசைக்கப்படாத அழகியதொரு வீணையைப் போன்று வாசுகி அமைதியாக அமர்ந்திருந்தாள். ஆனால் அந்த வீணையின் நரம்புகளோ இசைக்கப்படுவதற்குத்துடித் தனவையாய் விண்ணென்று நின்றன. அந்த மாசற்ற வீணையை சபேசன் ஆசையுடன் மடியில் எடுத்துத் தன் அனுபவம் மிக்க விரல்களினால் தந்திகளை மெல்ல மீட்ட ஆரம்பித்தபோது ரீங்கரிக்க ஆரம்பித்த வீணை நிமிடங்கள் கரைந்து நாழியாக இல்லறம் என்ற இனிய இசையை அள்ளியள்ளி வழங்கலாயிற்று.

## 9

சந்திரிகாவுக்குத் திங்கட்கிழமை பகல் முழுவதுமே டியூட்டி இருந்ததனாலும் டாக்டர் சபேசன் ஊரிலிருந்து திரும்பியதுமே நீதிமன்றம் சென்றிருந்ததாலும் அவளால் சபேசனைச் சந்திக்க முடியவில்லை. ஹாஸ்பிட்டல் ஆபீஸில் வேலை செய்யும் தனது நண்பி மாலினியைக் கேட்டபோது டாக்டர் சபேசன் அவசரமாக ஊருக்குச் சென்றிருப்பதாக சொல்லியிருந்தாள். சந்திரிகாவுக்கும் சபேசனுக்கும் இடையே இருந்த தொடர்பை மாலினியும் அறிந்திருந்தாள்.

மாலையில் டியூட்டி முடிந்து வந்து சந்திரிகா ஹாஸ்பிட்டல் கன்ரீனில் மாலினியைச் சந்திக்க நேர்ந்த போது அவள் சொன்ன சேதி சந்திரிகாவைச் சற்று உலுக்கி விட்டிருந்தது.

''சந்திரிகா! டாக்டர் சபேசனுக்கு நேற்று ரெஜிஸ்ரேஷன் முடிந்து விட்டது. அதற்காகத்தான் அவர் அவ்வளவு அவசரமாக ஊருக்குச் சென்ருர் போலும்!'' என மாலினி சொன்னபோது சந்திரிகா இடிந்து போனுள்.

''உனக்கு எப்படித் தெரியும் மாலினி?'' என அவள் கேட்ட போது தான் சற்று முன்னர் ஆபீஸிலிருந்தபோது யாழ்ப்பாணத்திலிருந்து டாக்டர் சபேசனுக்குப்போன்கால் வந்ததாகவும் யார் பேசுவது என விசாரித்தபோது அவருடைய மனேவிபேசுகின்றேன் என்று சொன்னதாகவும் மேலும் கேட்டபோது நேற்றுமாலேயில்தான் விவாகப்பதிவு நடந்தது எனத் தெரியவந்ததாகவும் மாலினி விளக்கிய போது சந்திரிகாவுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லே

மனமுடைந்தவளாய் அவள் தன் அறைக்குத் திரும்பிய போது அங்கு அவளுக்காகக் காத்திருந்த அண்ணன் ருத்ராவைக் கண்டதுமே அவளுக்கு அழுகை பொத்துக் கொண்டு வந்தது.

ஹாலந்திலிருந்து முதல் நாள்தான் இலங்கைக்கு வந்திருந்த அவன் ஒரு காரை வாங்கிக் கொண்டு தன் தங்கையைக் காண ஆசையோடு கண்டிக்கு வந்திருந்தான்.

எப்போது வந்தாய், எப்படியிருக்கிருய் என்றுகூடக் கேளாமல் தன்னேக் கண்டதுமே அழவாரம்பித்த தங்கை சந்திரிகாவை அறையினுள் அழைத்துச் சென்று உட்கார வைத்துத் தேற்றி விஷயத்தை அறிய முற்பட்டான் ருத்ரா.

அழுகையினூடே சந்திரிகா சகல விபரங்களேயும் அவனுக்குக் கூறியபோது அவன் ருத்திரமூர்த்தியாகவே ஆகிவிட்டான்.

''அப்படியா சேதி! இப்போதே போய் அவனேக் கண்ட துண்டமாக வெட்டிப்போட்டு வருகிறேன். எங்கே அவனுடைய 'இடம்?'' என்று கொதித்து எழுந்தவனேச்

சந்திரிகா சமாதானப் படுத்துவதற்குள் பெரும்பாடாய்ப் போயிற்று.

ஆரம்பத்தில் விளையாட்டாகவே சபேசனுடன் பழக ஆரம்பித்த சந்திரிகா நாளாக நாளாக சபேசனுடைய அழகு பதவி இவற்றில் மனதைப் பறிகொடுத்து அவனையே மணம் முடிக்கவும் ஆசை கொண்டிருந்தாள். ஹாலந்தி லிருந்து அண்ணன் ருத்திரா வந்ததுமே அவனிடம் விஷயத்தைக்கூறி அவனுடைய உதவியுடன் தங்கள் திருமணத்தை முடிக்கவேண்டும். கூடவே, நாடு இருக்கும் நிலையில் தாங்கள் இருவரும் அண்ணனுடன் ஹாலந்துக்குப் போய்விட்டால் இருவருமே அங்கு நிம்மதியாக வேலை பார்க்கலாம்... ஐரோப்பிய வாழ்வை அனுபவிக்கலாம் என்று தன் மனதுக்குள் திட்டங்களை வகுத்திருந்தாள் சந்திரிகா.

எதையும் யதார்த்தமாகவும் நிதானமாகவும் சிந்திக்கும் சுபாவமுள்ள சந்திரிகாவுக்கு இப்போ இந்தப் பிரச்சனையை தீர்க்க ஒரு அருமையான வழி சட்டெனப் புலப்பட்டது.

அவள் தன் தமையனைச் சாந்தப்படுத்தி அவளிடம் தன் யோசனையைக் கூறியபோது அவனும் திட்டத்தைப் புரிந்து கொண்டு தன்னுடைய சம்மதத்தையும் தடையின்றி வழங்கினான்.

முகங்கழுவி உடைமாற்றித் தன்னை அழகாக அலங்கரித் துக்கொண்டு புறப்பட்ட சந்திரிகா மறுபடியும் சபேச னுடைய இடம்பற்றிய தகவல்களைக்கூறி ''மறந்து விடாதே அண்ணா! சரியாக இன்னும் இரண்டு மணித்தியாலத்தில் நீ அங்கு வரவேண்டும்!'' எனக் கூறிவிட்டு உற்சாகத்துடன் சபேசனுடைய அறையை நோக்கிப் புறப்பட்டாள்.

கதவு தட்டப்படும் சத்தம் கேட்டு கதவைத் திறந்த சபேசன் தன் முன்னே சந்திரிகா மல்லிகை மணம் கமழ நின்றபோது கலவரப்பட்டுப் போனான்.

சாதுரியமாகத் தன் கலவரத்தைக் கட்டுப்படுத்திக் ''உள்ளே வா சந்திரிகா!'' எனச் சபேசன் அழைத்தபோது மிகவும் சுவாதீனமாகவும் சந்தோஷமாகவும் உள்ளே நுழைந்த சந்திரிகா கதவு சாத்தப்பட்டதுமே ''நேற்று என்னை ஏமாற்றிவிட்டு ஊருக்குப் போய்விட்டீர்களே!... நான் எப்படியெல்லாம் தவித்துப்போனேன் தெரியுமா?'' எனச் சபேசனைக் கட்டியணைத்து முத்தமிட்டாள்.

அப்போதுதான் ஹாஸ்பிட்டலால் வந்துகுளித்துவிட்டு லுங்கி மட்டும் கட்டிக் கொண்டிருந்த சபேசனுடைய முதுகில் அவளது கரங்கள் மாலையாகப் படர சந்திரிகா அவனை ஆசையோடு அணைத்தபோது சபேசன் மிகவும் சங்கடப் பட்டுக்கொண்டான்.

அவளுடைய அன்புப் பிடியை விலக்கி ''கொஞ்சம் பொறு சந்திரிகா!... ஒரு முக்கியமான விஷயத்தை உனக்குச் சொல்ல வேண்டும்!'' என அவளை உட்காரவைத்த சபேசன் மலங்கமலங்க தன்னைப் பார்த்த சந்திரிகாவின் அழகிய விழிகளைச் சந்தித்தபோது இவளிடம் போய் எப்படி இதைச் சொல்வது என்று தவித்தான். அதே சமயம் இதோ இந்தக் கணமே நான் எனக்குத் திருமணமாகியதையிட்டு அவளிடம் கூறுவதுதான் நியாயமானதென அவன் உள்ளுணர்வு எச்சரிக்கவே தன் மனதைக் கல்லாக்கிக் கொண்டு ஜன்னலுக்கு வெளியே பார்த்தவாறு பேச ஆரம்பித்தான்.

''சந்திரிகா! நான் சொல்வதைக் கேட்டு நீ மிகவும் அதிர்ச்சி அடையக்கூடும்... ஆனால் உண்மையை நான் இப்போதே சொல்லிவிடுவதுதான் எம்மிருவருக்கும் நல்லது... உனக்கு நான் என் தாயைப்பற்றி ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன்.. என்னை உருவாக்கத் தன்னையே தேய்த்துக் கொண்டவள் அவள்... அவளை விட்டால் எனக்கு இந்த உலகத்தில் யாரும் இல்லை...அவளுக்கும் அப்படித்தான்... எனக்கும் உனக்கும் இருந்த சிநேகத்தை அவள் எப்படியோ தெரிந்து கொண்டு யாழ்பாணத்தில் எனக்கு ஒரு விவா

கத்தை அவசரமாக ஏற்பாடு செய்துவிட்டு நேற்றுக் காலையில் என்னைத் தேடி இங்கு வந்துவிட்டாள்...ஏதோ அவசரமான விஷயம் உடனே கிளம்பு என்று அவசரப்படுத்தி என்னைக் காரில் அழைத்துச் செல்கையில்தான் கல்யாண ஏற்பாடுகளைப் பற்றி என்னிடம் கூறி நான் இந்தத் திருமணத்துக்கு சம்மதிக்காவிடில் தன்னுடைய பிணத்தைத் தான் நான் காண நேரும் என என்னை நிர்பந்தித்தபோது என்னால் அவளுடைய வார்த்தையைத் தட்டவே முடியவில்லை சந்திரிகா. எனக்கும் வாசுகி என்ற ஒரு பெண்ணுக்கும் நேற்று மாலை விவாகப் பதிவு முடிந்துவிட்டது. என்னுடைய பலவீனத்தின் காரணமாக நான் உன்னிடம் எப்படியோவெல்லாம் நடந்து கொண்டிருக்கிறேன்... என்னை மன்னித்துவிடு சந்திரிகா!'' எனச் சபேசன் கூறிக் கொண்டிருக்கையிலேயே சந்திரிகா விசும்பி விசும்பியழ ஆரம்பித்துவிட்டாள்.

கட்டிலில் உட்கார்ந்த வண்ணம் தன் கைகளில் முகத்தைப் புதைத்துக் கொண்டு கலங்கியழுதசந்திரிகாவை பார்க்கையில் சபேசனுக்கு இதயத்தைப் பிழிந்தது.

மெல்ல அவளை நெருங்கிச் சென்று அவளுடைய தோளைத் தொட்டு ''அழாதே சந்திரிகா!... என்னை மன்னித்துவிட்டேன் என்று சொல்ல மாட்டாயா?'' என்று கேட்ட சபேசனைக் கண்ணீர்சிந்தும் விழிகளினூடாகப் பார்த்தாள் சந்திரிகா.

''உங்களுக்கு...உங்களுக்கு எப்படி மனம் வந்து என்னை ஏமாற்றினீர்கள் சபேசன்...!உங்களை பிரிந்து என்னால் வாழ முடியாதே!'' என மீண்டும் அழ ஆரம்பித்துவிட்ட சந்திரிகாவின் கண்ணீரைத் துடைத்த சபேசன் ''என் தாயினுடைய சொல்லைஎன்னால் மீற முடியவில்லையே சந்திரிகா!' என்று மனங்கலங்கி மறுமொழி சொன்னான்.

சற்றுநேரம் அப்படியே அமைதியாக அமர்ந்திருந்த சந்திரிகா தன்னுடைய அழுகையடங்கியதும்மெல்லஎழுந்து

பாத்ரூமுக்குச் சென்று முகத்தை அலம்பிச் சீர்செய்து கொண்டு வந்தாள்.

இப்போது அவளுடைய முகத்தில் கவலை தெரியவில்லை சபேசனை நெருங்கிவந்து அவனுடைய கையை அன்புடன் பற்றியவள் "உங்களுடைய நிலையில் நான் இருந்திருந்தால் கூட என் தாயின் சொல்லைத்தான் நானும் கேட்டிருப்பேன் ..." என அவள் பேச ஆரம்பித்தபோது சந்திரிகாவின் நல்ல உள்ளத்தைக் கண்டு சபேசன் நெகிழ்ந்து போனான்.

தன் இரண்டு கைகளிலும் சபேசனுடைய முகத்தைப் பற்றி அவனுடைய விழிகளுக்குள் ஊடுவிப் பார்த்த சந்திரிகா "கடந்த மூன்றுமாத காலந்தான் எத்தனை இனி மையான காலம்!...இன்று முதல் நீங்கள் யாரோ நான் யாரோ...இல்லையா டாக்டர்!" என்று மறுபடி கண்ணீர் மல்கக் கேட்டபோது சபேசனுக்கு என்ன சொல்வதென்றே புரியவில்லை.

அப்படியே தன் கன்னத்தை சபேசனுடைய கன்னத் துடன் சேர்த்துக் கொண்ட சந்திரிகா தன் இரு கைகளா லும்அவனை வளைத்துக்கொண்டு'நேற்றெல்லாம் உங்ககளுக் காகமிகவும்ஏங்கிப் போனேன்..இன்றோடுதான் நாம்பிரியப் போகிறோமே...கடைசியாக ஒருதடவை...ஒரே தடவை... நாம் முன்னர் பழகியதுபோல் இருந்துவிட்டால் அது எனக்குப்போதும்...அந்த ஒரு இனிய நினைவுடனேயே நான் உங்களைவிட்டுப் போய்விடுவேன்!..." எனச் சுடு மூச்செறிந்தபோது சபேசனுக்கு நெஞ்சுக்குள் திக்கென்றது.

நேற்று இதே சமயம் வாசுகியின் அணைப்பிலிருந்த நான் இன்று சந்திரிகாவின் ஆசைக்கு இணங்குவதா என அவன் மனம் தவித்துக் கொண்டது.

மௌனமாக நின்ற அவனை மெல்ல அணைத்தபடி அப்படியே கட்டிலில் சாய்ந்து கொண்டாள் சந்திரிகா.

அவளுடைய தேகம் கொதித்தது. கண்ணீர் சபேசனுடைய வெற்று முதுகைச் சுட்டது.

சந்திரிகா சபேசனை இழுத்துத் தன்னுடன் அணைத்துக் கொண்டு மோகம் மேலிட முத்தங்களைச் சொரிந்தபோது சபேசன் ஒன்றுமே செய்யமுடியாதவனாக அவன் இழுத்த இழுப்பிற்கெல்லாம் இழுபட்டபோதும் அவன் இப்போதும் கல்லாகவே இருப்பதைச் சந்திரிகாவினால் உணர முடிந்தது. அவனுடைய உள்ளமும் உடலும் இன்னமும் தன்வசம் வரவில்லையே என்ற ஆதங்கத்திலும் ஆத்திரத்திலும் அவள் வேகத்துடன் பிண்ணியிணைந்த போது அறைக் கதவையாரோ அவசரமாகத் தட்டுவதுகேட்டது.

பதறிப்போன சபேசன் சந்திரிகாவின் பிடியிலிருந்து தன்னை விடுவிடுத்துக்கொண்டு எழுவதற்குள் சாத்தியிருந் தும் பூட்டப்படாத கதவு திடீரெனத் திறந்து கொண்டது

கருகருவென்ற மீசையுடனும் கண்ணில் நெருப்புப் பொறி பறக்கத் தன் முன்னே நின்ற ஒரு ஆடவனைக் கண்ட போது சபேசனுக்குப் பயத்தினால் நாவறண்டு போயிற்று.

"ஐயோ! அண்ணா!..." என்று அச்சத்தில் தடுமாறிக் கொண்டு எழுந்த சந்திரிகா தன் இடையிலிருந்து நழுவி விட்டிருந்த துண்டை அவசரம் அவசரமாகக் கட்டிக் கொண்டாள்.

"எத்தனை நாளாய் நடக்கிறது இது?" என ஆத்திரத் துடன் இடுப்பிலிருந்து ஒரு சிறிய கத்தியை உருவிக் கொண்டு ருத்திரா கர்ஜித்தபோது சந்திரிகா தட்டுத்தடு மாறி" இப்போ இரண்டு மூன்று மாதமாக!" எனச் சொல்லிவிட்டு அழத் தொடங்கிவிட்டாள்.

அவளுடைய கூந்தலை ஒரு கையினால் பிடித்துக் கொண்டு "உனக்காக எத்தனை திட்டங்களோடு ஹாலந்தி லிருந்து வந்திருக்கின்றேன்...உனக்கு ஒரு நல்ல இடத்தில் திருமணம் செய்து வைக்கவேண்டும் என்று நான் நினைத்

துக்கொண்டுவர...இங்கே நீ!'' எனக்கூறிப் பளாரென்று அவளுடைய கன்னத்தில் அறைந்தான் ருத்ரா.

''இவன் உன்னைக் கல்யாணம் செய்து கொள்வானு?... சொல்லடி!'' என அவன் சந்திரிகாவின் கூந்தலைப் பிடித்து உலுக்கியபோது சபேசன் அவசரமாக ''நேற்றுத் தான் எனக்கு விவாகப்பதிவு நடந்தது!'' எனச் சொன்ன போது சந்திரிகாவை உதறிவிட்டு சபேசனுடைய குரல் வளையைப் பிடித்துக் கொண்டான் ருத்ரா.

''ராஸ்கல்!... என் தங்கையுடன் பழகி அவளைக் கெடுத்துவிட்டு பின்னர் வேறு ஒரு பெண்ணை நேற்றுத் தான் விவாகஞ் செய்திருக்கின்றுய்...இன்று...மறுபடியும் என் தங்கையை...'' என நறுநறுவெனப் பல்லை நெருமியவன் ''உன்னைக் குத்திக் கிழித்தால்தான் என் ஆத்திரம் அடங்கும்!'' என கத்தியை ஓங்கியபோது சந்திரிகா பாய்ந்து அவனுடைய கரத்தைப் பிடித்துக் கொண்டாள்.

''அண்ணு!''...அவரை ஒன்றுஞ் செய்துவிடாதே!... அவர் தன் அம்மாவின் வற்புறுத்தலுக்குத்தான் அந்தப் பெண்ணை மணம் செய்தார்...அவருக்கேதும் நடந்தால் பிறகு நீ என்னை உயிருடன் பார்க்க முடியாது!'' எனச் சந்திரிகா கூவியபோது சபேசனை வெறுப்புடன் கட்டிலின் மேல் தள்ளிவிட்டு கத்தியை இடுப்பில் சொருகிக் கொண் டான் ருத்ரா.

அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்துகொண்டு ஒரு சிகெரட்டை எடுத்துப் பற்ற வைத்தபடி சிந்தனையில் ஆழ்ந்துபோன ருத்ராவின் சிவந்த விழிகளைப் பார்க்கை யிலே சபேசனுக்கு வயிற்றைக் கலக்கியது.

அந்த அறையினுள் அமானுஷ்யமான அமைதி நிலவியது.

சிறிது நேரத்தின் பின் சபேசனைக் கோபத்துடன் பார்த்த ருத்ரா ' சந்திரிகாவினுல்தான் இப்போ உன்னுடைய உயிர் தப்பியது...உன்னை வெட்டிக் கொன்று வீதியில் போட்டால்கூட எமது சிங்களப் போலீஸ் என்னை ஒன்றும் செய்யாது...எமது பெண்ணைக் கெடுத்த ஒரு தமிழனைக் கொன்றதற்காக அவர்கள் என்னைப் பாராட்டவே செய்வார்கள்...இது உனக்கும் தெரியும்... ...சரி...நடந்தது...போகட்டும்..நான் இப்போ சொல்வதைக் கேட்டு அதற்கு நீ ஒத்துழைக்க வேண்டும்...சந்திரிகாவின் வாழ்க்கை நாசமாய்போக நான் ஒரு போதும் அனுமதியேன்...அவளுக்காகத்தான் நான் இந்த முடிவுக்கு வந்தேன்...நீ மட்டும் இதற்கு இணங்க மறுத்தாய்...எந்த நிமிஷமும் உன்னைக்கொன்றுபோட்டுநான் ஹொலண்டுக்கு போய் விடுவேன்... என்ன கேட்பாயா?'' என ருத்ரா அதட்டியபோது சபேசன் பேசமுடியாமல் விக்கித்துப் போனுன்.

அவனுடைய கையை ஆதரவாகப் பிடித்துக் கொண்ட சந்திரிகா "டாக்டர் மிகவும் பயந்துபோயிருக்கிறுர்... ஆனுல் நாம் என்ன சொன்னுலும் அவர் கேட்பார்... இல்லையா டாக்டர்!'' என அவள் சபேசனைப் பார்த்தபோது சபேசன் ஆமென்றும் சொல்ல முடியாமல் இல்லையென்றும் சொல்ல முடியாது தவித்தான்.

அதைக் கவனித்த ருத்ரா ' சரி... உன்னுடைய சொல்லுக்காகத்தான் நான இவனுடைய உயிரை விட்டு வைக்கின்றேன்...நீதான் நான் சொன்னபடி அவன் நடக்க வழிசெய்ய வேண்டும்!'' என அதட்டிவிட்டுத் தனது திட்டத்தை விபரித்தபோது சபேசனுக்கு சகல உணர்வுகளும் ஒடுங்கிப் போயின.

□

# 10

யாழ்ப்பாணத்தில் சங்கரப் பிள்ளையரின் பங்களாவில் வாசுகியின் அறையிலே அவளுடன் இருந்த அவளுடைய நண்பி ராஜி இந்தச் சில நாட்களுக்குள் வாசுகியின் முகத்தில் ஏறிவிட்ட அழகையும் செழுமையையும் ஆசையுடன் பார்த்துக் கொண்டாள்.

வாசுகி பெருமையுடன் காட்டிய விவாகப்பதிவுப் போட்டோக்களில் காணப்பட்ட டாக்டர் சபேசன் எல்லா வகையிலும் வாசுகிக்குப் பொருத்தமானவன் என ராஜி பூரிப்படைந்திருந்தாள்.

சினேகிதிகள் இருவரும் கேலியுஞ் சிரிப்புமாக எத்தனையோ விஷயங்களைப் பேசிக் கொண்டிருந்த அந்தச் சமயத்தில் தான் வாசுகி சற்றுத் தயங்கியவளாய் தன் தோழியிடம் "ராஜி! என் மனதுக்குள் ஒரு விஷயம் என்னைச் சஞ்சலப் படுத்திக் கொண்டேயிருக்கிறது... அன்றிரவு அவர் என்னைத் தொட்டு அணைத்தபோது நான் என்னையே மறந்து அவருக்கு என்னை முழுமையாகவே கொடுத்து விட்டேன்...கழுத்தில் தாலிகட்ட முதல் இப்படி நடந்து கொண்டேனே... என ஒரு குற்றவுணர்வு என்னைச் சதா உறுத்திக் கொண்டே இருக்கிறது.. நான் நடந்து கொண்டது தப்பா ராஜி?" எனக்கண்கலங்கி வாசுகி கேட்ட போது ராஜி ஒரு கணம் மலைத்துப் போனாள்.

பின்பு வாசுகியை அணைத்தபடி "அழாதே வாசுகி!... நீ செய்தது தப்புத்தான்... எமது முன்னோர் எத்தனையோ நூறாண்டு அனுபவங்களின் பின்னரே எமக்கெனச் சில ஒழுங்கு முறைகளை வகுத்திருக்கிறார்கள்... அவைகளில் எந்தக் காலத்துக்கும் பொருந்தக் கூடியது நமது கற்பு நெறியும் ஒன்று... சட்டபூர்வமாக நீங்கள் கணவன் மனைவி தான்...ஆனால் சடங்குகள் முடியும்வரையில் சற்றுக் கட்டுப் பாட்டோடு இருந்திருந்தால் உன் திருமணமும் முதலிரவும்

மேலும் இனிமையாக இருந்திருக்கும் அல்லவா!..அவருக்குத் தான் அவசரப் புத்தியென்றால் உனக்கென்னடி வந்தது?" எனக் கேட்ட ராஜியிடம் "நான் மறுத்தால் ஒருவேளை அவர் மனதில் என்மீது ஒரு வெறுப்பு ஏற்பட்டுவிடும்..' முதற்கோணல் முற்றுங் கோணலாகிப் போகலாம் என்ற பயத்தினால்தான் நான் பேசாமலே இருந்துவிட்டேன்!" எனக் குழந்தைபோலக் கூறினாள் வாசுகி.

அவளையும் அவளுடைய குழந்தைத்தனத்தையும் பார்க்கையில் ராஜிக்குச் சிரிப்புத்தான் வந்தது. "அடி! கதை விடாதே!.., நீயாவது பேசாமல் இருப்பதாவது... இனியென்ன?... இப்போ ஒன்றும் குடிமுழுகிப் போய்விடவில்லையே! .. நடந்ததைக் கனவாக மறந்துவிட்டு சந்தோஷமாக இரேன்!" என ராஜி கேலி செய்த போது வாசுகியும் சந்தோஷமாக அவளுடைய சிரிப்பில் பங்கு கொண்டாள்.

"அதுசரி... மாப்பிள்ளை போனதுமே போன்கால் போட்டுப் பேசியிருப்பாரே! இந்த வீக்கென்டுக்கு வருவாராடி?" என ராஜி வாசுகியைச் சீண்டியபோது வாசுகியின் முகம் வாடிப் போய் விட்டது.

"அவர் எங்கேடி என்னை நினைத்தார்... நான்தான் நேற்றுக் கால் எடுத்தேன்... நீதிமன்றத்துக்கு போயிருக்கிறார் என்று தகவல் கிடைத்தது. இன்று பகல் முழுவதும் அவருடைய காலை எதிர்பார்த்தேன்... கிடைக்கவில்லை... மாலையில் நானே மறுபடியும் எடுத்தேன்... அவரைப் பிடிக்கவே முடியவில்லை... பெரிய டாக்டர் வேலை!...மனைவிக்குப் போன் பண்ணக்கூட நேரமில்லாமல்!" என்று சிணுங்கிய வாசுகியைத் தேற்றினாள் ராஜி "நிச்சயம் நாளை அவர் உனக்குப் போன் போடுவார்...எனக்கு நேரமாகிவிட்டது... அம்மா கவலைப்படுவா... கல்யாணமானதும் என்னை மறந்துவிடாமல் காரையனுப்பி என்னை அழைத்துவரச் செய்ததற்கு மீண்டும் நன்றி வாசுகி... நான் போய் வருகின்றேன்" என விடை பெற்றுக் கொண்டு போனாள் ராஜி.

அவளை வழியனுப்பிவிட்டு இரவு ஏதோ சாப்பிட்டேன் எனப் பேர் பண்ணிக்கொண்டு மேலே தன்னுடைய

அறைக்குப் படுக்க வந்த வாசுகிக்குச் சபேசனை நினைக்கை யில் கோபம் கோபமாக வந்தது.

ஆனால் தலையணைக்குக் கீழேயிருந்த அவனுடைய போட்டோவை எடுத்து அவனுடைய அழகிய முகத்தைப் பார்த்ததும்ம அவள் கோபமெல்லாம் தணிந்துபோக... ஆசை வந்து மெல்ல அண்டிக்கொள்ள அடுத்தமுறை வரும் போது உங்களோடு பேசவே மாட்டேன் போங்கள்!'' எனச் செல்லமாகக் கோபித்துக் கொண்டு படுத்துக் கொண்டாள் வாசுகி.

□

# 11

அன்று வெள்ளிக்கிழமை. அதிகாலையிலேயே எழுந்து கொண்ட மீனாட்சி குளித்து முழுகி கோவிலுக்குச் சென்று குலதெய்வம் முருகனுக்கு நேர்த்திக்கடன் செலுத்திவிட்டு நிம்மதியாக வீட்டுக்கு வந்தபோது தபாற்காரர் கடித மொன்றைக் கொடுத்துவிட்டு சைக்கிளைத் தள்ளிக்கொண்டு போனார்.

கவரில் மகனுடைய கையெழுத்தைக் கண்டதும். அவனையே நேரில் கண்டதுபோல மகிழ்ந்தவளாய் கடிதத்தை எடுத்துக் கண்களை இடுக்கிக்கொண்டு வாசிக்க ஆரம்பித்தாள் மீனாட்சி.

''என் அன்பான அம்மாவுக்கு!

இந்தக் கடிதத்தை நான் மிகவும் அவசரமாக எழுது கின்றேன். நான் இன்று வெளிநாட்டுக்குப் போகின்றேன். நீங்கள் எனக்கு மணமுடித்து வைத்த பெண் எனக்குப் பிடிக்கவில்லை. நாங்கள் எண்ணியதுபோல் அந்தப் பெண் மணவாழ்க்கைக்குப் புதியவளல்ல. இந்த விஷயத்தை என்னால் சீரணிக்க முடியவில்லை. நீங்கள் அவசரப் பட்ட தால் என் வாழ்க்கையே இன்று அஸ்தமித்து விட்டது,

நான் இந்த நினைவோடு நிம்மதியாக அவளுடன் வாழ்க்கை நடத்த முடியாது. இந்த விஷயத்தை அவர்களிடம் கூறி விவாகரத்துக் கேட்கவும் முடியாது. எனவே நாட்டை விட்டுப் போவதுதான் எனக்கு இப்போ செய்யக்கூடிய ஒன்றாகத் தெரிகிறது.

நீங்கள் இதையிட்டு எவருக்கும் எதுவும் கூறவேண்டாம். நான் போகும் நாட்டில் எனக்கு வேலை கிடைத்ததும் நானே உங்களை அழைத்துக் கொள்கிறேன். அது வரை கலங்காமல் பொறுமையாக இருக்க வேண்டிக்கொள்கிறேன். அன்பு மகன் சபேசன்.

தலையில் இடி விழுந்தது போல அப்படியே வாசற்படியில் உடைந்து உட்கார்ந்துவிட்டாள் மீனாட்சி,

இதயத்தை யாரோ இரும்புக் குறட்டினால் நசிப்பது போல வேதனை அவளைக் கொன்றது. தண்ணீர் குடிக்க வேண்டும் போலிருந்தது. எழுந்து சுவரைப் பிடித்துக் கொண்டே ஒருவாறு உள்ளே சென்று இரண்டு வாய் தண்ணீர் பருகிவிட்டுத் தட்டுத் தடுமாறித் தன்னுடைய பாயிலே வந்து படுத்துக் கொண்டாள்.

சபேசனுடைய கடிதம் அவளுடைய கைகளுக்குள் கசங்கியபடி இருந்தது.

முகத்திலே யாரோ பச்சைத் தண்ணீரை அடிப்பதை உணர்ந்து கண்ணைத் திறந்த மீனாட்சி தன்னருகிலே வாசுகியின் அக்கா கௌரியும் அவளுடைய கணவனைப் போன்றிருந்த ஒருவரையும் கண்டு திகைத்துப் போனாள்.

''அம்மா!...என்ன நடந்தது?'' என ஆதரவுடன் மீனாட்சியின் முகத்திலிருந்த தண்ணீரை தன்னுடைய சேலைத்தலைப்பால் துடைக்க கௌரியைப் பார்க்கையில் மீனாட்சிக்குக் கண்ணில் கரகரவென்று நீர் வழிந்தது.

ஸ்ரீதரன் ''கௌரி! நீ உள்ளே போய் ஏதாவது சூடாக காப்பியோ, டீயோ எடுத்துவா...சீக்கிரம்!...நான் அம்மாவோடு பக்கத்திலே இருக்கிறேன்'' எனப் பாயிலே அமர்ந்து மீனாட்சியின் கையை ஆதரவாகப் பிடித்துக் கொண்டான்

அவனையே சற்று நேரம் கண்கொட்டாமல் பார்த்த மீனாட்சி அவனுடைய கரத்தை இழுத்து "தம்பி!...வாசுகி தெய்வம்!...நீதான் எப்படியாவது அவளைத் தேடிப் பிடித்து...அவளிடம் ஒப்படைத்து விடு!" எனக்கூறி தன் கைக்குள்ளிருந்த கடிதத்தை ஸ்ரீதரனிடம் கொடுத்தாள் மீனாட்சி.

மீனாட்சியின் வார்த்தைகளினால் திகைப்படைந்த ஸ்ரீதரன் சட்டென்று கடிதத்தைப் பிரித்து அதன் வாசகங்களைப் படித்து முடித்தபோது மீனாட்சியின் விக்கல் ஒலி கேட்கவே நிமிர்ந்து பார்த்தான்.

மீனாட்சியின் விழிகள் ஒளியிழந்தவையாய் மேலே செருகிக் கொண்டிருந்தன.

சபேசனுடைய கடிதத்தைச் சட்டெனப் பையில் வைத்துவிட்டு அவளை அப்படியே தூக்கித் தன்மார்போடு அணைத்துக்கொண்டு அவசரமாகக் கௌரியைக் கூப்பிட்டான் ஸ்ரீதரன்,

கௌரி கலந்தெடுத்து வந்த காப்பியைக் குடிக்காமலே மீனாட்சியின் கதை முடிந்து விட்டிருந்தது.

□

## 12

இவ்வளவு நாட்களும் மங்கலமும் மகிழ்ச்சியும் நிறைந்திருந்த சங்கரப்பிள்ளையின் பங்களா களையிழந்துபொலிவு கெட்டுப் போயிற்று.

கன்னத்தில் கையை வைத்துக்கொண்டு தனது அறையில் உட்கார்ந்திருந்த சங்கரப்பிள்ளையார் இந்த இரண்டு மூன்று நாட்களுக்குள் ஆளே மாறிப்போய் விட்டார். அவ்வளவுக்கு அசம்பாவிதங்கள் நிகழ்ந்திருந்தன.

சபேசனுடைய தாயார் இறந்ததுமே ஸ்ரீதரன் சபேசனை அழைத்து வரக் காரில் கண்டிக்குப் போயிருந்தான் சங்கரப்பிள்ளையர் குடும்பம் முழுவதுமே மீனாட்சியின் வீட்டுக்குப் போயிருந்தது. சங்கரப்பிள்ளையர் அந்த அம்மையாரின் இறுதிச் சடங்குகளைச் சிறப்பாக நடத்து

வதற்குரிய சகல ஒழுங்குகளையும் தானே நேரில் நின்று கவனித்துக்கொண்டார்.

ஸ்ரீதரனுடன் சபேசன் எந்த நேரமும் வந்து விடலாம், என யாவரும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். வாசுகி மாமியாரின் உடலின் பக்கத்திலேயே கண்ணீரும் கம்பலையுமாக உட்கார்ந்திருந்தாள். தான் மருமகளாக அந்த வீட்டுக்கு வர முன்பே இப்படி நடந்து விட்டதே! இது என்ன அபசகுனமோ! இதுவரை தன் தாய் ஒருத்தியே உறவென்றிருந்த சபேசன மனதுதான் எவ்வளவு வேதனைப் படும் என்றெல்லாம் அந்தப் பேதைப் பெண் எண்ணிக் கலங்கிக் கொண்டிருந்தாள்.

இரவு பன்னிரண்டு மணிபோல ஸ்ரீதரன் மட்டும் களைத்துப் போனவனாய்த் தனியேதிரும்பியபோது யாவரும் சபேசனைக் காணவில்லையே எனத் திகைத்தனர். ஸ்ரீதரன் கூறிய செய்தி அவர்கள் யாவருக்கும் பேரிடியைக் கொடுத்தது.

டாக்டர் சபேசனை இரண்டு நாட்களாகவே காண வில்லையாம். எவ்வளவோ தேடியும் எங்கெங்கோ கேட்டுப் பார்த்தும் அவனைக் கண்டுபிடிக்கவே முடியவில்லையாம் என்ற செய்தியைக் கேட்டதுமே வாசுகி மூர்ச்சித்துப் போனாள்.

மீனாட்சியின் மறைவை விட சபேசன் காணாமற் போனதன் தாக்கமும் துக்கமுமே தாங்க முடியாம லிருந்தது.

மீனாட்சியின் உடலைத் தகனஞ் செய்து விட்டு மறுபடியும் ஸ்ரீதரன் சிவசுந்தரத்தையும் கூட்டிக்கொண்டு சபேசனைத் தேடுவதற்காக் கண்டிக்குப் போயிருந்தான்.

வாசுகியின் கோலத்தையே கண்கொண்டு பார்க்க முடியவில்லை. புகைபடித்த ஓவியம் போன்று அவளுடைய

அழகு பொலிவிழந்து அவள் நடைப்பிணமாகவே மாறி விட்டிருந்தாள்.

எப்படியாவது அத்தான் ஸ்ரீதரன் சபேசனைக் கண்டு பிடித்துக் கொண்டுவந்து விடுவார் என்ற நம்பிக்கை அவளுடைய உள்ளத்தில் இருந்தாலும் ஒவ்வோர் சமயம் ஒவ்வொன்றை நினைத்துக் கலங்கிக் கொண்டிருந்தாள்.

இம்முறை கண்டிக்குச் சென்றவர்கள் திரும்ப நான்கு நாட்கள் பிடித்தன. சபேசனின்றித் தனியே மனமொடிந்தவர்களாய் அவர்கள் கொண்டு வந்த செய்தி வாசுகியின் இதயத்தைப் பேரிடியாகத் தாக்கியபோதும் சபேசன் இன்னமும் எங்கோ உயிரோடுதான் இருக்கிறுன் என்ற தகவல் அவளுக்கு ஓரளவு ஆறுதலைக் கொடுக்கவே செய்தது.

கிடைத்த விபரங்களின்படி கண்டி வைத்தியசாலையில் கடமைபுரியும் ஒரு சிங்கள நர்ஸும் அவளுடைய அண்ணனும் கடைசியாகக் கண்டியில் சபேனுடன் காணப்பட்டதாகவும், கொழும்பில் அந்த நர்ஸின் ஊரில் விசாரித்தபோது அவர்கள் மூவரும் மூன்று நாட்களுக்கு முன்னர் வெளிநாடு சென்றுவிட்டதாகவும் தெரிந்தது. அத்துடன் அந்தச் சிங்களப் பெண்ணுக்கும் சபேசனுக்கும் ஏற்கெனவே தொடர்பிருந்ததாகவும், சிலர் கூறியதாக ஸ்ரீதரன் சொன்னபோது வாசுகியின் மனதில் பெரும் பூகம்பமே ஏற்பட்டுவிட்டது.

மேற்கொண்டு எதையும் கேட்கத் துணியாதவளாயும் கேட்க முடியாதவளாயும் சிறகொடிந்த பறவைபோல அவள் தன்னுடைய அறையிலே முடங்கிக் கொண்டாள். கௌரியும் ஸ்ரீதரனும் ,அண்ணன்மாரும் அண்ணிமாரும் வாசுகியைத் எப்படித் தேற்றுவதெனத் தவித்துப் போனூர்கள்.

சனிஞாயிறு விடுமுறையில் வாசுகியை பார்ப்பதற்காக வந்த ராஜிக்கு வாசுகி நடந்தவற்றைக் கண்ணீருடன் சொன்னபோது பதைத்துப் போனாள் ராஜி.

தன் வாழ்க்கையில் இன்னொருவருக்கு மனத்தால்கூட தீங்கு நினைக்காத வாசுகிக்கு இப்படியொரு நிலையா என்று ஏங்கிய ராஜியினால் அவளைத் தேற்றும் வகையில் என்ன சொல்வதென்றே தோன்றவில்லை.

நீண்ட நேரமாக அவளுடைய கையைப் பிடித்துக் கொண்டு அவளுடன் இருந்தவள் "இதோ பார் வாசுகி! உன் கணவனை நான் நேரில் பார்த்ததில்லை. ஆனால் இன்னொரு பெண்ணுடன் நாட்டைவிட்டே ஓடிப்போகும் அளவுக்கு அவள்மேல் பிரியம் வைத்திருப்பவன் எப்படி மனம் வந்து அன்று முதல்நாளே உன்னைத் தன் ஆசைக்கு உடந்தையாக்கிக் கொண்டான்?

பெண்களென்றாலே வெறும் கிள்ளுக்கீரை என்ற நினைப்புத்தானடி! இதற்கெல்லாம் மனமுடைந்து அழுவதில் பிரயோசனம் ஏதுமில்லை வாசுகி! உன்னுடைய நிலையில் நான் இருந்தால், ஒன்றில் அவன் இந்த உலகத்தின் எந்த மூலையிலிருந்தாலும் எப்படியாவது அவனைத் தேடிக் கண்டு பிடித்து...எனக்கு ஏன்தான் இப்படியொரு துரோகத்தைச் செய்தாய்?... உனக்கு நான் என்ன தீங்கு செய்தேன்?... என்று நாலு வார்த்தை நாக்கைப் பிடுங்கிக்கொள்வது போலக் கேட்பதுதான் என்னுடைய இலட்சியமாகவிருக்கும்...அல்லது அவனை என் வாழ்க்கையில் நிகழ்ந்த ஒரு கெட்ட கனவாக எண்ணி மறந்துவிடுவேன்...என்னைப் பார் வாசுகி!... நீ படித்தவள்...உனக்கு உதவி செய்ய அக்கா அத்தான் அண்ணன்மார் எல்லோரும் உண்டு! எல்லாவற்றுக்கும் மேலாகப் பணமுமிருக்கிறது...நீ எதற்காகக் கண்ணீர் விட்டுக் கொஞ்சம் கொஞ்சமாகச் சாகவேண்டும்? அவன் எவளோடுதான் ஓடினாலும் அவன் உன் கணவன்... அவனைத் தேடி இழுத்துவந்து திருத்தப்பார். இல்லையேல்

அவனுடைய நினைவுக்கே தலைமுழுகிவிடு!'' என ராஜி கண்ணை மூடிக்கொண்டு வந்த ஆத்திரத்தில் பொரிந்து தள்ளினுள்.

ராஜீயின் கோபத்தை வாசுகியினுல் புரிந்து கொள்ள முடிந்தது. ஆயினும் இப்போதிருந்த மனநிலையில் அவளால் அழுவதற்கு முடிந்ததேயொழிய அமைதியாக சிந்தித்து ஒரு முடிவுக்கு வர முடியவில்லை. அவளுடைய இளம் உள்ளம் அத்தனை பக்குவப்பட்டிருக்கவில்லை என்பதை உணர்ந்து கொண்ட ராஜியும் ''நான் கோபத்தில் வாய்க்கு வந்தபடியெல்லாம் கூறிவிட்டேன்!...காலம் எந்தத் துன்பத்தையும் ஆற்றக்கூடிய சிறந்த மருந்து...உன்னுடைய நல்ல மனதுக்கு நிச்சயம் நல்லதொரு முடிவு கிடைக்கும்...மனதை மட்டும் தளர விட்டு விடாதே! நான் அடிக்கடி உன்னை வந்து பார்க்கின்றேன்!'' என விடைபெற்றுக் கொண்டு கனத்த உள்ளத்தோடு வீட்டுக்குச் சென்றுள் ராஜீ.

□

## 13

ஸ்ரீதரன் கொழும்புக்குச் செல்வதற்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தான். பாரிஸில் தனக்கிருந்த வேலையை ஒரு வாரத்துக்கு முன்னதாகவே அவன் முடித்து நாடு திரும்பியிருந்த படியினுல் இவ்வளவு நாட்களும் சபேசனைத் தேடும் அலுவலில் ஈடுபட முடிந்தது.

வாசுகியின் நிலைமை காரணமாக கௌரியும் குழந்தைகளும் ஸ்ரீதரனுடன் கொழும்புக்குப் போகவில்லை.

ஸ்ரீதரன் கௌரியை மணம் புரிந்து அந்த வீட்டுக்கு வந்தபோது வாசுகி சிறுமியாக இருந்தாள். தாயை இழந்திருந்த அவளுக்கு சகலதுமாக இருந்தது கௌரிதான்.

ஸ்ரீதரனும் வாசுகியைத் தனது மகள் போலவே மிகவும் பாசத்துடன் நடத்தி வந்தான். அவர்களுக்கு இரண்டு குழந்தைகள் பிறந்துங்கூட அவர்கள் அவள்மேல் கொண்டிருந்த பாசம் கொஞ்சமும் குறையவில்லை.

இப்போ வாசுகியின் வாழ்வில் இப்படியானதொரு துர்பாக்கியம் ஏற்பட்டு விட்டதனால் அவர்கள் இருவருமே மனமொடிந்து போயிருந்தனர்.

அன்று மீனாட்சியிடமிருந்து தான் பெற்ற சபேசனுடைய கடிதத்தையிட்டு ஸ்ரீதரன் தன் மனைவிகௌரிக்குக் கூட எதுவும் சொல்லவில்லை. வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுவதுபோல நொந்து போயிருக்கும் நல்ல உள்ளங்களை அவன் அனாவசியமாக வருத்த விரும்பவில்லை. இவற்றுக்கெல்லாம் காரணமாக இருந்த சபேசனை நினைக்கவே ஸ்ரீதரனுக்குத் தேகமெல்லாம் எரிந்தது.

எப்படித்தான் அவனால் வாசுகியைப் பற்றி அப்படியொரு பழியைக் கற்பிக்க முடிந்தது? இதையிட்டு அவனால் கௌரியையும் எதுவும் கேட்க முடியாமல் போயிற்று. ஆனால் விவாகப்பதிவு நடந்த இரவு சபேசன் வாசுகியின் அறையில் நீண்ட நேரம் அவளுடன் இருந்ததையும் கௌரி சொன்னவற்றைக் கொண்டு ஊகிக்க முடிந்தது.

சபேசனுடைய கடிதத்தை முதலில் சுக்கு நூறாகக் கிழித்து வீசிவிட ஸ்ரீதரன் நினைத்தாலும் ஒருசமயம் இது ஏதாவது விஷயத்துக்குத் தேவைப்படக்கூடும் என்ற எண்ணத்தில் அதைத்தன்வசம் பத்திரப்படுத்திக் கொண்டான் ஸ்ரீதரன்.

கோவிலுக்குச் சென்றிருந்த சங்கரப்பிள்ளையர் வந்தவுடன் அவரிடம் சொல்லிக் கொண்டு புறப்படுவதற்காக பங்களாவின் முன்பக்கத்தில் யாவருடனும் பேசிக் கொண்டிருந்தான்.

அந்நேரம் யாரோ இருவர் கைத்தாங்கலாக சங்கரப் பிள்ளையவரை அழைத்துக் கொண்டு வருவதைக் கண்டு அவர்கள் பதறிப்போனார்கள்.

அவருக்கு ஏற்கெனவே இருதய அழுத்த நோய் இலேசாக இருந்தது. வாசுகியின் வாழ்க்கை ஆரம்பிக்கும் முன்னரே கருகிப்போனதை அவருடைய பலவீனமான இதயத்தால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

யாவருமாக அவரைத் தாங்கிச் சென்று அவருடைய படுக்கையில் கிடத்தியபோது வாசுகி துக்கத்தை அடக்க முடியாமல் கோவென்று கதறத் தொடங்கிவிட்டாள். ஆரோக்கியமாய் இருந்த தந்தையின் உடல் இப்போ இடது பக்கம் இயங்காமல் துவண்டு போனதைக் கண்டகௌரியும் மனம் தாங்கமுடியாமல் விசித்து விசித்து அழவாரம்பித்து விட்டாள்.

ஸ்ரீதரன் சட்டெனக் காரை எடுத்துக் கொண்டுகுடும்ப டாக்டரை அழைத்துவர விரைந்தான்.

படுக்கையிலே கிடந்த சங்கரப்பிள்ளையர் தன் அருகில் இருபக்கமும் இருந்த வாசுகியையும் கௌரியையும் பார்த்து எதுவோ சொல்ல முயன்றபோதும் அவருடைய வாயுங்கூட ஒரு பக்கம் இழுத்துக் கொண்டதால் அவரால் பேசவே முடியவில்லை. சற்று நேரம் அப்படியே கிடந்தவர் தன் வலக்கரத்தை மெல்ல உயர்த்தி பக்கத்திலிருந்த தனது மேசையைக் காட்டியபோது மகன் சிவசுந்தரம் அவர் அந்த மேசையிலிருந்த எதையோ எடுக்கும்படி சைகை காட்டு கின்றார் என்பதை புரிந்தவனாய் மேசையருகே சென்று அவர் தன்முக்கியமான பொருட்களை வைக்கும் டிராயரை இழுத் தான்.

அதற்குள் காணப்பட்ட ஒருசிறிய பெட்டியை அவன் எடுத்தபோது இங்கே அதை என்னிடம் கொண்டுவா என்பதுபோல் சைகை காட்டினார் சங்கரப்பிள்ளையர்.

அவரிடம் அதைக் கொடுத்தபோது அவர் அதை வாங்கித் தன்னருகிலே இருநது அழுது கொண்டிருந்த வாசுகியின் கையில் கொடுத்துவிட்டு அவளை ஆசீர்வதிப்பது போல் கையை உயர்த்தினார். அவருடைய கண்களிலிருந்து கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது.

நடுங்கும் கைகளினால் வாசுகி அந்தச் சிறியபெட்டியைத் திறந்து பார்த்தாள். அதற்குள் பக்குவமாக ஒரு தாலி வைக்கப்பட்டிருந்தது. அதைப் பார்த்ததுமே அது தங்கள் தாயாருடைய தாலிதான் என்பதைப் பிள்ளைகள் புரிந்து கொண்டார்கள்.

வாசுகியின் வாழ்வு மறுபடியும் மலரவேண்டும். அவள் கழுத்தில் தாலியேறி அவள் சகல மங்கலங்களுடன் வாழ ஆசிர்வதிப்பதுபோல் அசைந்த சங்கரப்பிள்ளையரின் வலது கரம் அதன்பின் சோர்ந்து படுக்கையில் விழுந்தபோது அவருடைய உயிர் உடலைவிட்டுப் பிரிந்து போயிற்று.

டாக்டருடன் பங்களாவினுள் அப்போதுதான் பிரவேசித்துக் கொண்டிருந்த ஸ்ரீதரனுக்கு கோவென்ற அழுகுரல் கேட்டபோது யாவும் முடிந்து போயிற்று என்பதை உணர்ந்து கொண்டான்.

ஒரு தந்தையைப் போல் தன்மேல் பாசமும் மதிப்பும் வைத்திருந்தவர் போய்விட்டார் என்பதை நினைக்கையில் துக்கம் நெஞ்சை அடைத்தது ஸ்ரீதரனுக்கு. சில கணங்கள் அப்படியே விறைத்துப் போய் நின்றவன் பின் மனதை சம நிலைப் படுத்திக் கொண்டு வீட்டுக்கு மூத்தவன் என்ற வகையில் யாவற்றையும் முன்னின்று நிறைவேற்றும் அலுவல்களில் மும்முரமாக இறங்கினான்.

□

# 14

அடிக்குமேல் அடிவிழந்ததுபோல் நிகழ்ந்த அவல நிகழ்ச்சிகளினுல் அந்தக் குடும்பத்தின் அங்கத்தினர் யாவருமே அமைதியிழந்து போயினர்.

சங்கரப்பிள்ளையரின் இறுதிக் காரியங்கள் யாவும் நிறைவேறி மூன்று நாட்கள் ஆனபோதும் அவர்கள் யாவரும் சுரத்தின்றி ஆங்காங்கு செயலிழந்து உட்கார்ந் திருந்தனர். ஸ்ரீதரன் ஒருவனே ஆகவேண்டியவற்றைக் கவனித்து இயங்கிக் கொண்டிருந்தான்.

அன்று மாலையில் ராஜி மறுபடியும் வாசுகியிடத்துக்கு வந்திருந்தாள். மரணச் செய்தி கேட்டதுமே ஓடோடி வந்த அவள் வாசுகியுடன் இரண்டு நாட்கள் கூடவே இருந்துவிட்டு நேற்றுத்தான் தனது வீட்டிற்குச் சென்றிருந் தாள்.

அவளின் வருகை ஸ்ரீதரனுக்கு ஆறுதலளிக்கவே "வா ராஜி! உன்னைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்... வாசுகியை நினைக்க எனக்கு மிகவும் கவலையாக இருக்கிறது. இன்னமும் அழுது கொண்டிருக்கும் கௌரியால் வாசுகிக்கு எப்படி ஆறுபில் சொல்ல முடியும்?... அவளாவது அழுது கண்ணீரைக் கொட்டித் தன் கவலைகளைக் கரைத்துக் கொள்கிருள். ஆனுல் வாசுகி...அன்று மாமா இறந்தவுடன் வாய்விட்டு அழுதவள்தான்! பின்பு அவள் கண்ணீர்விட்டு அழுததை நான் காணவில்லை. துக்கம் எல்லாவற்றையும் நெஞ்சினுள் தேக்கி வைத்திருப்பது அவளுக்கு கூடாது ராஜி!..இந்த நிலையில் உன்னுல்தான் அவளுடன்பேசி அவள் கவலைகளில் இலகுவாகப் பங்கு கொள்ள முடியும்!" என்று சொன்னுன்.

ராஜிகூட இந்த விஷயத்தை அவதானித்திருந்தாள். சின்ன விஷயங்களுக்கெல்லாம் உணர்ச்சி வசப்பட்டு சிரிக்கவும் அழவும் செய்யும் வாசுகி தன் அன்புத் தந்தை

பிரிந்து போனதையிட்டு அழாமல் ஏன்தான் கல்லாய்ப் போனுள் என்ற வினு ஸ்ரீதரன் இப்போ மறுபடியும் அதை யிட்டுப் பேசிய போது மறுபடியும் அவள் நெஞ்சில் உதித்தது.

''சரி அண்ணு! நான் போய் வாசுகியுடன் பேசு கின்றேன்!'' என்று அவனிடம் கூறிவிட்டுப் படியேறி வாசுகியின் அறைக்குச் சென்ருள் ராஜி.

அங்கு கட்டிலின்மேல் கால்களை மடித்து வைத்துக் கொண்டு அமர்ந்து எதிரில் இருந்த சுவரையே வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்த வாசுகியைக் கண்டபோது ராஜிக்கு கண்கள் கலங்கிக் கொண்டன.

அவளருகிலே கட்டிலிலே அமர்ந்து கொண்டு ''என்ன வாசுகி!... இப்படிப் பிரமை பிடித்தவள் போலிருக்கிருயே!'' என அக்சறையுடன் அவள் கேட்டபோது தன் மடியில் இருந்த ஒரு சிறிய பெட்டியைத் திறந்து ராஜிக்குக் காட்டி ஞள் வாசுகி. அதனுள் இருந்த தங்கத் தாலியைக் கண்ட ராஜி இது என்ன என்பது போலப் பார்த்தாள்.

''ராஜி! அப்பா இறக்கும் தறுவாயில் அம்மாவின் இந்தத் தாலியை என்னிடத்தில் தந்து என்னை ஆசீர்வதிப் பது போலவும் சைகை செய்தார்... எதற்காக இந்தத் தாலியை என்னிடத்தில் தந்தார்?...அந்த சமயம் எதை என்னிடம் சொல்ல விரும்பினுர் என்று தெரியாமல் குழம்பிக் கொண்டிருக்கிறேன்!'' என அமைதியாகக் கூறிய வாசுகியின் கையிலிருந்த தாலியை வாங்கிப் பார்த்தாள் ராஜி.

அந்த மங்கலப் பொருளின் அழகும் கனதியும் ராஜிக்கு ஒரு புது எண்ணத்தை ஏற்படுத்தியது. அந்த எண்ணம் ஏற்படுத்திய பரபரப்பில் அவள் பேச ஆரம்பித்தாள்.

''வாசுகி! உன் அப்பா மிகவும் தீர்க்கதரிசனம் உள்ளவரடி! உன்னுடைய வாழ்வு மறுபடியும் மலர

வேண்டும்... உன்னுடைய கழுத்தைத் தாலி அலங்கரிக்க நீ ஒரு மனைவியாக இந்த வீட்டில் மறுபடியும் மகிழ்ச்சியுடன் வளையவரவேண்டும்.. நடந்ததையெல்லாம் கனவாக மறந்துவிட்டு காலப்போக்கில் உனக்கொரு நல்லகணவனைத் தேடிக்கொள்ள வேண்டும் என்பதே அவருடைய கடைசி ஆசையாக இருந்திருக்கின்றது... அதற்காகத் தான் அவர் இந்தத் தாலியை உனக்குத் தந்திருக்கின்றார்!'' என வேகமாக ராஜி கூறிமுடித்த போது வாசுகியின் முகத்தில் ஒரு வேதனைப் புன்னகை படர்ந்தது.

''போடி பைத்தியம்! உனக்கு ஏன் தான் இப்படிக் கோணலாய்ப் புத்தி போகின்றதோ! அப்பாவின் எண்ணமும் விருப்பமும் என்ன வென்று தெரியுமா உனக்கு? உன்னுடைய கணவர் உன்னுடைய கழுத்தில் தாலிகட்டித் திருமணம் முடிக்காவிடினும் சட்டப்படி அவர் உன்னுடைய கணவனே! எனவே உன் தாயின் தாலியை நீ அவன் ஞாபகமாக அணிந்துகொள்...அது அவர் எங்கிருந்தாலும் உன்னிடத்தில் அவரைக் கொண்டு வந்து சேர்த்து வைக்கும்...மனதைத் தளரவிடாதே! என்பது தான் அப்பாவின் கடைசி ஆசை ராஜி!'' என நிதானமாகப் பதில் சொன்ன வாசுகியை வியப்புடன் பார்த்தாள் ராஜி.

வேரோடி விளாத்தி காய்த்தாலும் தாய் வழி தப்பாது என்று சொல்வார்களே அது தான் இதுவா? இவள் தாயும் அவனைப் பெற்ற தாயும் வழிவழி போற்றி வந்த பண்புகளும் மரபுகளும் இவளுடைய இரத்தத்திலேயே ஊறிக் கலந்து நிற்கின்றனவா? எத்தனை நம்பிக்கை!... நிச்சயம் அவன் தன்னிடத்தில் வந்து சேர்வான் என்ற வலிமையான எதிர்பார்ப்பு... தாய்வழித் தாகம்!

வாசுகியின் கூற்றை ராஜியினால் மறுக்க முடியவில்லை... எனவே அவள் ''சிந்தித்துப்பார்க்கையில் நீசொல்வது தான் சரியாக எனக்குப் படுகின்றது... உன்னுடைய நல்ல உள்ளத்தின் நம்பிக்கை வீண்போகாதம்மா... கவலைப்பட்டு

உடலைக் கெடுத்துக் கொள்ளாதே!...'' என ராஜி தேற்றிய போது வாசுகிக்கு பெரும் ஆறுதலாக இருந்தது.

தோழியர் இருவரும் நம்பிக்கை மிக்கவர்களாக மேற் கொண்டு நடகக வேண்டியவை பற்றி ஆர்வத்தோடு பேசிக் கொண்டனர்.

அக்கா கௌரியும் கணவரும் கொழும்புக்குப் போகை யில் வாசுகியும் அவர்களுடன் போகவேண்டும்... அங்கு ஸ்ரீதரன் மூலம் டாக்டர் சபேசனைப் பற்றிய விபரங்களை அறிய முயற்சிக்க வேண்டும் என அவர்கள் போட்ட திட்டம் வாசுகியின் முகத்தில் சிறிதளவு ஒளியை ஏற்றி யிருந்தது.

அவர்கள் இருவருமாகக் கீழேவந்து மற்றவர்களிடம் இதையிட்டுக் கூறியபோது இந்த எண்ணம் ஏற்படுத்தும் ஒரு பற்றுக் கோடாவது வாசுகியின் இதயத்துக்கு ஒரு நம்பிக்கையை கொடுக்கவேண்டும் என்ற ஆதங்கத்துடன் அனைவரும் அந்தஎண்ணத்தை உற்சாகமாக வரவேற்றனர்.

## 15

காலம் யாருக்கும் காத்திராமல் விரைந்து ஓடிக் கொண்டிருந்தது. கொழும்பிலே கௌரியும் ஸ்ரீதரனும் காட்டிய பரிவிலும் பாசத்திலும் அவர்களுடைய குழந்தை களுடன் கொஞ்சி மகிழ்வதிலும், என்றோ ஒருநாள் வருவார் அவர் என்ற எதிர்பார்ப்பிலும், அந்த நம்பிக்கை நிச்சயம் நிறைவேறும் என அவளுடைய நெஞ்சை அடிக்கடி தொட்டுச் சொன்ன தாயின் தாலியும் வாசுகியை ஓரளவு மாற்றியிருந்தன.

அவளுடைய படிப்படியான இந்த மாற்றம் அவர் களுடைய குடும்பத்தில் மறுபடியும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியிருந்தது.

வாசுகியின் கோரிக்கைக்கு இணங்க ஸ்ரீதரன் தன்னுடைய செல்வாக்கையும் நண்பர்களையும் பயன்படுத்திச் சபேசனையிட்டு மேலும் தகவல்களைத் தேடிக் கொண்டிருந்தான். ஆனால் கிடைத்த தகவல்கள் யாவும் வாசுகியின் உள்ளத்தில் வளரும் நம்பிக்கையைத் தகர்க்கக் கூடியதாக இருந்ததால் அவன் யாரிடமும் அவற்றை வெளியிடவில்லை. இங்கு ஒருவரிடத்தில் சொல்லியிருக்கின்றேன்... அங்கு இன்னொரு நண்பனுக்குக் கடிதம் எழுதியிருக்கின்றேன் என்று வாசுகியும் கௌரியும் நம்பும் வகையில் அவர்களுக்குச் சாக்குச் சொல்லிக் கொண்டிருந்தான்.

இப்படியாக இரண்டு மாதங்கள் கழிந்த பின்னர்தான் வாசுகிக்குத் தன் உடலில் ஏற்பட்ட மாற்றம் புரிந்தது. காலையிலே வயிற்றைக் குமட்டிக் கொண்டு வந்த போது அவள் கௌரியிடம் வந்து விஷயத்தைக் கூறியபோது நாட்கள் கணக்குகள் பற்றி விசாரித்த கௌரி திகைத்துப் போனாள்.

கம்பனியிலிருந்து வந்த ஸ்ரீதரனிடம் கௌரி வாசுகி வயிற்றில் குழந்தை உண்டாகியிருப்பதைச் சொன்னபோது அவன் அதிர்ந்து போய் உட்கார்ந்துவிட்டான். இந்தச் சின்னப் பெண்ணின் வாழ்க்கையில் விளையாடும் இறைவனை அவனால் திட்டாமல் இருக்க முடியவில்லை.

வாசுகியை டாக்டரிடம் அழைத்துக் கொண்டு போய் பரிசோதித்த போது அவள் கர்ப்பிணியாகவிருப்பது உர்ஜிதமாய்ப் போயிற்று. கௌரிக்கும் ஸ்ரீதரனுக்கும் அந்தச் செய்தி வரவேற்கக்கூடிய ஒன்றாக இருக்காது விடினும் வாசுகி மட்டும் தனக்கு குழந்தை உண்டாகியிருப்பது நல்ல சகுனமே என்ற ரீதியில் சந்தோஷப்பட ஆரம்பித்திருந்தாள்.

அந்த ஒருநாள் உறவில் உதித்த இந்தக் குழந்தை நிச்சயம் அவரையும் என்னையும் இணைக்க வைக்க ஒரு

வலிமையான தொடர்பாக அமையும் என்ற நம்பிக்கை அவள் இளநெஞ்சில் ஆழமாக வேர் விட்டு வளரவாயிற்று.

கூடவே அந்தக் குழந்தை ஆணுகவிருக்குமோ பெண்ணு கவிருக்குமோ என்று எதிர்பார்ப்பு, ஆணுக இருந்தால் அவரைப் போலவே இருக்குமா என்ற ஆசை என்பன போன்ற இனிய கனவுகளில் ஆழ்ந்து போவதிலும் அடிக்கடி திருட்டுத்தனமாகத் தன் வயிற்றைத் தொட்டுப் பார்ப்பதிலும் தன்னை மறக்கப் பழகிக் கொண்டாள் வாசுகி.

அவளுடைய களங்கமற்ற முகத்தையும் அதில் பிரதி பலிக்கும் கணக்கற்ற ஆசைகளையும் பார்க்கையில் ஸ்ரீதரனுக்கு நெஞ்சை எதுவோ செய்யும். ஏதோ கடவுள் விட்ட வழிப்படி நடக்கட்டும் என்று மனதை ஆற்றிக் கொள்வான். கௌரியோ சந்தோஷப்படவும் முடியாமல் கவலைப் படவும் முடியாமல் இரண்டுங்கெட்ட நிலையில் தவித்துக் கொண்டாள்.

இப்படியே நாட்கள் கழிந்து கொண்டிருக்கையில் ஒரு நாள் மாலை ஸ்ரீதரனும் கௌரியும் வெளியே போயிருந்த சமயத்தில் வாசுகி மட்டும் வீட்டில் தனியே உட்கார்ந்து வானொலியில் பாடல்களைக் கேட்டுக் கொண்டிருந்தாள். குழந்தைகளும் அவர்களுடன் கூடவே போயிருந்ததால் வீடு மிகவும் அமைதியாக இருந்தது.

அந்த அமைதியையும் வானொலியில் வந்த இனிய பாடல்களையும் வாசுகி இரசித்துக் கொண்டிருந்த சமயத் தில் படபடவென இரைந்து கொண்டே காம்பவுண்டினுள் நுழைந்தது தந்திச் சேவகனின் சிவப்பு மோட்டார் சைக்கிள்.

ஸ்ரீதரனுக்கு லண்டனிலிருந்து வந்திருந்த தந்தியை வாசுகி கையெழுத்திட்டுப் பெற்றுக் கொண்ட போது அது ஏதும் முக்கியமான செய்தியைக் கொண்டதாக இருக்குமோ

என்ற ஐயம் வாசுகிக்கு ஏற்பட்டது. அவர்கள் போயிருந்த இடத்தின் போன் நம்பர் வாசுகிக்கும் தெரிந்திருக்கவே, தந்தியைப் பிரித்துப் படித்து அவசரமான செய்தியானல் அத்தானுக்குப் போன்பண்ணித் தெரிவிக்கலாம் என்ற எண்ணத்தில் வாசுகி தந்தியைப் பிரித்தாள்.

ஆங்கிலத்தில் இருந்த அந்தத் தந்தியின் வாசகங்கள் பின் வருமாறு இருந்தன.

'விசாரணைகள் பூரணமாக முடிந்துவிட்டன. டாக்டர் சபேசனும் நர்ஸ் சந்திரிகாவும் கணவன் மனைவியாக ஹாலந்தில் வாழ்கின்றனர். அவர்கள் இருவரும் ஒரு தனியார் வைத்தியசாலையில் வேலை பார்க்கின்றனர். சந்திரிகாவின் அண்ணன் விரும்பத்தக்க ஒரு பேர் வழியாகத் தெரியவில்லை. மேற்கொண்டு இந்த விஷயத்தில் ஈடுபடுவது ஆபத்தாகவும் முடியலாம். சபேசனை மீளப் பெறுவது மிகவும் கஷ்டம். பூரணமான தகவல்கள் பெறவே தாமதம் ஏற்பட்டது. மன்னிக்கவும். என் சொந்த அபிப்பிராயப்படி நீங்கள் சபேசனை மறந்துவிடுவதே மேல். விவேகானந்தன்.

முதலில் மேலோட்டமாகத் தந்தியைப் படித்த வாசுகி பின்னர் நடுங்கும் உள்ளத்தோடு ஒவ்வொரு வரியாக ஊன்றிக் கவனித்துப் படித்தாள்.

அந்தத் தந்தியின் ஒவ்வொரு சொல்லும் வாசகமும் வாசுகியின் இதயத்தில் ஈயத்தை உருக்கி ஊற்றியது போலத் தீய்த்தன.

தந்தியை அப்படியே ஹால் மேசை மேல் வைத்து விட்டு மேலே தன்னுடைய அறைக்குச் செல்ல மாடிப் படிகளில் ஏறினுள் வாசுகி.

இதுவரை அவள் தன் மனதில் கொஞ்சம் கொஞ்சமாக வளர்த்த எண்ணங்கள் நம்பிக்கைகள் யாவுமேஒரு கணத்தினுள் சுக்குநூருகிப் போய்விடவே அவள் இதயம் காய்ந்து

போய்விட்டது. மாடிப்படிக் கிராதியைப் பற்றிக் கொண்டு ஏறியவளுக்கு இலோசாகத் தலையைச் சுற்றுவது போல் இருந்தது. விழுந்து விடாமல் இருக்க கைப்பிடியை இறுகப் பற்றிக் கொண்டு தனது படுக்கைக்குச் சென்றுவிட வேண்டும் என்ற தவிப்பில் அவள் தன் காலை உயர்த்தி அடுத்த படியில் வைத்தபோது அவளுக்குக் கண்கள் இருண்டு நினைவு தவறிப் போயிற்று.

இரவு ஏழு மணி போல் வீடு வந்த ஸ்ரீதரனும் கௌரியும் மாடிப்படியருகே மயக்கமாகக் கிடந்த வாசுகியைக் கண்டபோது பயந்து போயினர். குழந்தைகள் இரண்டும் அழவாரம்பித்து விட்டன.

வாசுகியைத் தூக்கிக் காரில் ஏற்றிக் கொண்டு அருகிலிருந்த வைத்தியசாலைக்கு விரைந்தனர் அவர்கள். வாசுகிக்குச் சிகிச்சையளித்த டாக்டர் வெளியே வந்து. அவளுக்கேற்பட்ட சடுதியான அதிர்ச்சியில் அவள் வயிற்றிலிருந்த கரு கலைந்துவிட்டதாகவும். பயப்படுவதற்கு ஒன்றுமில்லை எனவும், வாசுகி தொடர்ந்தும் வைத்தியசாலையிலே நாலைந்து நாட்கள் இருந்து விட்டு வீட்டுக்குப் போகலாம் எனத் தெரிவித்தபோது கௌரிக்கு அழுகையை அடக்க முடியவில்லை.

அவளுக்கு ஆறுதல் கூறி அன்றிரவு வாசுகியுடன் கூடவே தங்கும்படி சொல்லிவிட்டுக் குழந்தைகளுடன் வீடு திரும்பிய போதுதான் மேஜை மேலிருந்த தந்தி ஸ்ரீதரன் கண்ணில் பட்டது. பிரித்தபடி இருந்த அந்தத் தந்தியை வாசுகிதான் வாங்கிப் பிரித்திருக்க வேண்டும் என்ற நினைப்புடன் அலட்சியமாகத் தந்தியைப் படித்த ஸ்ரீதரன் அதில் காணப்பட்ட விஷயத்தைக் கிரகித்தபோது ஒரு வேளை இதைப் படித்ததினால்தான் வாசுகி மயக்கமாக விழுந்திருக்க வேண்டும் என முடிவுக்கு வந்தான்.

தந்தியில் தெரிவிக்கப்பட்ட தகவல் ஏற்கெனவே ஸ்ரீதரன் எதிர் பார்த்ததுதான். இங்கு சந்திரிகாவின்

ஊரிலேயே அவன் தனக்குத் தெரிந்தவர்களைக் கொண்டு முன்பு விசாரித்ததில் அனேகமாக எல்லாத் தகவல்களுமே அவனுக்குக் கிடைத்திருந்தன. குறிப்பாக அவளுடைய அண்ணன் ருத்ரனைப் பற்றி நிறையவே சொன்னார்கள். அவன் இலங்கையில் இருந்த நாட்களில் கிட்டத்தட்ட ஒரு ரௌடியாகவே இருந்ததாகவும். உல்லாசப் பிரயாணத்தில் இலங்கைக்கு வந்திருந்த ஒரு ஹாலந்துக்காரியின் சினேகிதம் கிடைத்தது அவன் ஹாலந்துக்குக் குடி போனதாகவும் தெரிந்தது. அவனுடைய கண்காணிப்பில்தான் சபேசனும் சந்திரிகாவும் ஹாலந்தில் இருப்பதாகவும் தெரிய வந்தது. கண்டியிலும் பின்னர் தீவிரமாக விசாரித்தபோது நர்ஸ் சந்திரிகா பல தடவைகள் டாக்டர் சபேசனுடைய அறையில் இரவு தங்கியது உண்டென்றும் அவர்களிடையே அன்னியோன்யம் இருக்கத்தான் செய்தது என்பதும் சந்தேகத்துக்கு இடமில்லாமல் ஊர்ஜிதமானது.

இவற்றைக் கொண்டு சபேசனை எடை போட்ட ஸ்ரீதரனுக்கு சபேசன் இந்த மட்டில் வாசுகியைப் பிரிந்து போனதே நல்லதெனத் தோன்றியது. இரண்டு தோணியில் கால் வைக்கும் ஒருவனைத் தன் குடும்பத்தில் ஒருவனாகக் கருத ஸ்ரீதரனுடைய மனம் சம்மதிக்கவில்லை.

வாசுகி காலப்போக்கில் தனக்கேற்பட்ட துரதிர்ஷ்டத்தை ஒரு கெட்ட கனவென மறந்து போவாள். அப்போது சபேசனிடமிருந்து விவாகரத்துப் பெறவைத்து வேறொரு நல்ல மாப்பிள்ளைக்கு அவளை மணஞ்செய்து வைக்கவேண்டும் என மனதுக்குள் திட்டம் வகுத்து அதற்கான காலத்தையும் எதிர்பார்த்திருந்த ஸ்ரீதரனுக்கு வாசுகி கர்ப்பம் என்ற செய்தி தெரிந்தபோது அவனுடைய திட்டங்கள் கலைந்து போயின. போதாக் குறைக்கு வாசுகியும் குழந்தை பிறந்தால் அது தன் கணவனை அடைய ஒரு காரணமாக விளங்கும் என்ற நம்பிக்கையுடன் வாழ முற்பட்டதால் அவன் அவளுடைய இளம் மனதின் நம்பிக்கையைக் கலைக்க விரும்பவில்லை. குழந்தை பிறக்கட்டும்

அப்புறம் ஆக வேண்டியதைப் பார்த்துக் கொள்ளலாம் என்றிருந்தான்.

இதற்கிடையில் லண்டனிலிருந்த தனது நண்பன் விவேகானந்தனுக்கு ஒரு தடவை ஹாலந்து சென்று டென்ஹாக்கில் இருக்கும் சபேசனைப் பற்றிய விபரங்களைச் சந்தேகத்துக்கு இடமில்லாமல் அறிந்து செய்தியனுப்பச் சொல்லிக் கடிதம் எழுதியிருந்தான் ஸ்ரீதரன். அவன் அதையிட்டு அனுப்பிய தந்தி ஸ்ரீதரனுடைய வீட்டு விலாசத்துக்கு அதுவும் அவன் வீட்டிலில்லாத சமயத்தில் வந்து அதை வாசுகியும் பார்த்துவிட்டிருந்தாள்.

குழந்தைகள் சாப்பிட்ட பின்னர் அவர்களைத் தூங்கச் செய்த ஸ்ரீதரன் வெகுநேரமாக வாசுகியையும் அவளுக்கு ஏற்பட்ட கருச்சிதைவையும், அவளது எதிர்காலம் எப்படியிருக்கப் போகின்றது என்பதையும் சிந்தித்துக் கொண்டிருந்தான். அந்தச் சிந்தனையின் முடிவில் அவனுடைய நண்பன் விவேகானந்தன் தெரிவித்திருந்தது போலவே சபேசனை வாசுகி மறந்து விடுவதுதான் நல்லது. இந்தக் கருச் சிதைவு ஏற்பட்டதுகூட ஒருவகையில் அனுகூலமே!... வாசுகிதான் வந்த தந்தியைப் படித்து நிலைமையைப் புரிந்து கொண்டாளே! இனியும் அவளிடமிருந்து உண்மைகளை மறைக்க வேண்டிய அவசியம் இல்லை. அவள் வைத்திய சாலையிலிருந்து வந்த பின்னர் விவாகரத்துக்கான ஏற்பாடுகளை அவசியம் செய்ய வேண்டும் என்ற முடிவுடன் அவன் நிம்மதியாகப் படுக்கைக்குச் சென்றான்.

ஆனால் நாலைந்து நாட்களின் பின்னர் வைத்தியசாலையால் வீடு திரும்பிய வாசுகி இருந்த நிலைமை அவனுடைய நிம்மதியைக் குலைப்பது போலிருந்தது.

வயிற்றில் வளர்ந்த குழந்தையையிட்டு வாசுகி தன் மனதில் அளவுக்கும் அதிகமான எதிர்பார்ப்புக்களை வளர்த்திருந்தாள். விரைவில் சபேசன் இருக்குமிடம் தெரிந்துவிடும். அவனிடம் குழந்தையையும் எடுத்துக்

கொண்டு தான் நேரில் சென்ருல் அவன் மனம் நிச்சயம் தன்பால் திரும்பும். அந்தச் சிங்களப் பெண்ணின் பிடியி லிருந்து அவனே விடுவித்துக் கொண்டு வந்துவிடலாம் என்ற நிச்சயமான நம்பிக்கை அவளுக்கு இருந்தது.

ஆனுல் அந்தத் தந்தியில் சபேசனுடைய உண்மை நிலையைக் கண்டபோது அவள் அதிர்ந்து போனுள். அதைத் தொடர்ந்து அவளுடைய ஒரே பற்றுக்கோடாக விருந்த குழந்தையும் அழிந்து போகவே வாசுகி பிரமை பிடித்தது போலாகிவிட்டாள்.

கௌரி அவளுடன் அன்புடன்பேசிஅவளுடைய துயரத்தி லும் துன்பத்திலும் பங்குகொள்ள முயன்ற போதும் வாசுகி அவள் கூறுவதையே செவிமடுக்காமல் சதாவெறித்த பார்வையோடு படுக்கையில் உட்கார்ந்திருந்தாள்.

வைத்தியசாலையில்தான்இப்படியிருக்கிருள், வீட்டுக்குப் போய் குழந்தைகளேக் கண்ட பின்னராவது வாய்திறந்து பேசுவாள் என்று எண்ணியிருந்த கௌரி, வாசுகி வீட்டுக்கு வந்து இரண்டு மூன்று நாட்களாகியும் எதுவித மாற்றமு மின்றி திக்பிரமை பிடித்தவள் போல் தன் அறையில் அடைந்து கொண்டதைக் கண்டபோது கலங்கிப் போனுள்.

கையில் சபேசனுடைய போட்டாவை வைத்துக் கொண்டு மறுகையினுல் தான் அணிந்திருந்த தாலியை வருடிக்கொண்டே சதா உட்கார்ந்திருந்த வாசுகியைப் பார்த்த ஸ்ரீதரனுக்கு இப்போ அவள் மேல் இரக்கம் ஏற்படுவதற்குப் பதிலாக ஆத்திரமும் கோபமுமே வந்தன.

இவளே இப்படியே இருக்கவிட்டால் இவளுடைய மூளேயே குழம்பிப் போகும். சித்தசுவாதீனம் இழந்து போவாள் என்று எண்ணிய ஸ்ரீதரனுக்கு ஒரு யோசனே தோன்றவே தனது அறைக்குச் சென்று அங்கு தான் இது

வரை காலமும் இரகசியமாக வைத்திருந்த சபேசனுடைய கடிதத்தை எடுத்துக் கொண்டு மேலே வந்தான்.

அவனுடைய முகத்தில் காணப்பட்ட கோபத்தையும் ஆத்திரத்தையும் கண்ட கௌரி வெலவெலத்துப் போனாள். இதுவரை காலமும் ஸ்ரீதரனுக்கு இப்படியொரு கோபம் வந்ததை அவள் கண்டதேயில்லை.

தனக்குள்ளேயே மூழ்கிப் போனவள் போல உட்கார்ந்திருந்த வாசுகியிடம் நேரே வந்த ஸ்ரீதரன் அவளை "வாசுகி! இங்கே பார்!" என்று அழைத்தான்.

அவனுடைய குரலில் இருந்த கோபத்தைக்கூட உணராமல் வாசுகிதன்னுடைய கையிலிருந்தசபேசனுடைய போட்டாவையே பார்த்திருந்ததைக் கண்ட ஸ்ரீதரன் பளார் என்று வாசுகியின் கன்னத்திலே அறைந்த போது கௌரி திடுக்கிட்டுப் போனாள்.

வலியிலே முகத்தைக் கோணிக்கொண்ட வாசுகி அப்போதுதான் அவர்களைக் கண்டது போல கண்களில் உணர்வு வர அவர்களைப் பார்த்த போது ஸ்ரீதரன் "வாசுகி!...இதோ பார்!...நீ அன்று படித்ததந்தியில் உள்ள விஷயங்களெல்லாம் முழுக்க முழுக்க உண்மை தான்! இனி மேலும் நீ அவனையே நினைத்து உருகிச் சாகவேண்டுமென நினைத்தால் இதோ! இந்தக் கடிதத்தையும் படித்துப் பார்த்துவிட்டு உருகு! உன்னை ஏமாற்றிய அந்த டாக்டர் நாட்டைவிட்டு ஓடுவதற்குமுன் தன் தாய்க்கு எழுதிய கடிதம்!" என ஆத்திரத்தோடு நீட்டிய கடிதத்தை வாங்கிப் படிக்க ஆரம்பித்தாள் வாசுகி.

இது என்ன கடிதம்' உங்களுக்கு எப்படிக் கிடைத்தது இது என்றெல்லாம் கேட்கத் தோன்றியும் தன் கணவன் இருந்த நிலையைக் கண்டு மௌனமாக நடப்பதைப் பார்த்துக் கொண்டிருந்தாள் கௌரி.

கடிதத்தைப் படிக்கையில் வாசுகியின் முகத்தில் ஏற்பட்ட மாற்றங்களைக் கௌரியினால் நன்கு அவதானிக்க முடிந்தது. முதலில் அதிர்ச்சியும் அதைத்தொடர்ந்து அருவருப்பும் வெறுப்பும் ஈற்றில் கோபமுமாக அவள் முகத்தில் கொந்தளித்த உணர்வுகளைக் கண்டபோது அந்தக் கடிதத்தில் அப்படி என்னதான் இருக்க முடியும் எனக் குழம்பிக் கொண்டாள் கௌரி.

இதற்கிடையில் கடிதத்தை முழுவதும் படித்துவிட்ட வாசுகி கண்களில் சினம் கொப்பளிக்க "சீ! இவனும் ஒரு மனுஷனா?" எனத் தன்னருகில் இருந்த சபேசனுடைய போட்டாவைத் தாறுமாறாகக் கிழித்து வீசினாள். "இவனை நினைத்து நான் அம்மாவின் தாலியைக் கழுத்தில் கட்டிக் கொண்டேனே!" என ஆத்திரத்துடன் தன் கழுத்தில் கட்டியிருந்த தாலி கோர்த்திருந்த சங்கிலியை வெடுக்கென அறுத்து எறிந்தாள். அழுகையும் ஆத்திரமும் பொங்கிவர "அத்தான்! இனிமேல் என மனதிலும் அவனை நினைத்துப் பார்க்கமாட்டேன்...அந்தத் துரோகியை நம்பியிருப்பதை விட நான் ஆற்றிலோ கிணத்திலோ விழுந்து சாவது மேல்!" என வாசுகி அரற்றிய போது அவளைத் தேற்றினான் ஸ்ரீதரன்.

"வாசுகி! இதோ பார்! அவனுக்காக நீயேன் உன் உயிரைப் போக்கிக் கொள்ள வேண்டும்! உனக்கு இன்னமும் முழுதாக இருபது வயதாகவில்லை...உன்னுடைய வாழ்க்கை இன்னமும் ஆரம்பிக்கக் கூட இல்லையே!... நாங்கள் எல்லாரும் எங்கே போய்விட்டோம்! உனக்கொரு சிறப்பான வாழ்க்கையை நாங்கள் நிச்சயம் அமைத்துத் தருவோம்...கலங்காதே வாசுகி!" என அவன் ஆதரவாகக் கூறிய வார்த்தைகள் வாசுகிக்கு மிகவும் ஆறுதலைக் கொடுத்தன.

இதற்குள் வாசுகியின் கையிலிருந்து நழுவிய கடிதத்தைப்படித்த கௌரி காளியாகவே மாறிவிட்டாள்.

எத்தனை துணிவிருந்தால் எங்கள் வாசுகியைப்பற்றி இப்படி ஒரு அபாண்டத்தை அந்த வஞ்சகனால் எழுத முடியும்... நல்லகாலம் அவன் நாட்டில் இல்லை... இல்லா விடில் நானே அவனைக் கொலை செய்திருப்பேன்!'' எனக் குமுறினாள் கௌரி.

"அக்கா! நீயே வீணாக அழுகின்றாய்... இதையிட்டு நாம் இனிமேலும் கவலைப்படுவதே மடைத்தனம்... அத்தான் சொல்வது போல விரைவில் நாங்கள் விவாகரத் துக்கான ஏற்பாடுகளைக் கவனிக்கலாம்... கவலைப்படாதே!'' என வாசுகியே கௌரியைத் தேற்ற முற்பட்டபோது ஸ்ரீதரனுக்கு இதுவரையிருந்த குழப்பங்கள் கவலைகளெல் லாம் பறந்து போயின.

## 16

நீண்ட நாட்களுக்குப் பின்னர் வாசுகியிடமிருந்து வந்த கடிதம் ராஜியின் கையில் கிடைத்தபோது பரபரப்பு நிறைந்தவளாய்க் கடிதத்தைப் பிரித்தாள் ராஜி.

ராஜிக்கும் பல்கலைக்கழகத்தில் இடம் கிடைத்ததை யிட்டு மகிழ்ச்சி தெரிவித்திருந்த வாசுகி தொடர்ந்து தன்னைப் பற்றிய சங்கதிகளையும் எழுதியிருந்தாள். குறிப்பாகத் தற்போது அவளுக்கிருந்த மனநிலையையும் அதற்குக் காரணமான விஷயங்களையும் அவள் விளக்கமாக எழுதியிருந்ததைப் படிக்கையில் ராஜிக்கு மனதுக்கு ஆறுதலாகவும் இந்த அளவுக்கு வாசுகியின் மனம் முதிர்ச்சி யடைந்திருக்கிறது எனச் சந்தோஷமாகவும் இருந்தது. அதுவும் கடிதத்தின் இறுதியில் வாசுகி எழுதியிருந்தவை ராஜியின் மனதில் அப்படியே பதிந்துவிட்டது.

'ராஜி! நான் அண்மையில் வாசித்த ஒரு சிறுகதையில் பின்வரும் வாசகங்களைப் படிக்க நேர்ந்தது. 'வாழ்க்கை

என்பதே ஏற்றப்படாத தீபங்கள் நிறைந்த ஒரு தீப தோரணந்தான். சிறுவயதில் எமக்கு வேண்டியவர்கள் தம் அன்பை நெய்யாக வார்த்து அறிவை ஒளியாக எடுத்து எமக்காக அந்தத் தீபங்களை ஏற்றுகின்றனர். நாம் வளர்ந்து வருகையில் நாமே தீபங்களை ஏற்ற முற்படும் போது அவசரத்தினுலும் அனுபவமின்மையாலும் நம்மை யும் சுட்டு தீபங்களையும் அணைத்து விடுகின்றோம்.

ஆனுல் அப்படி அணைந்துபோன தீபங்களையே சுற்றி வந்து நாம் அழுது கொண்டிருந்தால் அதனுல் யாருக்குமே லாபமில்லை. எம்முடைய வாழ்க்கையில் ஏற்ற வேண்டிய புதிய தீபங்கள் இன்னமும் இருக்கத்தான் செய்கின்றன. அவற்றையாவது அவசரமின்றியும் ஒழுங்காகவும் ஒளி யேற்றி எமது வாழ்வை ஒளிமயமாக்குவோம்!

என்னுடைய வாழ்க்கைக்கும் இந்தவாசகங்கள் மிகவும் பொருத்தமானவை என நான் நம்புகின்றேன். என்னுடைய இந்த முடிவு உனக்கு மிகவும் மகிழ்ச்சியைக் கொடுக்கும் என்பது எனக்குத் தெரியும். பதில் சீக்கிரம் எழுது. உனது ஆருயிர்த் தோழி என்று முடித்திருந்தாள் வாசுகி.

வாசுகி தன் அக்கா கௌரியுடன் கொழும்புக்குச் சென்றதன் பின்னர் அவளிடமிருந்து கடிதம் எதுவுமே ராஜிக்குக் கிடைக்கவில்லை. பல்கலைக்கழக அனுமதி கிடைத்தபோது அவள் வாசுகிக்கு எழுதிய கடிதத்துக்கு கௌரிதான் பதில் எழுதியிருந்தாள். அந்தக் கடிதம் பல்கலைக்கழகப் படிப்புச் சுமைகள் மத்தியிலும் ராஜிக்கு வாசுகியையிட்டு மிகவும் விசனத்தை ஏற்படுத்தியிருந்தது.

கல்லானுலும் கணவன் புல்லானுலும் புருஷன் என்று எங்கே வாசுகி எமது பெண்களின் தாய்வழிப் பண் பாட்டில் தன்னை அழித்துக் கொள்ளப் போகின்றளோ என்ஞெரு பயம் ராஜிக்கு இருக்கவே செய்தது. தாய்வழித் தாகம் என்று சொல்லிக் கொண்டு தமது வாழ்வையே தாய் வழியில் தியாகம் செய்தவர்களாய்த் தவிக்கும் எத்தனையோ

பெண்களை ராஜி தன் கண் கூடாகக் கண்டிருக்கிறாள். கணவன்மார் தமக்குத் துரோகமிழைத்தாலும் அதை மன்னித்து மறந்து போகும் பெண்கள் இன்னமும் இருப்பதனால்தான் இன்றையக் கணவன்மாரும் தொடர்ந்து எதற்கும் அஞ்சாமல் கண்டபடி நடக்க வழியேற் பட்டு விடுகிறது. தனது மனைவி அதே தவற்றைச் செய்தால் அதை மன்னிக்கவும் மறக்கவும் செய்யவும் ஒரு கணவன் எங்காவது மருந்துக்காகிலும் கிடைப்பானா என்று நினைத்துக் கொண்டாள் ராஜி.

சமுதாயத்தில் ஆணின் தயவை நாடி. வாழவேண்டிய காலம் அன்று இருந்த படியினாலே தான் ஆண்களால் இவ்வளவு தான் தோன்றித்தனமாக நடந்து கொள்ள முடிந்தது. ஆனால் இன்றைய சமுதாயத்தில் ஒரு பெண் படித்து முன்னேறி தன்னைத் தான் பாதுகாத்துக் கொள்ளக் கூடிய ஒரு நிலைக்கு வந்து விட்டால் அவள் ஏமாளியாக நிற்க வேண்டிய நிலையே வராது. என்று தனக்குள் தீர்மானமாக யோசித்துக் கொண்ட ராஜி கூடவே வாசுகியின் முடிவை வரவேற்று அவளைப் பாராட்டிக் கடிதம் எழுத வே ண்டும் எனப் பதில் எழுத உட்கார்ந்தாள்

என் உயிரினும் மேலான வாசுகிக்கு,

உன்னைப்பற்றியும் உன்னுடைய வாழ்வைப் பற்றியும் கவலையில் ஆழ்ந்திருந்த எனக்கு உன்னுடைய கடிதம் எல்லையற்ற மகிழ்ச்சியைத்தந்தது. விவாகரத்துப் பெறுவதுதான் சிறந்த'முடிவென்று நீ எழுதியதை நானும் முழுமனதுடன் வரவேற்கிறேன்.

ஏனெனில் உனக்கு நடந்தது விவாகமில்லை வாசுகி! அது ஒரு விபத்து! அந்த விபத்திலே உன் இதயமே ஊனமாகிப் போகும் அவலம் ஏற்பட்டுவிடுமோ என நான் பயந்தது உண்மை. தன்னையே கணவனுக்காக அர்ப்பணிக்கும் ஒரு மனைவிக்குத் துரோகம் செய்பவன் ஒரு மனிதனல்ல, மிருகம். அந்த மிருகம் உன்வாழ்க்கை

முழுவதுமே உன்னைக் கடித்துக் குதறுமல் இந்த மட்டில் விலகிப்போனது உன்னுடைய பேரதிஷ்டம் எனவே நான் நினைக்கின்றேன்.

எனவே தற்காலிகமாக இருண்டுபோன உன் கடந்த காலத்தையிட்டு கவலைப்படாமல் வருங்காலத்தில் நீ ஏற்ற வேண்டிய வாழ்க்கைக்கு நீ இப்போது தயார்செய்துகொள் இனிமேலாவது இந்தக் கல்யாணச் சங்கதிகளை விட்டுவிட்டு தொடர்ந்து ஏதாவது படிப்பதற்கு முயற்சிசெய். உன்னுடைய அத்தான் இந்த விஷயத்தில் உதவியாக இருப்பார் அடுத்த தடவை உன்னுடைய கடிதம் எனக்குக் கிடைக்கும் போது ஒரு மாணவியின் பதிலைத்தான் எதிர்பார்க்கிறேன். ஒரு மாஜி மனைவியின் பதிலை அல்ல! என்று முடிந்த ராஜியின் கடிதம் வாசுகியுடைய கையில் கிடைத்தபோது வாசுகிக்கு சின்னதொரு சிரிப்புகூட வந்தது.

அந்தக் கடிதம் அவள் மனதில் மறுபடியும் சபேசனை யிட்டுச் சில சிந்தனை அலைகளைத் தோற்றுவிக்கவே செய்தது

மறந்துவிடக்கூடிய உறவா அந்த மண உறவும் அந்த முதல் உறவும்?

கணப்பொழுதுக்குள் நெஞ்சில் எழுந்த எண்ணத்தை அப்படியே மிதித்துப் புதைந்துவிட்டுக் கௌரியிடம் காட்டுவதற்காக ராஜியின் கடிதத்தை அவளிடம் எடுத்துச் சென்முள் வாசுகி.

கௌரி அதை வாங்கிப் படிக்க ஆரம்பித்தபோது வாசலில் காலிங்பெல் கேட்கவே யாரென்று பார்ப்பதற்காக வாசுகி வெளியே வந்தாள்.

அங்கே பாலகுமார் நின்று கொண்டிருந்தான். அவன் நல்லூரில்வாசுகியின் வீட்டிற்குச் சற்றுத்தள்ளி வசிக்கும் ஒருகுடும்பத்தைச் சேர்ந்தவன். அவனுக்கும் கீழே மூன்று தங்கைகள். வசதியில்லாத குடும்பம். ஆனல் படிப்பிலே பாலகுமார் புலி. பல்கலைக்கழகப் புகுமுகத் பரீட்சையில்

அவனுக்கு நல்ல புள்ளிகள் கிடைத்தும் பாழாய் போன தரப்படுத்தலினால் அவனுக்கு சீட் கிடைக்காமல் போகவே அவன் மனமுடைந்து போயிருந்தான். தனக்குப் பயன்படாத தன் அறிவைத் தன் இனத்துக்காகப்போராட வந்த இயக்கமொன்றுக்குப் பயன்படுத்திக் கொண்டிருந் ததை ஊரில் அறிந்திருந்தாள் வாசுகி.

கசங்கிய உடைகளுடனும் களையிழந்த முகமுமாய் நின்ற அவனைக் கண்ட வாசுகிக்கு இரக்கமாக இருந்தது.

இதற்குள் ஹாலுக்கு வந்த கௌரியும் அவனைக் கண்டு விட்டு "வா பாலகுமார்! எப்போதுஊரிலிருந்துவந்தாய்?... வா...!" என்று அவனை அழைத்து உட்காரச்சொன்னாள்.

"என்ன விஷயம் தம்பி! திடீரென்று கொழும்புக்கு வந்திருக்கின்றாய்?" எனக் கௌரி கேட்டதற்கு "ஊரில் எனக்குப் பிரச்சனைகள் ஏற்பட்டு விட்டன. என்னையும் போலீஸ் தேட ஆரம்பித்து விட்டதாகத் தெரிந்தது. தலைமறைவாகிப் போய்விடலாம் என்றால் அம்மா உன் தங்கைகளுக்கு ஒரு வழியைக் காட்டிவிட்டுப் போ... இல்லாவிட்டால் என் பிரேதத்துக்குக் கொள்ளி வைத்து விட்டுப் போ என்று அழுகின்றா...என்னுடைய நிலையை உணர்ந்த என் நண்பர்கள் எங்காவது வெளிநாட்டுக்குப் போ என்று சொன்னார்கள்...அது விஷயமாகத்தான் கொழும்புக்கு வந்தேன்...என்னுடைய பாஸ்போர்ட்டை ஆல் கன்றீஸ் ஆக்குவதற்கு பொன்ட் சைன் பண்ண வேண்டும்...அதுதான் உங்களுடைய கணவரைக் கேட்டுப் பார்க்கலாம் என வந்தேன்!" என பாலகுமார் தெரிவித்த போது "அதற்கென்ன பாலகுமார்! இவர் மத்தியானம் சாப்பிட வீட்டுக்கு வருவார்...நான் அவரிடம் சொல்லி உனக்கு உதவி செய்யச் சொல்கிறேன்... நீ வாசுகியோடு உட்கார்ந்து பேசிக் கொண்டிரு...நான் மத்தியானச் சமையலைக் கவனிக்க வேண்டும்." எனச் சொல்லி அவ னுக்குக் காப்பியும் கொண்டுவந்து கொடுத்துவிட்டு கௌரி உள்ளே போய்விட்டாள்.

''எந்த நாட்டிற்குப் போகவிருக்கிறுய்?'' என வாசுகி கேட்டதற்கு ''எந்த நாடு என்று தெரியவில்லை வாசுகி!...ஒரு ஏஜெண்டிடம் சொல்லியிருக்கின்றேன்... இப்போ டென்மார்க்குக்கு விசா கொடுக்கின்றுர்களாம்... விசா இருந்தால் பிரச்சனையின்றிப் போய்ச் சேர்ந்து விடலாம்!'' என்று சொன்ன பாலகுமாரின் பதில் வாசுகியை வேருெரு கோணத்தில் சிந்திக்க வைத்தது.

''டென்மார்க் ஹாலந்துக்கு கிட்டவா இருக்கிறது பாலகுமார்?''

''பக்கத்தில் என்று சொல்ல முடியாது...இடையே ஜெர்மனி இருக்கிறது...ஏன்?''

''ஒன்றுமில்லை!'' என்று சிலகணம் யோசித்தவள் ''டென்மார்க் செல்வதற்கு எவ்வளவு பணம் கேட்கின்றுன் ஏஜென்சிக்காரன்?''

''கிட்டத்தட்ட இருபத்தையாயிரம் வேண்டும்!''

''இவ்வளவு பணத்துக்கு என்ன செய்வாய் பால குமார்?''

''நண்பர்கள் சிலர் உதவி செய்திருக்கின்றனர்...ஆனுல் இன்னும் பத்தாயிரம் தேவைப்படுகின்றது...உன்னுடைய அக்காவைக் கேட்டுப் பார்க்கலாம் என்றிருக்கிறேன்!'' எனக் கூச்சத்துடன் பதில் கூறிய பாலகுமாரை ஒரு தீர்மானதுக்கு வந்ததுபோலப் பார்த்த வாசுகி ''நீ அக்கா விடம் பணம் கேட்கவேண்டாம். நானே தருகிறேன்!'' என வாசுகி கூறியபோது பாலகுமார் நன்றி மிக்கவனுய் ''தெய்வம்போல நீ எனக்குச் செய்யும் இந்த உதவியை நான் என்றும் மறக்க மாட்டேன் என நாத் தழுதழுக்கக் கூறினுன் பாலகுமார்.

''இதென்ன பாலகுமார். இதற்கெல்லாம் போய்...'' என்று அவனைத் தேற்றிய வாசுகி ''நீ ஏஜெண்டுக்குப் பணம்

கொடுக்கப் போகும் எனக்குப்போன் பண்ணு. நான் வந்து பாங்கில் பணத்தை எடுத்துத்தருகிறேன்'' என்று சொன்னாள்.

மத்தியானம் ஸ்ரீதரன் வந்து யாவரும் சாப்பிடும் போது பாலகுமாரின் தேவையைக் கேட்ட ஸ்ரீதரன் அவனுக்கு உதவி செய்ய மகிழ்ச்சியுடன் ஒப்புக் கொண்டான். அவனுக்கு பாஸ்போர்ட் ஆபீஸில் செல்வாக்கு இருந்த தால் பாலகுமாரின்றியே தான் இன்று அதைச் செய்ய முடியும் என்றும் நாளை இதே நேரம் வீட்டுக்கு வந்தால் பாஸ்போர்ட் ரெடியாக இருக்கும் என ஸ்ரீதரன் சொன்ன போது பாலகுமார் நிம்மதியடைந்தான.

அப்போது வாசுகி ''பாலகுமாருக்குப் பத்தாயிரம் ரூபா குறைகின்றதாம்... அதை நான் தருகிறேன் என்று சொல்லி யிருக்கின்றேன்... நாளைக்கு ஏஜென்சிக்குப் பணம் கட்டச் சொல்லும் போது நானும் போய் பாங்கிலிருந்து பணத்தை எடுத்துக் கொடுக்கின்றேண'' எனச் சொன்னாள்.

வாசுகி இப்போதெல்லாம் கவலையை மறந்தவளாய் சற்றுக் கலகலப்பாகவும் மகிழ்ச்சியோடும் இருப்பதைக் கவனித்த கௌரியும் ஸ்ரீதரனும் அவள் இப்படித் தானே முன் வந்து பாலகுமார் போன்ற ஒரு பையனின் தேவை யறிந்து உதவி செய்ய விரும்பியது சந்தோஷமாகஇருந்தது.

''மெத்த நல்லது வாசுகி!... நீயும் எப்போதும் வீட்டுக் குள்ளேயே அடைந்து கிடக்காமல் வெளியே உன்பாட்டில் போய் வருவது நல்லதுதான்! விரைவில் உன்னை வர்த்தகக் கல்லூரியொன்றில் சேர்க்க விருக்கின்றேன். உன்பேரில் தான் மாமா நிறையப் பணத்தை விட்டுச் சென்றிருக் கிறுரே... அதையெல்லாம் ஒழுங்காக இன்வெஸ்ட் பண்ண நீ அவசியம் கற்றுக் கொள்ள வேண்டும்!'' என்று ஸ்ரீதரன் அவர்களோடு சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்து

விட்டுப் பாலகுமாரின் பாஸ்போர்ட்டையும் வாங்கிக் கொண்டு புறப்பட்டான்.

இரண்டொரு மணி நேரத்தின் பின்னர் பாலகுமாரும் சென்றபின்னர் மேலே தன்னுடைய அறைக்குச் சென்ற வாசுகி அமைதியாக உட்கார்ந்து அடுத்த நாள் செய்ய வேண்டிய காரியங்களைத் திட்டமிட்டுக் கொண்டாள்.

இரண்டாவது நாள் பாலகுமார் டென்மார்க்குக்குப் புறப்பட்டபோது ஸ்ரீதரன் குடும்பத்தினருடன் வாசுகியும் கூடவே எயர்போட்டுக் சென்று யாவரும் அவனைச் சந்தோஷமாக வழியனுப்பி வைத்தனர்.

□

## 17

அதன் பின்னர் ஒருவாரம் கழித்து ஒருநாள் குழந்தை களுடைய பாடசாலையில் ஏதோ நிகழ்ச்சியென்று சென் றிருந்த ஸ்ரீதரனும் கௌரியும் இரவு வீடு திரும்பியபோது வீட்டில் வாசுகியின் நடமாட்டத்தைக் காணவில்லை.

இரவு உணவு உண்பதற்காகக் கௌரி அழைத்த போதும் அவள் கீழே வராததைக் கண்ட கௌரி அவளைத் தேடிக்கொண்டு மேலே சென்றபோது அங்கு வாசுகியைக் காணவில்லை. கட்டிலிலே அவளுடைய கடிதமொன்றைத் தான் கண்டாள் கௌரி.

"அன்புள்ள அத்தான் அக்கா!

உங்கள் மகளாகவே என்மேல் அன்புகாட்டி வரும் உங்களிடம் சொல்லிக் கொள்ளாமலே புறப்படுகின்றேன். அதற்கு முதலில் என்னை மன்னிக்க வேண்டுகின்றேன்.

எனக்கு இங்கு இருக்கப்பிடிக்கவில்லை. இந்த நாட்டில் எப்போதுமே என்னைப்பார்க்கும் யாரும் எனக்கு நடந்தவைகளை மறக்கப் போவதில்லை. எனக்கும் அவற்றை மறக்க முடியவில்லை. எனவே தான் என்னையே அறியாத புதிய மனிதர்கள் மத்தியில் வாழ ஒரு புதிய நாட்டைத் தேடிப்போகிறேன்.

நான் எல்லாவகையிலும் என்னைக் கவனித்துக் கொள்வேன். நீங்கள் அதையிட்டுப் பயப்பட வேண்டாம். செக்புக்,பாஸ்புத்தகம் யாவும் விவாகரத்துப்பத்திரத்துடன் மேசையினுள் வைத்திருக்கின்றேன்.

நான் ஒரு நல்ல இடத்தில் சேர்ந்ததும் உங்களுக்கு உடனேயே கடிதம் போடுவேன். குழந்தைகளுக்கு என் அன்பு முத்தங்களைக் கொடுக்கவும். உங்களிடம் மீண்டும் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளும் அன்புமகள் வாசுகி!''

கடிதத்தைப் படித்ததும் படிக்காமலும் கௌரி கீழே ஓடி அதை ஸ்ரீதரனிடம் கொடுத்தபோது அதை அமைதியாகப் படித்த ஸ்ரீதரன் சிலநிமிடங்கள் ஒன்றுமே பேசவில்லை.

பின்னர் கண்ணீருடன் நின்ற கௌரியை அணைத்து ''கௌரி! கலங்காதே! வாசுகியின் முடிவும் ஒருவகையில் நல்லதென்றுதான் நினைக்கிறேன். அவளுடைய வாழ்க்கை அவள் எழுதியது போலவே இந்த நாட்டில் எமது மக்கள் மத்தியில் கறைபடிந்த ஒன்றாகவே இருக்கும்...! சில ஆண்டுகள் அவள் வெளிநாட்டில் ஒரு புதிய வாழ்க்கையை வாழ்ந்துதான் பார்க்கட்டுமே!... உன் அப்பா அம்மாவின் நல்ல மனதுக்கு வாசுகியின் வாழ்வு நிச்சயம் சிறப்பானதாகவே அமையும்!'' என ஸ்ரீதரன் தேற்றிய போதும் கன்றைப் பிரிந்த பசுவைப் போல இருந்தாள் கௌரி.

''சின்னப் பெண்ணாயிற்றே... அங்கு என்னென்ன ஆபத்துக்களோ!'' எனப் பயந்த கௌரியிடம் ''அடிஅசடே

... இங்கு எங்கள் நாட்டில்தான் இளம் பெண்கள் தனியே நடமாடப் பயப்படவேண்டும்...அங்கெல்லாம் ஆணும் பெண்ணும் சமந்தான்! இருந்து பாரேன்...இன்னும் இரண்டு வாரங்களில் வாசுகியின் நல்ல செய்தியைக் கொண்ட கடிதம் எமக்குக் கிடைக்கும்!'' என நம்பிக்கை யுடன் சிரித்து ஆறுதல் கூறினன் ஸ்ரீதரன்.

## 18

இங்கே கௌரி தங்கையை எண்ணி நெஞ்சுக்குள் கலங்கிக்கொண்டபோது வாசுகி கொப்பன் ஹேகன் ரிக்கற்றுடன் விமானத்தினுள் அமர்ந்திருந்தாள். மாலை ஏழுமணிக்குக் கட்டுனயக்காவிலிருந்து புறப்பட்ட அவ்ரோ விமானம் முதலில் பம்பாயில் ஒரு மணிநேரம் தரித்து மறு படியும் புறப்பட்டு மாஸ்கோவை நோக்கிப் பறந்து கொண் டிருந்தது.

வாசுகிக்கு இதுதான் முதலாவது விமானப் பயணமா யிருந்தும் அவளுக்கு எந்தவித பயமோ கலக்கமோ நெஞ்சில் இருக்கவில்லை. ஆனல் பிறந்த மண்ணையும் சொந்த உறவுகளையும் விட்டு சொல்லிக்கொள்ளாமல்கூடப் புறப்பட்டு விட்டேனே என்ற ஏக்கமும் வெறுமையும் அவளைச் சூழவே செய்தன.

இதே சமயம் ஒரு புதிய உலகத்தில் மறுபடியும் ஒரு புதிய பிறவியெடுத்து வாழப்போகும் வாழ்க்கை எப்படி அமையும் என்ற வினவும் அதையொட்டி வந்தபரபரப்பும் எதிர்பார்ப்பும் கூடவே ஏற்பட வாசுகி பலவகை உணர்வு களில் சிக்கித் தவித்தாள்.

விமானத்தில் ஒரே சீரான ஓசையும் அதற்குள் நிலவிய சீதோஷ்ண நிலையும் வாசுகியின் கண்களில் தூக்கத்தைக் கொண்டு வந்தன. அவள் மீண்டும் கண்விழித்தபோது

அதிகாலையாக இருந்தது. மாஸ்கோ எயர்போட்டில் விமானம் இறங்கியபோது டென்மார்க் செல்லும் விமானம் இன்னமும் இரண்டு மணிநேரத்தில் புறப்படும் எனவும் பயணிகள் அவர்களுக்குரிய ஹாலுக்குச் சென்று சிரம பரிகாரம் செய்து கொள்ளலாம் என அறிவித்தல் வந்த போது மற்றப் பயணிகளுடன் வாசுகியும் இறங்கிக் கொண்டாள்.

காலையில் கொப்பன் ஹேகன் செல்லும் விமானத்தில் வாசுகி ஏறி ஜன்னலோரமாக உட்கார்ந்து கொண்டாள். வெளியே இளவெய்யில் பளிச்சென்றிருந்தது. சற்றுநேரம் கழித்து தனது பக்கத்துச் சீட்டில் யாரோ வந்தமர்ந்ததை உணர்ந்து வாசுகி திரும்பிப் பார்த்தாள்.

அங்கே ஒரு வயதான வெள்ளைக்கார மாதுவாசுகியைப் பார்த்து நட்புரீதியான புன்னகை செய்வதைக் கண்டாள். பதிலுக்கு வாசுகியும் புன்னகை செய்துவிட்டு மறுபடியும் வெளியே தெரிந்த காட்சிகளை வேடிக்கைபார்க்கத்திரும்பிக் கொண்டாள்.

ரன்வேயில் ஓடிய விமானம் மேலெழுந்து பறந்தபோது கீழே மாஸ்கோ நகரமும் அதன் சுற்றுப் புறங்களும் மிகவும் தெளிவாகவும் அழகாகவும் தெரிந்தன. நகர்ப்புறங்கள் கழிந்து கிராமப் பிராந்தியங்கள் மேலாக விமானம் பறக்கையில் கீழே உள்ள வயல்கள் தோட்டங்கள் மத்தியில் நதியொன்று மின்னுவது அழகாகத் தெரிந்தது. அண்மையில் சென்று பார்த்தால் வெறும் பொட்டல் வெளியாகவும் பரட்டை காடுகளாக இருக்கும் இடங்கள் கூட மிகவும் அழகாகத்தெரிகையில் வாசுகி தன் மனதில் ஏற்பட்ட ஒரு எண்ணத்தினால் தனக்குள் விரக்தியுடன் சிரித்துக் கொண்டாள்.

அந்தச்சிரிப்பு அவளுடைய முகத்திலும் பிரதிபலித்ததை அவள் பக்கத்திலிருந்த பெண்மணி கண்டுகொண்டு மிகவும் நட்புரிமையுடன் "உங்கள் சிரிப்புக்குக் காரணம்

என்னவென்று நானும் தெரிந்து கொள்ளலாமா?" என ஆங்கிலத்தில் இனிமையாகக் கேட்டபோது வாசுகியினல் அவளுடைய கோரிக்கையைப் மறுக்க முடியவில்லை.

"ஒன்றுமில்லை! இவ்வளவு உயரத்தில் இருந்து பார்க்கையில்தான் எங்கள் பூமி எவ்வளவு அழகாகத் தோன்றுகிறது... அங்கே உள்ள அழகற்ற இடங்கள்கூட இங்கிருந்து பார்க்கையில் எவ்வளவு ஒழுங்காகத் தானே காணப்படுகின்றன. அதனுல்தான் உயரே இருக்கும் இறைவனுக்கும் உலகத்தின் அவலமும் அலங்கோலமும் தெரிவதில்லைப் போலும்... அதனுல்தான் அவன் கஷ்டப்படுபவர்களை நினைத்துக் கவலைப்படுவதில்லையென நினைத்தேன்...அது தான்!"என வாசுகிஅமைதியாகக்கூறிச் சிரித்தது அந்தப் பெண்மணியின்மனதை மிகவும் கவர்ந்துவிட்டது.

வாசுகி சிரித்தவாறே அந்தப்பதிலைக் கூறினுலும் அவளுடைய முகத்திலே ஒரு ஆழமான சோகத்தின்பிரதிபலிப்பு காணப்பட்டதை அந்தப் பெண்மணி அவதானிக்கத் தவறவில்லை.

வாசுகியின் அடக்கமான அழகும் அவளுடைய கூற்றில் தொனித்த விவேகமும் சிறந்த ஆங்கில மொழிப் பிரயோகமும் அவரை மிகவும் கவரவே வாசுகியுடன் பேச மேலும் ஆசைப்பட்டாள் அந்த மாது.

அமைதியாக ஜன்னலினூடாகப் பார்த்துக் கொண்டிருந்தவாசுகியையே கண்கொட்டாமல் பார்த்தஅந்தமாது மீண்டும் வாசுகி தன் பக்கம் திரும்பியபோது அவளுடன் பேச்சுக் கொடுத்தாள்.

"மைடியர் கேர்ள்!...உனக்கு ஆட்சேபனை இல்லாவிடில் நான் உன்னோடு சற்றுப் பேசலாமா?" என அன்போடு கேட்டாள்.

வாசுகி இப்போது அந்தஅம்மையாரைச்சற்றுஊன்றிக் கவனித்தாள். அவருடைய முகத்தில் தெரிந்த சாந்தமும்

வாசுகியின் இதயத்தையும் கவரவே "ஓ! தாராளமாகப் பேசலாமே!" எனச் சம்மதம் தெரிவித்தாள் வாசுகி.

மரியானு எனப் பெயர் கொண்ட அந்தப் பெண் ஒரு டனிஷ் பெண்மணியெனவும் நேபாளத்தில் டனிஷ் தூதுவராலயத்தில் வேலை புரியும் மகளோடு சில நாட்களைக் கழித்துவிட்டு மீண்டும் டென்மார்க் திரும்பிக் கொண்டிருக்கிறார் என்பதும் தெரிய வந்தது.

தன்னுடைய கணவன் இறந்து பத்து வருடங்கள் ஆகின்றது எனவும் தனக்கு ஒரு மகனும் ஒரு மகளுமே பிள்ளைகள், அவர்கள் இருவருக்கும் எப்போ திருமணமாகி இப்போ இருவருமே விவாகரத்துப் பெற்றுக் கொண்டு வாழ்கின்றனர் என்பதை மரியானு கூறியபோது அவருடைய குரலில் தன் பிள்ளைகளின் செய்கைக்காக வருந்துவது போல் தெரிந்தது.

வாசுகி தன் பெயரைத் தெரிவித்துத் தான் ஒரு தமிழ்ப் பெண் எனவும், தான் இலங்கையிலிருந்து வருவதாகவும் சொன்னபோது "அப்படியா! அந்த அழகிய தீவிலிருந்தா வருகிறாய்?... அதுதான் இவ்வளவு அழகாக இருக்கிறாய் போலும்!... ஆனால் அங்கெல்லாம் நீங்கள் என்னுடைய பிள்ளைகளைப் போலச் சின்ன விஷயத்துக்கெல்லாம் முரண்பட்டு விவாகரத்து செய்வதில்லை இல்லையா?" என மரியானு கேட்டது வாசுகியின் நெஞ்சில் சுருக்கென்று தைத்தது.

அடுத்தது காட்டும் பளிங்குபோல வாசுகியின் முகம் வாடிப் போனதை மரியானு அவதானிக்கத் தவறவில்லை. இந்தப் பெண்ணின் வாழ்விலும் ஏதோ ஓர் ஆழ்ந்த துயரம் குடும்ப வாழ்க்கை சம்பந்தமாக நிகழ்ந்திருக்க வேண்டும் என்பதை ஊகித்துக் கொண்ட அவர் பேச்சை மாற்றுவதற்காக "வாசுகி! அண்மையில் உங்கள் இனத்துக்கு ஏற்படும் பிரச்சனைகள் பற்றிய செய்திகளை நான் பத்திரிகையில் படித்துக் கொண்டுதான் வருகின்றேன்... குறிப்பாக இளைஞர்களும் மாணவர்களும் மிகவுங் கொடுமையாகத்

துன்புறுத்தப் படுவதாகவும் அந்தப் பயத்தில் அவர்கள் நாட்டைவிட்டே ஓடி மேற்கு நாடுகளுக்குப் பெருமளவில் வருகிறார்களாமே...உன்னைப் பார்த்தால் கூட ஒரு பல்கலைக் கழக மாணவிபோல் தோன்றுகிறது... உனக்கும் பிரச்சனையா?" எனக் கனிவுடன் அந்த மாது கேட்டபோது தலையைக் குனிந்து கொண்டாள் வாசுகி.

அவளுடைய மௌனத்தைக் கண்ட மரியானு "என்னை மன்னித்துக்கொள் மகளே!...நான் ஏதாவதுவழவழவெனப் பேசிக் கொண்டிருப்பேன்... இவ்வளவு குறுகிய அறிமுகத்திலே உன் அந்தரங்கத்தில் பிரவேசிக்க முயன்றது என்னுடைய தவறுதான்!" எனச் சொன்னபோது "ஓ! நோ!... அப்படியெல்லாம் ஒன்றுமில்லை!" என்ற வாசுகியின் விழிகள் அந்த டனிஷ் பெண்மணி தன்மேல் காட்டிய மதிப்பையும் பரிவையும் கண்டு இலேசாகப் பனித்துப் போயின.

ஜன்னலுக்கு வெளியே பார்ப்பது போலத் திரும்பிக் கண்களை மெதுவாகத் துடைத்துக் கொண்ட வாசுகியை மறுபடியும் இப்போதுதான் பார்ப்பது போன்ற ஆர்வத்துடன் பார்த்தார் மரியானு.

ஏதேச்சையாக அவள் பக்கம் திரும்பிய வாசுகி அந்த மாது தன்னையே ஊன்றிக் கவனித்ததைக் கண்டு சற்று சங்கோஜப் பட்டுக் கொண்டாள்.

"வாசுகி! நான் உன்னையே பார்த்தது உனக்குச் சங்கடமாக இருக்கிறதா?... முதலில் உன்னுடைய முகத்தைப் பார்த்தபோது அறிமுகமான முகம்போலத் தோன்றியது... இப்போதுதான் அதற்குக் காரணம் எனக்குப் புரிந்தது. ஒரு சின்னக் கடற்கன்னியைப் பற்றி எங்கள் நாட்டில் ஒரு கதையொன்று உண்டு. அவளைச் சிலையாக வடித்து எமது கடற்கரையில் வைத்திருக்கின்றனர். உல்லாசப் பயணிகள் விரும்பிப் பார்க்கும் விஷயங்களில் அதுவும் ஒன்று. உன் அழகான அமைதியான முகத்தையும் அங்கு இழையும் ஒரு

இலேசான சோகத்தையும் பார்க்கையில் எமது சின்னக் கடற்கன்னியின் சாயல் உன்னிலும் காணப்படுகின்றது... அதனால்தான் நான் ஆரம்பத்திலிருந்தே உன்னுடைய அழகால் மிகவும் கவரப்பட்டேன்!'' எனக் கூறி மகிழ்ந்த போது வாசுகி ஆவல் நிறைந்தவளாய் அந்தக் கடற்கன்னி யைப் பற்றி விசாரித்தாள்.

கடற்கன்னியின் கதையைச் சுருக்கமாகக் கூற ஆரம் பித்தார் மரியானு.

இது ஒரு கற்பனைக் கதைதான். எமது பிரபல எழுத் தாளர் ஹோ.சி. ஆனசன் எழுதியது.

கடல்ராஜன் கடலின் கீழே தனது அழகான அரண் மனையில்தன் ஆறு புதல்விகளுடன் சந்தோஷமாக வாழ்ந்து வந்தான். இவனுடைய மனைவி மறைந்து போக இவனுடைய தாயாரே இந்த ஆறு கடற்கன்னிகளையும் அன்புடன் பராமரித்து வந்தாள்.

இடுப்புக்குக் கீழே மீனுடல் படைத்த இந்தக் கடற் கன்னியர் குலவழக்கப்படி அவர்களுக்குப் பதினைந்து வயது பூர்த்தியான பின்னரே அவர்கள் மேலே வந்து பூமியையும் அங்குவாழ் மனிதர்களையும் பார்க்க முடியும்! இந்த ஆறு பெண்களிலும் அற்புதமான அழகி இளையவளே. ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு பெண்ணும் முதன் முதலில் மேலே வந்து தாம் கண்ட காட்சிகள்; மனிதர்கள் பற்றிக் கூறும்போது இந்தக் கடைசிப் பெண் மிகவும் ஆவலோடு அவற்றையெல்லாம் கேட்பாள். மனிதர்களைக் காணவேண்டும் என்ற அவளது ஆவலை அதிகப்படுத்தும் வகையில் அவளுக்கு ஒரு அழகிய இராஜகுமாரனின் சிலை யொன்று கடலினடியில் கிடைத்தது. அதைத் தன் சின்னப் பூங்காவில் வைத்து அழகுபடுத்தி மகிழ்ந்தாள் அவள்.

ஈற்றில் அவளுக்குப் பதினைந்து வயதாகி அவள் கடற் பரப்புக்கு மேலே வந்தபோது அங்கே ஒரு அழகிய கப்பலை அவள் கண்டாள் அந்தக் கப்பலில் இருந்த ராஜகுமாரன்

இவளுடைய சிலையைப் போலவே அழகாக இருந்தான். அன்று அவனுக்குப் பிறந்த தினவிழா. இரவெல்லாம் அந்த விழா தொடர்ந்து நடந்தது. யாவரும் தூங்கிய பின்னரும் கூட அந்தக் கப்பலையே சுற்றிக் கொண்டிருந்தாள் இந்தச் சின்னக் கடற்கன்னி.

இந்நேரம் கடலில் பயங்கரப் புயலொன்று வீசி அந்தக் கப்பல் சுக்கு நூறுய்ப் போயிற்று. கடலினில் ஆழவிருந்த ராஜகுமாரனை இந்தக் கடற்கன்னி காப்பாற்றிக் கரைக்குக் கொண்டு சென்று கிடத்திவிட்டு யாரோ வரும் சத்தங் கேட்டுப் பாறைகளின் பின் மறைந்து கொள்கிருள். அங்கே பணிப்பெண்கள் சகிதம் வந்த அந்த நாட்டு ராஜகுமாரி அவனுக்கு சிகிச்சையளிக்க அரண்மனைக்கு அவனை எடுத்துச் செல்கிருள்.

இதற்குள் ராஜகுமாரன்மேல் தீராக் காதல் கொண்டு விட்ட கடற்கன்னியோ மனமுடைந்து போகின்ருள். தான்தான் அவனைக் காப்பாற்றியது என்று அவனுக்குத் தெரியாதே! இனி எப்போது அவனைக் காணலாம் என்றெல்லாம் ஏங்குகின்ருள். இரவில் நிலவு நாட்களில் அந்தப் பகுதிக்கு வந்து அங்கே பாறையொன்றில் அமர்ந்து அந்தப் பக்கம் வரமாட்டானு ராஜகுமாரன் என ஏக்கத் துடன் காத்திருப்பாள் அந்தப் பேதைப் பெண்.

நாளடைவில் இவளுடைய ஏக்கத்தைக் கண்ட சகோதரிகள் விஷயத்தை விசாரித்துத் தெரிந்து கொள்கின் றனர். அவர்கள் மூலம் இவளுக்கு அந்த ராஜகுமாரனின் கடலோரக் கோட்டை இருக்குமிடம் தெரிகின்றது. அங்கு சென்று, இரவில் உப்பரிகைக்கு வரும் அவனைக் கடல் அலைகளில் மறைந்து நின்று பார்த்து மகிழ்வாள்.

அவனை அடைய வேண்டுமெனில் தனக்கும் மனித உருவம் கிடைக்க வேண்டும் என எண்ணி கடலினடியில் வாழும் மந்திரவாதிக் கிழவியிடம் செல்கிருள். அவள் இவ

ளுக்கு ஒரு தைலத்தைக் கொடுக்கின்ருள். சூரியன் உதிக்கும் வேளையில் அந்தத் தைலத்தை கரையிலே சென்று நின்று குடித்தால் அவளுக்கும் மனிதர்களைப்போலக் கால்கள் கிடைக்கும். ஆனல் மிகவும் கொடிய வேதனையுடன்தான் உன் மீனுடல் கால்களாக மாறும். அப்படி மாறி நீ மிகவும் அழகாக நடந்தாலும் நீ நிலத்தில் வைக்கும் ஒவ்வொரு அடியும் கத்திமேல் நடப்பதுபோன்று வலியைக் கொடுக்கும். இது மட்டுமல்ல நீ இந்தத் தைலத்தைப் பெறவேண்டுமானல் உனது இனிமையான குரலை எனக்கு விலையாகத் தர வேண்டும் எனக் கிழவி சொல்கிருள்.

அரசகுமாரனுக்காக எந்த வேதனையையும் தாங்கிக் கொள்ளச் சித்தமான கடற்கன்னி எனக்குக் குரல் இல்லாவிடில் நான் எப்படி ராஜகுமாரனுடன் பேசமுடியும் என்கிருள். மேலானஒன்றை அடைவதற்கு மேலானதொன்றை இழந்தே தீரவேண்டும் எனக் கூறிய கிழவி, ஆனல் உன்னுடைய அழகிய கண்களே நீ நினைப்பதையெல்லாம் அழகாகப் பேசும் என்கிருள. கடற்கன்னி சம்மதிக்க மந்திரவாதிக் கிழவி அவளுடைய நாக்கை வெட்டி விலையாகப் பெறுகின்ருள்.

அடுத்தநாட் காலையில் அவள் கொடிய வேதனையை அனுபவித்துக் கால்களைப் பெறுகிருள். தனது கடற்கோட்டைப் படியருகில் அவளைக் கண்டு அந்த ராஜகுமாரன் தன்னுடன் அழைத்துச் செல்கின்ருன்.

கடற்கன்னியின் கருங்கூந்தலும் கதைபேசும் கண்களும் அவள் காற்றிலே மிதப்பது போலவும், கயல்மீன் நீந்துவது போல நடனமாடுவதும் அவனுடைய மனதை மிகவும் ஈர்த்து விடுகின்றன.

அவன் அவளை ஆசையுடன் பார்த்து என்னை ஒரு தடவை ஒரு கன்னி கடலில் காப்பாற்றினுள். உன்னுடைய முகம் அவளுடையது போலவே இருக்கின்றது...எப்படியாவது நான் அவளைத் தேடி மணம் புரியவேண்டும்.

இல்லையேல் உன்னையே என் மனைவியாக்கிக் கொள்வேன் என்று சொல்கிறான். நான அந்தக் கன்னியென்று சொல்ல முடியாமல் தவிக்கிறாள் கடற்கன்னி.

பின்னர் பெற்றோரின் வற்புறுத்தலுக்காக அயல்நாட்டு ராஜகுமாரியைப் பெண் பார்க்கச் செல்கின்றான் ராஜ குமாரன். கடற்கன்னியும் அவனுடன் கூடவே செல்கிறாள். அங்கே அந்த ராஜகுமாரியைக் கண்டபோது தன்னைக் காப்பாற்றியவள் அவள்தான் எனக்கண்டு திருமணத்திற்கு இசைகிறான்.

கப்பலுக்குத் தம்பதிகளாய் வருகின்றனர் மணமக்கள். கடற்கன்னியின் மனம் கலங்குகின்றது. அவளுக்குத் தன் பாட்டி சொன்ன ஒருவிஷயமும் ஞாபகத்துக்கு வருகின்றது. நீ விரும்பும் ராஜகுமாரன் உன்னை மணமுடிக்காது இன்னொருத்தியை மணந்தால் மண இரவு முடிந்த மறுநாள் உதயத்தில் நீ இதயம் வெடித்து கடற்நுரையாக மாறிவிடுவாய் என்பதை நினைத்து இன்று மட்டும் அவனுக்குச் சேவை செய்து நாளை இறந்துவிடுவேன் என மணமக்கள் உறங்கும் கூடாரத்தையண்டி நின்று கடலைப் பார்த்து தன் உறவை நினைக்கிறாள்.

அந்தநேரம் அவளுடைய ஐந்து சகோதரிகளும் கடலில் மிதந்து அவளிடம் வருகின்றனர். அவர்களுடைய அழகான அலை போன்ற கருங்கூந்தலைக் காணவில்லை. ராஜகுமாரனுக்கு மணம் முடிந்ததால் நாளைக் காலை உன்னுடைய உயிர் போய்விடுமென நாங்கள் கவலைப்பட்டு மந்திரவாதிக் கிழவியிடம் உதவிக்குப் போனோம். அவள் எங்களுடைய கூந்தலை விலையாகப் பெற்றுக்கொண்டு இதோ இந்தக் கத்தியைத் தந்திருக்கின்றாள். பொழுது விடிவதற்குள் நீ இந்தக் கத்தியால் ராஜகுமாரனுடைய இதயத்தைக் குத்தி அதிலிருந்து சிந்தும் ரத்தம் உன் கால்களில் பட்டால் மீண்டும் உனக்கு மீனுடல் கிடைத்துவிடும். எம்மிடம் மீண்டும் வந்துவிடலாம். அதோ கிழக்கு வெளுக்கிறது!

போ! எனக் கத்தியை கடற்கன்னியிடம் கொடுக்க அவளும் அதைப் பெற்றுக் கொண்டு கூடாரத்தினுள் பிரவேசிக்கின்றாள்.

அங்கே மணப்பெண்ணை அணைத்தவாறே அமைதியாக உறங்கும் தன் ராஜகுமாரனைக் கொல்ல மனதின்றி அவனுடைய நெற்றியில் முத்தமிட்டுக் கத்தியைக் கடலிலே எறிகின்றாள். ஆதவனின் முதற்கதிர்கள் வருகையில் இறப்பதற்குக் காத்திருக்கிறாள். ஆனால் அவள் சாவதற்குப் பதிலாக காற்றுருப் பெறுகிறாள். காற்றின் புதல்வியர் என மனிதர்களுக்கு நன்மை செய்யும் ஒருவகைத் தேவதைகள் அவளுடைய தூய காதலைப் பாராட்டி அவளையும் தம்மைப் போல் ஒருத்தியாக ஆக்கிக் கொண்டதே அதற்குக் காரணம். முன்னூறு வருடங்கள் அப்படி வாழ்ந்தபின் அவளுக்கும் மனிதர்களைப்போல் ஆத்மாவும் வாழ்வும் கிடைக்கும். அப்போதாவது தன்னுடைய ராஜகுமாரன் தனக்குக் கிடைப்பான் என்ற நம்பிக்கையுடன் அந்தச் சின்ன கடற்கன்னி இப்போ காற்றின் தேவதையாக உலவுகிறாளாம்!

என மரியானு கூறிய கதையை மிகவும் உணர்ச்சிபூர்வமாகக் கேட்டிருந்த வாசுகியின் விழிகளில் கண்ணீர் துளிர்த்திருந்தது.

கடற்கன்னிக்குப்போலவே எனக்கும் ஒரு ராஜகுமாரன் கிடைத்தான். ஒரு இரவிலேயே என் ஆவியை எடுத்துக் கொண்டு இன்னொருத்தியுடன் வாழச் சென்றுவிட்டான் அவனை மீண்டும் நான் அடைய முன்னூறு வருடங்கள் கடற்கன்னியைப் போலக் காத்திருக்க வேண்டுமா என அவளையுமறியாமல் மனதில் எழுந்த சிந்தனைகளுக்கு ஒரு முற்றுப்புள்ளியை வைத்துவிட்டு "நெஞ்சைத் தொடும் கதையாக இருக்கின்றதே...நான் கட்டாயம் அந்தக் கதையைப் படிக்க வேண்டும். அந்தக் கடற்கன்னியின் சிலையையும் பார்க்க வேண்டும்!" என்று சொன்னாள் வாசுகி.

''ஓ! நிச்சயமாக! நான் கதையை மிகவும் சுருக்கமாகத் தானே சொன்னேன்...மூலக்கதையைப் படித்துப் பார்க்க வேண்டும் நீ! அப்படியே அசந்து போவாய்!...அதுசரி...நீ எங்கே தங்கப் போகின்ருய்? உன்னுடைய வருகைக்குக் காரணம் என்ன?'' என அக்கறையோடு விசாரித்தாள் மரியாளு.

வாசுகியினுல் மரியானுவிடம் உண்மையை மறைக்க முடியவில்லே. ''எமது இளைஞர்கள் பலர் சந்தேகத்தின் பேரில் தேடப்படுகின்றனர். இத்தேடுதலின்போது பல அப்பாவி இளைஞர்களும் சிக்கி சித்திரவதைப் படுவதும், பல சமயங்களில் உயிரிழப்பதும் நமது நாட்டில் இப்போது மிகவும் சகஜம். எனவே பல பெற்ருேர் கஷ்டப்பட்டு காணிபூமியை நகைகளே விற்று தங்கள் பிள்ளைகளின் உயிர் பிழைக்க வேண்டுமென வெளிநாடுகளுக்கு அனுப்பிவைக்கின்றனர். இவர்கள் இங்கு மேற்கு ஐரோப்பிய நாடுகளில் அரசியல் தஞ்சம் கேட்டு வாழ்கின்றனர். இவர்களேப் போல் வந்தவள்தான் நானும்...எனக்கு விசேடமாக எதுவும் பிரச்சனைகள் அங்கு இல்லே. ஆனுல் என் வாழ்க்கையில் நடந்த ஒரு அசம்பாவிதத்தினுலே அங்கே வாழ நான் விரும்பவில்லே. எங்காவது நாட்டை விட்டே போய்விட வேண்டும் இல்லாவிடில் உயிரைப் போக்கிக் கொள்ள வேண்டும் போலிருந்தது...எனவேதான்...'' என்று ஒழிக்காமல் தன் நிலேயைக் கூறிய வாசுகியின் வாய்மை மரியானுவுக்கு மிகவும் பிடித்துப் போயிற்று.

''நீ ஒன்றுக்கும் கவலேப்படத் தேவையில்லே வாசுகி! கடவுள் கிருபையில் எனக்கு நிறையப் பணத்தை விட்டுச் சென்றிருக்கின்ருர் என் கணவர். கடற்கரையில் ஒரு வீடும், கார் போன்ற வசதிகளும் எனக்குண்டு. என் கணவர் வாழ்ந்த அந்த வீட்டில் என் பிள்ளைகள் என்னுடன்சேர்ந்து வாழ எனக்குக் கொடுத்து வைக்கவில்லே. எத்தனே ஆண்டுகள் வேண்டுமானுலும் அங்கு நீ என்னுடன் தங்கலாம்... உன்னே என் மகளாகவே பார்த்துக் கொள்வேன்!'' என

ஆசையோடு மரியாஞ வாசுகியின் கைகளைப் பிடித்துக் கொண்டு கேட்டபோது அவளுடைய அன்பு வேண்டு கோளை வாசுகியினுல் மறுக்க முடியவில்லை.

வாசுகியின் சம்மதம் கிடைத்ததுமே ஆனந்தத்தில் அவளை முத்தமிட்ட மரியாஞ "கடவுள் அருளில் நான் இனி மேலும் வீட்டில் தனியே இருக்கத் தேவையில்லை!...எனக் கொரு மகள் கிடைத்து விட்டாள்!" என்று பெருமைப் பட்டுக் கொண்டாள்.

'இன்னமும் சில நிமிடங்களில் கொப்பன்ஹேகன் எயர் போர்ட்டை விமானம் அடையும்' என அறிவித்தல் வந்த போது நேரம் எவ்வளவு விரைவாகக் கழிந்துவிட்டதை உணர்ந்து சிரித்துக் கொண்டனர் இருவரும்.

விமான நிலையத்தின் வரவேற்பு மண்டபத்தில் மரியாஞவின் மகன் வழிப்பேரன் காஸ்ரன் அவளுக்காகக் காத்திருந்தான்.

மரியாஞ வாசுகியுடன் வெளியே வந்ததுமே அவளைக் கன்னத்தில் இலேசாகமுத்தமிட்டவன் "எனக்குஇந்தமுறை என்ன பரிசு கொண்டு வந்திருக்கிறீர்கள்?" எனக் கேலி யாகக் கேட்டதற்கு "உனக்கு இம்முறை எங்கள் சின்னக் கடற்கன்னியையே பரிசாகக் கொண்டுவந்திருக்கின்றேன்... இதோ! என் இன்னொரு மகள்! பெயர் வாசுகி!" எனக் குறும்புடன் வாசுகியை மரியாஞ அறிமுகப்படுத்தியபோது வியப்பினுல் கண்கள் விரிய "நிஜமாகவே எங்கள் கடற் கன்னியைப் போலவே தான் காணப்படுகிருள் இந்தச் சின்னப்பெண்...ஆனுல் நல்ல காலம்! கால்கள் இருக் கின்றன!" என்று சிரித்தான் காஸ்ரன்.

"வெல்கம் ரு டென்மார்க்!" என வாசுகியை வரவேற்று அவர்களைக் காருக்கு அழைத்துச் சென்ருன்.

காரில் போகும்போதே வாசுகியையும் காஸ்ரனையும் ஒருவருக்கொருவர் விபரமாக அறிமுகப்படுத்தி வைத்தாள் மரியாளு."

காஸ்ரனுக்கு வயது இருபத்திஐந்தெனவும் டாக்டருக் குப் படித்துக் கொண்டுருப்பதாகவும் மரியாளு சொன்ன போது காஸ்ரன் "இங்கெல்லாம் உங்களுடைய நாடுபோல ஆறு ஆண்டுகளில் நாங்கள் முழு டாக்டராகிவிட முடி யாது...எட்டுப்பத்து ஆண்டுகள் செல்லும் இதற்கிடையில் நாம் உலகத்தைப் பார்ப்பதற்காக விடுமுறை எடுத்துக் கொண்டு ஊர் சுற்றுவதும் உண்டு. எல்லா நாடுகளையும் பார்க்க வேண்டும். நிறைய மனிதர்களோடு பழக வேண்டும் என்ற ஆசை எனக்கு நிரம்பவும்அதிகம்!" எனத் தன்னைப் பற்றிச் சொல்லிக் கொண்டவன் கூடவே "வருங் காலத்தில் ஒரு மனோதத்துவ டாக்டர் என்ற முறையில் எனக்கு இங்கே நிறைய வேலை இருக்கப்போகின்றது. அதை நினைத்தால் தான் பயமாக இருக்கிறது!" எனக் காஸ்ரன் சற்று விஷமமாகக் கூறியபோது வாசுகிக்கு அது ஏன் எனப் புரியவில்லை. மரியாளுவும் "ஏன் காஸ்ரன் அப்படி?" என்று கேட்டபோது "பின் என்ன? இங்கெல் லாம் சமுதாயத்தில் குடும்பம் என்ற அமைப்பு வரவரச் சிதைந்து கொண்டே போகிறது. விவாகரத்துச் செய்து கொள்பவரின் எண்ணிக்கை வளர்ந்து கொண்டே போகிறது அமெரிக்காவில் இப்போதெல்லாம் கோர்ட் டாருக்கு நேரம் விரயமாகின்றதே என்று எட்டுப் பத்துப் பேர் கூட்டாகவே விவாகரத்துச் செய்து கொள்கிறார் களாம். அறுபது டொலர் செலவில் பதினைந்து நிமிடங் களில் விஷயம் முடிந்து விடுகின்றதாம்!

நல்ல காலம்! இங்கு இன்னமும் அந்த வேகம் இல்லை! குடும்ப அமைப்பில் ஈடுபட முடியாதவர்கள் ஏன்தான் பின்னர் குழந்தைகளைப் பெற்றுத் தவிக்க விடுகிறார்கள்! பெற்றோரின் அன்பு முழுமையாகக் கிடைக்காமல் மன மொடிந்து மனநோயாளிகளாக எத்தனை குழந்தைகள்

இங்கு உருவாகின்றன தெரியுமா?'' எனச் சற்று சூடாகவே பேசிக் கொண்டு வந்தான் காஸ்ரன்.

''நல்ல காலம்! எனக்கு உன்னைப்போல் ஒரு அன்பான அப்பம்மாவும் அப்பப்பாவும் கிடைத்தது என்னுடைய அதிர்ஷடம். ஆனால் இனிமேல் வருங்காலத்தில் இந்த தாத்தா பேத்தி ஜாதியே இங்கு அழிந்து விடும் போல் தோன்றுகிறதே! கிறீன்லாந்திலுள்ள திமிங்கிலங்களையும், ஆபிரிக்காவில் உள்ள வனவிலங்குகளையும் பாதுகாக்கத் துடிக்கும் இந்த உலக ஸ்தாபனங்கள் விரைவில் உன்னைப் போன்ற தாத்தா பேத்தி இனத்தையும் உலகில் இருந்து அழிந்து போகாமல் பாதுகாப்பதற்கு முன் வரவேண்டும்!'' என உண்மையும் கேலியுமாகப் பேசிக்கொண்டு வந்த காஸ்ரனின் கலகலப்பான சுபாவம் வாசுகிக்கு வெகுவாகப் பிடித்திருந்தது.

கடற்கரையோரமாக இருந்த அந்த அழகிய வில்லாவுக்கு அவர்கள்வந்தபோது மத்தியானமாக இருந்தது .சமர் நாட்களாதலால் வீட்டின் முன்பாகவிருந்த பூந்தோட்டத்தில் பலவகை ரோஜாக்களும் வேறு மலர்களும் பூத்துக் குலுங்கின.

''இந்த இரண்டு வாரமும் உன்னுடைய காரையும் இந்த வீட்டையும் பராமரிப்பதற்குள் எனக்குப் போதுமென்றாகி விட்டது. இந்தா இரண்டு சாவிகளும்!'' எனக் குறும்பாகச்சொன்னவாறே காஸ்ரன் காரிலிருந்துஇறங்கிய போது ''உனக்குத்தான் இந்த வேலைக்கெல்லாம் எக்ஸ்ரா வாகப் பணம் கொடுக்கிறேனே!...உள்ளே வந்து எம்முடன் ஏதாவது சாப்பிட்டுவிட்டுப் போயேன்!... இனிமேல் உன்னுடைய கொலிஜ்ஜியமே கதியென்று இருந்து விடாதே!... இனிமேல் இந்த அழகான பெண் என்னுடன் தான் இருப்பாள்... என்னைப் பார்க்க வராவிட்டாலும்... இந்த கால்முளைத்த கடற்கன்னியைப் பார்க்கவாவது வர மாட்டாயா!'' என விளையாட்டாக மரியானு கூறியபோது

அவளருகே வந்து அவளை அணைத்துக்கொண்டு "இந்த உலகத்திலேயே மிகவும் அழகான, எனக்குப் பிடித்தமான பெண் யார் தெரியுமா?... அது நீதான் அப்பம்மா!... ஏன் தெரியுமா? என்னைப் பெற்றவள் பிரிந்து போக எனக்கு அம்மாவாய் ஆகிப்போனது நீயல்லவா... அதனால்தான்!" என மரியாளுவின் கன்னத்தில் காஸ்ரன் முத்தமிட்டபோது அவளால் கண்ணீரைக் கட்டுப்படுத்த முடியவில்லை. வாசுகிக்குப் கண்கள் கலங்கிப் போயின.

"சரி சரி! உள்ளே வா... வாம்மா வாசுகி!" என அவர்களை அழைத்துக் கொண்டு வீட்டுக்குள் நுழைந்தாள் மரியாளு.

## 19

அன்று சனிக்கிழமை. ஸ்ரீதரனும் வீட்டிலிருந்தான் காலையில் வீட்டுக்கு வந்திருந்த கடிதங்களில் ஒன்றில் வாசுகியின் கையெழுத்தைக் கண்ட போது அதை முதலில் பிரித்துப் பார்த்தான் ஸ்ரீதரன்.

டென்மார்க்கிலிருந்து வாசுகியே எழுதியிருக்கவே அவசரமாகக் கௌரியைக் கூப்பிட்டுக்கடிதத்தை அவளிடம் கொடுத்து உரக்கப் படிககச் சொன்னாள். வாசுகியின் கடிதம் என்றதுமே பரபரப்புடன் கடிதத்தைப் படித்தாள் கௌரி.

அன்பு நிறைந்த அத்தானுக்கும் அக்காவுக்கும்!

நான் எதுவிதப் பிரச்சனையுமின்றி இங்கே டென்மார்க் வந்து சேர்ந்துள்ளேன். விமானத்தில் வருகையில் எனக்கு ஒரு நல்ல டனிஷ் பெண்மணியின் அறிமுகமும் நட்பும் கிடைத்தது. நான் இப்போது அவருடனேயே தங்கியிருக்கின்றேன். அழகான வீடு. சகல வசதிகளும் உண்டு.

எழுபது வயதிலும் இப்போதும் திடகாத்திரமாயும் சுறுசுறுப்புடன் இருக்கும் மரியானா என்ற இந்த மாது கணவர் இறந்து போக இந்த வீட்டில் தனியாகத்தான் வாழ்கின்றா இரண்டு பிள்ளைகளில் மூத்தவர் மகன். இப்போது அமெரிக்காவில் வாழ்கின்றார். இவருக்குத் திருமணமாகி ஒரு ஆண் குழந்தையும் பிறந்த பின்னர் அந்தக் குழந்தை இரண்டு வயதாக இருக்கையிலேயே அவருடைய மனைவி விவாகரத்துப் பெற்றுக் கொண்டு பிரிந்துவிட்டார். அந்த மனமுறிவில் மகனும் அமெரிக்கா போய்விடவே அந்தக் குழந்தையை மரியானாவும் கணவருமே வளர்த்து வந்திருக்கின்றனர். அந்தப் பேரன் இப்போது மனோதத்துவப் பிரிவில் டாக்டருக்குப் படித்துக் கொண்டிருக்கிறார். மரியானாவின் இரண்டாவது பிள்ளை ஒரு பெண். அவர் இப்போது நேபாளத்தில் டனிஷ் தூதுவராலயத்தில் கடமையாற்றுகின்றார். அந்த மகளும் திருமணமாகி பின் விவாகரத்துப் பெற்றுக் கொண்டு தனியேதான் வாழ்கின்றாளாம். மரியானா அவரிடத்துக்குச் சென்று திரும்புகையில் தான் என்னை மஸ்கோவில் சந்தித்தார்.

கணவனும் இறந்து, பேரனும் தன்வயதொத்த மற்ற மாணவ மாணவிகளுடன் கொலிஜியம் என்று அழைக்கப்படும் ஹாஸ்டல் போன்ற ஒன்றில் வாழப் போய்விடவே மரியானாவைத் தனிமை வருத்தலாயிற்று.

இதனால் அடிக்கடி வெளிநாடுகளுக்குச் செல்வது மரியானாவின் பொழுதுபோக்க இருந்தாலும் இப்போது தன்னால் அந்தப் பயணங்களை அவ்வளவாக ரசிக்க முடியவில்லை எனச் சொல்கிறார்,

என்னைத் தன் மகள் போலவே மிகவும் பிரியத்துடன் தன்கூடவே தங்க வைத்துள்ளார்.

நான் வந்து ஒரு நாளாகவில்லை. அதற்குள் இந்த நாட்டுமொழியை நான் முறையாகக் கற்பதற்கு ஒருமொழிப் பாடசாலையில் எனக்கு இடம் எடுத்துவிட்டார். நான்

இன்னமும் எனது சொந்தப் பிரச்சனை பற்றி எதுவும் அவரிடம் சொல்லவில்லை.

இறைவனுடைய அருளும் உங்களுடைய ஆசியும் எனக்கு இருப்பதனால் தான் இப்படியொரு அன்பான அன்னை எனக்குக் கிடைத்திருக்கின்றார். இங்கு மேலே படிப்பதற்கு நிறைய வாய்ப்புக்களும் புதிய துறைகளும் உள்ளன என மரியானு சொல்கின்றார்.

வீட்டைவிட்டுப் புறப்படும் போது என்னுடைய கடந்த கால வாழ்க்கையை மறந்து ஒரு புதிய பிறவி எடுக்க வேண்டும் என்ற வேகத்தில் உங்களுக்கெல்லாம் சொல்லாமல் கூட வந்ததை எண்ணி மிகவும் கவலைப் பட்டேன். அக்காவும் குழந்தைகளும் இப்போது என் கண்ணுக்குள் நிற்கிறார்கள். பதில் எழுதுகையில் உங்களுடைய குடும்பப் படம் ஒன்றை அவசியம் அனுப்பி வைக்கவும்.

நான் நல்லதொரு இடத்துக்கு வந்துவிட்டேன். மேலே படிப்பதற்கும் முன்னேறுவதற்கும் இங்கு வாய்ப்பும் உதவி யும் எனக்குண்டு என்பதை அத்தான் நிச்சயமாகப் புரிந்து கொள்வார் என்பது எனக்குத் தெரியும். எனவே அத்தா னுடைய ஆறுதல் மொழிகளைக் கேட்டு சந்தோஷமாயிரு அக்கா! என்னைப் பார்க்க வேண்டுமென்றால் அடுத்த சமருக்கு நீங்கள் இங்கு வந்து போகலாம் அல்லவா! அண்ணன் அண்ணிமாருக்கு போன் பண்ணி எனது சுகத்தையும் அன்பையும் தெரிவிக்கவும். நாளை அவர் களுக்குக் கடிதம் எழுதுவேன். என்னுடைய விலாசத்தை வேறு யாருக்கும் கொடுக்க வேண்டாம். அடிக்கடி கடிதம் எழுதுவேன். கவலைப்பட வேண்டாம். குழந்தைகளுக்கு எனது அன்பு முத்தங்களைக் கொடுக்கவும். உனக்குந்தான் அக்கா! அன்பு மகள் வாசுகி.'

எனக் கடிதத்தைப் படித்து முடித்த கௌரியின் கண் களிலிருந்து இரண்டு சொட்டுக் கண்ணீர் சிந்தின.

அதைக் கவனித்த ஸ்ரீதரன் "பார்த்தாயா கௌரி வாசுகி எவ்வளவு பொறுப்புணர்ச்சியுடன் கடிதம் எழுதியிருக்கின்றாள்! புதிய இடமும் புதிய மனிதர்களும் அவளுடைய மனக் காயத்தை நிச்சயம் மாற்றும். அதுசரி... இது என்ன ஆனந்தக் கண்ணீரா? இல்லை கவலைக் கண்ணீரா?" எனச் சற்றுக் கேலியாகக் கேட்டபோது "இரண்டுந்தான்!" என்று பதில் சொன்ன கௌரி தமையன்மாருக்கு வாசுகியின் நல்ல செய்தியைத் தெரிவிக்க போனை நாடி ஓடினாள்.

# 20

காஸ்ரன் கொப்பன் ஹேகனில் புதிதாக ஆரம்பித்திருந்த ஸைகீயாற்றிக் கிளினிக்கில் வாசுகி வேலைக்குச் சேர்ந்து இரண்டு வாரங்கள் ஆகியிருந்தன.

காலையிலே கிளினிக்குக்கு வந்து பிளாஸ்டிக் சுவர்க் காலண்டரில் திகதியை மாற்றிய வாசுகிக்கு காலந்தான் எவ்வளவு விரைந்து கழிந்துவிட்டதென்பதைப் பார்க்கையில் வியப்பாக இருந்தது.

யாவும் ஒழுங்காக இருக்கின்றனவா என ஒரு தடவை கிளினிக்கை செக்பண்ணித் திருப்திப் பட்டவளாய் தனது இருக்கையில் வந்து அமர்ந்தாள் வாசுகி.

சகல வசதிகளுங் கொண்ட அந்த நவீன கிளினிக்கில் றிசெப்ஷனீஸ்டாக அவளை வேலை பார்க்கும்படி காஸ்ரன், கேட்டுக் கொண்ட போது வாசுகிக்குத் தன் காதுகளையே நம்ப முடியவில்லை.

"என்ன காஸ்ரன் இது' இன்னமும் எனக்குச் சரியாக டனிஷ் பேசவே முடியவில்லை. எப்படித்தான் என்னால் உங்கள் கிளினிக்கில் ஒழுங்காக வேலை செய்ய முடியும்

எனப் பயந்த போது "வாசுகி! நீ இந்த ஏழெட்டு மாதங்களுள்தான் எவ்வளவு அழகாக டனிஷ் பேசக் கற்றுக் கொண்டிருக்கின்றாய்! அதுவே அழகாகப் போதும்! உன்னை என்ன டனிஷில் கவிதையா பாடச் சொல்கிறேன். போனைக் கவனித்து அப்பாயின்ட்மென்ஸ் எடுக்கவும். கிளினிக்குக்கு வருபவர்களை வரவேற்று உபசரிப்பதும் உனக்குக் கஷ்டமாகவே இருக்காது...மேலும் என்னுடைய கிளினிக்குக்கு வருபவர்கள் யாவருமே மிகவும் பணக்காரப் பெண்களாகத்தான் இருப்பார்கள். அவர்களுக்கு நன்றாகவே ஆங்கிலம் தெரியும்... பிரச்சனை வந்தால் இலகுவாகச் சமாளித்துக் கொள்ளலாம்...இரண்டொரு வாரங்கள் நீ வேலை செய்துதான் பாரேன்!" என வற்புறுத்தினான் காஸ்ரன்.

அவர்கள் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்த மரியானுவும் வாசுகிக்கு ஊக்கமளிக்கவே வாசுகி தயக்கத்துடன் ஒப்புக் கொண்டாள்.

இந்த ஏழெட்டு மாதங்களில் காஸ்ரன் அடிக்கடி பேத்தியார் வீட்டுக்கு வசதி கிடைக்கும் போதெல்லாம் வந்து போனதால் அவனுக்கும் வாசுகிக்கும் இடையே நெருங்கிய பழக்கம் ஏற்பட்டிருந்தது. எப்போதும் கலகலப்பாகச் சிரித்துப் பேசும் காஸ்ரனுடைய பண்புகளும், விவேகமும், நகைச்சுவை உணர்வும் வாசுகியின் மனதைக் கவர்ந்ததில் வியப்பில்லைத்தான். மரியானுவின் பாசத்திலும் காஸ்ரனின் நட்பிலும் வாசுகி தன் பழைய கவலைகளையெல்லாம் மறந்து டனிஷ் படிப்பதிலும் மரியானுவுக்கு உதவியாக வீட்டைக் கவனித்துக் கொள்வதிலும் சந்தோஷமாக ஈடுபட முடிந்தது.

இப்போது கைநிறையச் சம்பளத்துடன் வெள்ளை யூனிபார்ம் அணிந்து அந்த நவீன கிளினிக்கில் வரவேற்பாளராக வேலை பார்ப்பது வாசுகிக்குப் பெருமையாகவும் சந்தோஷமாகவும் இருந்தது.

அந்த மனநிறைவில் அவள் தனக்குள் மகிழ்ந்து கொண்ட போது கதவைத் திறந்து கொண்டு ''குமோண்'' எனக் காலை வாழ்த்துக் கூறியவாறு வந்த நர்ஸ் நீனு தன்னை மறந்து உட்கார்ந்திருந்த வாசுகியை விழுங்கிவிடுவது போலப் பார்த்து ''வாசுகி! உன்னைப் பார்த்தால் எனக்குப் பொறுமையாக இருக்கிறது. நாளுக்கு நாள் உன்னுடைய அழகு அதிகரித்துக் கொண்டு வருகிறதே! அது எப்படி வாசுகி?'' என அவள் நிஜமான ஆர்வத்துடன் கேட்ட போது வாசுகிக்கு வெட்கம் வந்தது. ''ஓ! வட் எ பியூட்டிபுல் பிளஷ்!'' எனக் கூறிய நீனு ''நான் மட்டும் ஒரு ஆணாக இருந்தால் உன்னை அப்படியே கட்டிப்பிடித்து...'' என்று சொல்வதற்கிடையில் வாசுகி ''அதோ டாக்டர்!'' என எச்சரித்தாள். நீனு தான் சொல்ல வந்ததை சட்டென நிறுத்திவிட்டு வாசல் பக்கம் பார்த்தாள்.

அங்கு எவரையும் காணவில்லை. போலிக் கோபத் துடன் வாசுகியின் மூக்கைப் பிடித்து ஒரு தடவை ஆட்டி விட்டு ''உன்னை அப்புறமாகக் கவனித்துக் கொள்கிறேன்!'' எனச் சொல்லிவிட்டு அன்றைய அலுவல்களைக் கவனிப் பதற்காக உள்ளே போய் விட்டாள்.

சரியாக ஒன்பது மணிக்குக் காஸ்ரன் வந்த போது எழுந்து நின்று காலை வணக்கம் கூறிய வாசுகிக்குப் பதில் வணக்கம் சொன்ன காஸ்ரன் ''வாசுகி! உனக்கு எத்தனை தடவை சொல்லியிருக்கிறேன் இப்படி எழுந்து நின்று எனக்கு மரியாதை செய்ய வேண்டாம் என்று!'' எனக் கூறியபோது வாசுகி தலையைக் குனிந்து கொண்டு மெல்லச் சிரித்தாளே அல்லாது சீட்டில் உட்காரவில்லை.

அவளைப் பிடித்துப் பலவந்தமாக வீட்டில் அமரச் செய்த காஸ்ரன் ''வாசுகி!...நீ எப்போதுதான் நமது நாட்டுப் பழக்கங்களைக் கற்றுக் கொள்ளப் போகிறாய்?'' என்று கேலி செய்தபோது ''எமது நாட்டின் இந்தப் பழக்கம் எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது... வயதிற்

பெரியவர்களுக்கும் மதிப்புக்கு உரியவர்களுக்கும் நாம் கொடுக்கும் மரியாதை இது!'' என்று வாசுகி சிரித்துக் கொண்டே சொன்னாள்.

அவள் சொன்னதைக் கேட்ட காஸ்ரன் ஒரு கணம் அமைதியாகப் போன காஸ்ரன் ''நீ சொல்வதிலும் ஒரு உண்மை உண்டுதான்...வேற்று நாடென்றால் என்ன... அந்தந்த நாட்டின் நல்ல வழக்கங்களை நாமும் மதிப்பது அவசியந்தான்!'' என்று சொன்னவன் சட்டென்று தன் இரு கைகளையும் குவித்து ''வணக்கம்! வாசுகி!'' என்று தமிழில் சொன்ன போது வாசுகி குப்பென்று சிரித்து விட்டாள். அவன் வாசுகியிடம் கற்றுக் கொண்ட சில தமிழ்ச் சொற்களை இப்படி நினையாப் பிரகாரமாய் உபயோகித்து மகிழ்வதுண்டு.

காஸ்ரன் சிரித்துக் கொண்டே தனது அறைக்குப் போய்விட்ட பின்னர் நிறைவான மனதுடன் அன்றைய வேலைகளை உற்சாகத்துடன் கவனிக்க ஆரம்பித்தாள் வாசுகி.

வழமை போலவே மாலை வேலை முடிந்த போது காஸ்ரன் தன் காரில் வாசுகியையும் ஏற்றிக் கொண்டு மரியானு வீட்டுக்குப் புறப்பட்டான்.

தன்னுடைய வசதி கருதி கொப்பன்ஹேகனில் ஒரு சிறிய அபார்ட்மென்டில் தங்கியிருந்த காஸ்ரன் வாசுகி வேலைக்குச் சேர்ந்த பின்னர் ஒவ்வொரு நாளும் மாலையில் அவளை வீட்டுக்கு அழைத்துச் சென்று அங்கேயே அவர்களுடன் இரவு உணவையும் அருந்திவிட்டு தன் இருப்பிடத்திற்கு திரும்பிவிடுவது வழக்கமாகிப் போய்விட்டது. காலையில் வாசுகி ரெயினில் வேலைக்குப் போவாள்.

இந்த நாட்களில் அவளுடன் காரில் வரும்போது காஸ்ரன் அவளிடம் தமிழர்களுடைய பழக்கங்கள் பண்பாடுகள் கலாச்சாரம் இவை பற்றி கேள்வி மேல் கேள்வி

யாகக் கேட்டுக்கொண்டே வருவான். வாசுகியும் தனக்குத் தெரிந்தமட்டில் அவனுடைய கேள்விகளுக்குப் பதில் சொல்லிக் கொள்வாள். அவன் ஏதோ ஒரு ஆராய்ச்சிக் கட்டுரை எழுதிக் கொண்டிருப்பது வாசுகிக்குத் தெரியும். ஒருவேளை அதற்காகத்தான் இப்படித் துருவித் துருவிக் கேட்கின்றானோ என்று வாசுகி நினைப்பதுண்டு.

இன்றும், காரை அனாயசமாகச் செலுத்திக்கொண்டே அவன் "வாசுகி! உங்கள் நாட்டில் திருமணமாவதற்கு முன் ஆணும் பெண்ணும் நெருங்கிப் பழகுவதையோ உறவு கொள்வதையோ உங்கள் கலாச்சாரம் அனுமதிப்பதில்லை என்பது எனக்குத் தெரியும். ஆனால் இங்கெல்லாம் அப்படி யில்லை... திருமணம் செய்வதற்கு முன்னரே மனதுக்குப் பிடித்தவர்களுடன் பழகி சரியானதொரு துணையைத் தேர்ந்தெடுப்பதற்காக உறவும் கொள்கிறார்கள். நன்றாக நீச்சல் தெரியாமல் யாராவது ஆற்றில் நீந்தப் போவார் களா? அதைப் போலவேதான் திருமணமும் என நான் நினைக்கின்றேன்... நீ என்ன சொல்கிறாய்?" எனக் காஸ்ரன் சீரியஸாகக் கேட்டபோது வாசுகி அவனை ஏறிட்டுப் பார்த் தாள்.

அங்கு அவன் முகத்தில் எதுவித விஷமமோ விகாரமோ தெரியவில்லை. ஆறாம் வகுப்பில் இருந்தே பால் கல்வி போதிக்கப்படும் டென்மார்க்கில் இந்த விஷயங்களெல்லாம் மிகவும் இயல்பாகப் பேசப்படுவதை வாசுகி ஓரளவுக்கு அறிந்திருந்தாள்.

"சரியானதொரு துணையைத் தேர்ந்தெடுக்க அப்படி யெல்லாம் பழகியுங்கூட உங்கள் நாட்டில் ஏன் முக்கால் பங்கு திருமணங்கள் விவாகரத்தில் முடிகின்றன காஸரன்?" என வாசுகி அமைதியாகக் கேட்டபோது காஸ்ரனால் அவளுக்கு உடனே பதில் சொல்ல முடியவில்லை.

அவளுடைய பதிலுக்குக் காத்திருக்காமல் மேலே பேசினாள் வாசுகி,

''நன்ருக நீச்சல் தெரியாமல் ஆற்றில் இறங்கமுடியுமா என்று கேட்டீர்கள். நாய்க்குட்டி பூனைக்குட்டியெல்லாம் முதன்முதலில் தண்ணீரில் போட்டதும் நீந்துகின்றன அல்லவா? உங்களுடைய கேள்வி நம்முடைய நோக்கத்தைப் பொறுத்தது என நான் நினைக்கிறேன். ஆற்றில் எதற்காக இறங்குகின்ருேம்? ஆற்றைக் கடப்பதற்கா அல்லது நீந்துவதற்கு மட்டுந்தாஞ?'' என வாசுகி கேட்டபோது காஸ்ரன் சற்று அசந்துதான் போனுன்.

''காஸ்ரன்! சமுதாயத்தின் மிகச் சிறியதும் அடிப்படையானதுமான குடும்பம்என்பது ஒருகோவில்,பல்கலைக்கழகம், கடல் என்று தமிழில் சொல்வார்கள். உரிய வயதில் மணஞ் செய்து இல்லறம் நடத்தும் தம்பதிகளுக்கு இந்த உலகில் எத்தனையோ கடமைகள் உள்ளன. பெற்ருேரை உற்ருேரை பேணுவது, விருந்தினரை உபசரிப்பது, நல்ல பிள்ளைகளைப் பெற்று அவர்களைச் சமுதாயத்துக்கு உதவும் வகையில் வளர்ப்பது, பின்னர் குடும்பத்தில் இருந்துகொண்டே துறவியாக மாறுதல் போன்ற எத்தனையோ விஷயங்கள் சம்சாரம் என்னும் சமுத்திரத்தில் உள்ளது. ஆணும் பெண்ணுமாகக் கைகோர்த்து ஒருவரையொருவர் தாங்கிக் குடும்பம் என்ற கடலைக் கடப்பதுதான் நோக்கமேயொழிய நீந்துவது மட்டுந்தான் நோக்கமல்ல. இல்லறத்தின் இறுதிப் பகுதியை நீந்தாமலேயே மிதந்தே செல்லக்கூடிய ஆற்றலும் இவர்களுக்கு வந்துவிடுவதை நீங்கள் அவதானிக்கலாம்'' என ஒரு சிறிய பிரசங்கமே செய்தாள் வாசுகி.

''அப்பாடி! இவ்வளவு விஷயங்களை இத்தனை தெளிவாக உன்ஞல் கூறமுடிகிறதே! இவற்றையெல்லாம் உங்கள் கல்லூரிகளில் கற்றுத் தருவர்ர்களா?''

''இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகள் பழமையான ஒரு நூல் எமது தமிழில் உண்டு காஸரன். அதில் இந்த உலகத்தின் எல்லா விஷயங்களுமே அடங்கியிருக்கின்றன. இருபது பக்கங்களில் நாங்கள் விளக்கமுடியாத விஷயத்தை அந்த நூலாசிரியர் இரண்டே வரியில் தெளிவாகக் கூறி

விடுவார். இந்த நூலின் சில பகுதிகளை எமது பாடசாலைகளில் சிறு வயதிலிருந்தே சொல்லிக் கொடுக்கிறார்கள். எனக்கொரு நல்லதமிழாசிரியை வாய்த்தது என் பாக்கியம். அவர் ஊட்டிய ஆசையில் நானே மேலும் அந்த நூலைப் படித்துப் பல விஷயங்களை ஓரளவு புரிந்து கொண்டேன்!

''அது என்ன நூல்? மொழி பெயர்ப்பு உண்டா?''

''அதன் பெயர் திருக்குறள்! உலகத்தின் முக்கியமான மொழிகளிலெல்லாம் அது உள்ளது. ஆனால் டனிஷில் கிடையாது!'' எனக் குறும்பாகச் சிரித்தாள் வாசுகி,

''ஓஹோ! எமது மொழி உலகத்தின் முக்கியமான மொழிகளில் ஒனறில்லையாக்கும்! ஏன் நீயே எமது மொழியில் பாண்டித்யம் பெற்று அதை மொழி பெயர்க்கலாமே!'' என அதே குறும்புடன் காஸ்ரன் பதிலளித்தபோது ''உங்களுடைய பாஷையைச் சரியாகப் பேசவே முடியவில்லையே! அதிலே பாண்டித்யம் பெறுவதென்றால் அதற்குள் நான் குடுகுடு கிழவியாய்விடுவேன்!' எனக் கலகலவெனச் சிரித்தாள் வாசுகி.

''நோ...!நோ!...நீ மட்டும் கிழவியாய்ப் போவதை என்னால் பொறுக்கமுடியாது வாசுகி! கடற்கன்னிமாருக்கு வயது முன்னூறு ஆண்டுகளாம். எனவே நான் முதிர்வயது வந்து இறக்கும்போது நீ இளமையாகத்தான் இருப்பாய்!'' எனக் காஸ்ரன் வேடிக்கையாகக் கூறியதை வாசுகி கேட்டபோது இதில் வேடிக்கை மட்டுந்தானா அல்லது ஏதாவது விஷயமும் பொதிந்திருக்கின்றதா என்பதை அறியக் காஸ்ரனுடைய முகத்தைப் பார்த்தாள் வாசுகி.

வெள்ளை மனதையே எப்போதும் பிரதிபலிக்கும் அந்த இளையமுகம் இப்போதும் களங்கமின்றியேகாணப்பட்டது.

''வாசுகி! உங்கள் இனப்பெண்கள் எல்லோருமே இந்த வகையில் மிகவும் அறிவும் பொறுப்புணர்வும் உடையவர்

களா? அந்த வகையிலே அவர்களுக்கு இளமையிலிருந்தே கல்வி போதிக்கப்படுகின்றதா?''

''எம்மினப் பெண்களில் பாடசாலைப் பக்கம் போகாதவர்களுக்குக்கூட இந்த மாதரி பொறுப்புணர்வு நிறைய உண்டு காஸ்ரன்... ஒரு பெண் குழந்தையாக இருக்கையிலேயே அவளுடைய தாய் தன் பாலுடன் சேர்த்து இந்தப் பண்புகளையெல்லாம் ஊட்டுகிறாள். இந்தப் பண்புகள் வழிவழி அவர்கள் இரத்தத்தோடு கலந்து வருபவை... ஆனால் தவறான சந்தர்பங்களினால் வழிதவறிப் போகிறவர்களும் இல்லாமல் இல்லை... நாம் தோட்டத்தில் வளர்க்கும் அத்தனை ரோஜாச் செடிகளுமே ஆரோக்கியமாக அழகாக வளர்கின்றனவா?... நூற்றுக்கு ஒன்றிரண்டு குலம் மாறிப் போவதில்லையா! அதைப் போலத்தான்!'' என்று சொன்ன வாசுகியின் குரலில் இப்போ கனல் ஏறியிருந்தது.

''அப்போ உங்கள் இனப் பெண்கள் விவாகரத்துச் செய்து கொள்வதில்லையா?'' எனக் காஸ்கரன் கேட்ட போது வாசுகி ஒரு கணம் திடுக்கிட்டுப் போனாள்.

வீதியைப் பார்த்தவாறே காஸ்ரன் காரைச் செலுத்திக் கொண்டிருந்ததால் வாசுகியின் முகத்தில் படிந்த நிழலை அவன் காணவில்லை.

இதற்குள் தன்னைச் சுதாரித்துக்கொண்ட வாசுகி ''எங்கள் நாட்டிலும் விவாகரத்துக்கள் நடைபெறுவது உண்டு. என்னைப் பொறுத்தவரையில் விவாகரத்து என்பது ஒரு ஆபரேஷன் போல... இனிவேறு வழியில்லை என்ற போதுதானே நாம் நோயைக் குணமாக்க ஆபரேஷன் செய்து கொள்ள முடிவு செய்கிறோம். சாதாரணமாக வரும் தலையிடி காய்ச்சலுக்கெல்லாம் ஆபரேஷனா செய்து கொள்கிறோம்!... அதைப் போலத்தான்!'' எனப் பதில் சொன்னபோது அவளுடைய விவேகமும் பேச்சு வன்மையும் காஸ்ரனுக்கு மிகவும் பிடித்துக் கொண்டன.

"வாசுகி! நீ இவ்வளவு தெளிவாகப் பல விஷயங்களைப் பற்றி ஆழமான கருத்துக்களைக் கொண்டிருக்கிறுல், இலகுவாக அவற்றைப் பிறருக்குப் புரிய வைக்கும் திறமையும் கொண்டிருக்கிருய். உன்னுடைய இந்தத் திறமையைநான் பயன்படுத்திக் கொள்ள விரும்புகின்றேன். அடுத்த வாரம் வெளிநாட்டில் நான் எனது ஆராய்ச்சிக் கட்டுரையை ஒரு மாநாட்டில் படிக்க வேண்டி உள்ளது. விவாகரத்து சம்பந்தமாக ஏற்படும் மனேவியாதிகள் பற்றிய கட்டுரை அது. நீயும் என்னுடன் கூடவந்து அங்கு மற்றவர்கள் படிக்கும் கட்டுரைகளையும் கேட்டுப் பாரேன்... நீ இந்த விஷயங்களை அறிந்து கொள்வது எனக்கும் எமது கிளினிக்குக்கும் உதவியாக இருக்குமல்லவா?" என காஸ்ரன் கேட்ட போது "அதற்கென்ன வருகிறேனே!... எந்த நாட்டில் மாநாடு?" என உற்சாகத்துடன் கேட்டாள் வாசுகி.

இதற்குள் வீடு வந்துவிடவே காரைத் திருப்பிக் காம்பவுண்டினுள் செலுத்தியபடி "ஹாலந்து" என்ருன் காஸ்ரன்.

வாசுகியின் இதயம் ஒரு தடவை நின்றுவிட்டுப் பின் படபடவென அசுரகதியில் அடித்துக் கொண்டது.

□

# 21

அடுத்தவாரம் வாசுகியும் காஸ்ரனும் ஹாலந்துக்குப் புறப்பட்டபோது அவர்களை சென்டிரல் ஸ்டேஷன் வரை கொண்டு வந்து வழியனுப்பி வைத்தார் மரியானு.

காஸ்ரனுக்கு மேற்கு ஜெர்மனியில் ஹம்பேக் நகரில் ஒரு முக்கிய அலுவல் இருந்ததால் முதலில் ரெயினில் ஹம்பேக் போய் அதை முடித்துக் கொண்டு அங்கிருந்து விமானத்தில் அம்ஸ்ரடாம் போவதென ஏற்பாடாகியிருந்தது.

நகர்ப்புறத்தைக் கடந்து ரெயின் கிராமங்களினூடாக வேகமாகச் சென்று கொண்டிருந்தது.

மார்ச் மாதம் ஆரம்பிக்க இன்னமும் இரண்டு மூன்று நாட்களே இருந்தன. வெண்பனி மூடியிருந்த வயல்களில் வின்ரருக்கு முன்பே விதைக்கப்பட்ட விதைகள் அந்தக் கடுங்குளிரையும் தாங்கி இப்போ பசும்புல்லாய் முளைத்துப் பாய்விரித்துக் கிடந்தன. அலசிக் கழுவி, உலர்வதற்காக விரிக்கப்பட்ட வெள்ளைத் துணிகள் போல அந்தப் பச்சைப் பரப்பில் ஆங்காங்கு வெண்பனித் திட்டுக்கள் காணப் பட்டன.

இலைகளையுதிர்த்து பட்டுப்போனவை போல நின்று கொண்டிருந்த மரங்களின் கிளைகளில் சின்னச் சின்ன மொக்குகள் துளிர்ப்பதற்குத் துடித்தனவாய் வசந்தத்தை எதிர்பார்த்து நிற்பதை வாசுகி கண்டாள்.

அவளுடைய பார்வை வெளியே தெரிந்த காட்சிகளில் ஒன்றிப் போனதைக்கண்ட காஸ்ரனுக்கு அவள் ஒருதடவை டென்மார்க் வின்ரர் பற்றிப் பேச்சு வந்தபோது "இந்தக் குளிர் கொடுமையாகத்தான் இருக்கிறது. ஆனால் விரைவில் வெய்யிலும் வெப்பமும் வரத்தானே போகின்றது....பருவ காலங்கள் இங்கு மாறிமாறி வருவதனால் வித்தியாசமான காலங்களுக்காக ஏங்கி எதிர்பார்ப்பதற்கும், அவற்றை முழுமையாக அனுபவிக்கவும் முடிகிறதல்லவா! வாழ்க்கை ஒரே சப்பென்று போய்விடாமல் சுவையாக இருப்பதற்கு இந்த மாற்றங்கள் அவசியந்தான்!" எனக் குறிப்பிட்டது அவனுக்கு இப்போ நினைவுக்கு வந்தது.

வாழ்க்கையையிட்டு அவள் கொண்டிருந்த நம்பிக்கை யும், நல்லதையே எதிலும் காணும் தன்மையும் வாசுகி யிடம் அவன் கண்ட சிறந்த பண்புகளில் ஒன்றாகவிருந்தது.

மரியாவு மூலம் வாசுகியின் கடந்தகாலத்தைப் பற்றி ஓரளவு அறிந்திருந்தான் காஸ்ரன்,

அவளுக்குத் திருமணமாகி அடுத்த நாளே அவளுடைய கணவன் வேறொரு பெண்ணுடன் வாழச் சென்றுவிட்டதாகவும் அவனை விவாகரத்துச் செய்துவிட்ட வாசுகி அந்தக் கவலையை மறப்பதற்காகவே டென்மார்க் வந்திருக்கிறாள் என்பது தெரிந்தபோது வாசுகியிடம் அவன் மிகவும் பரிவும் அன்பும் காட்டி வந்திருந்தான்.

இப்போதெல்லாம் அவள் மிகவும் கலகலப்பாகவும் உற்சாகமாகவும் இருந்தாலும் அவ்வப்போது அந்தச் சின்னக் கடற்கன்னியின் முகத்தில் காணப்படும் ஊமை வேதனையைப் போன்று இவளுடைய முகத்திலும் இருள் படிவதை அவன் கண்டதுண்டு.

முன்பே கிழக்கு நாடுகள் பற்றி, அதுவும் குறிப்பாக இந்தியா இலங்கை போன்ற நாடுகளைப் பற்றி நிறையத் தெரிந்து வைத்திருந்த காஸ்ரன் வாசுகி வந்தபின்னர் அக்கறையோடு தமிழ் இனம் பற்றிக் கேட்டும் படித்தும் பலவற்றை அறிந்து கொண்டான்.

ஒருவனுக்கு ஒருத்தியென்று வாழும் இல்லறஅமைப்பும் அதையொட்டிய ஒழுங்கமைதியும் அவனுடைய மனதை வெகுவாக ஈர்த்திருந்தன. அந்தப்பண்பாட்டை அமைதியாகப் புலப்படுத்தும் வாசுகியின் அடக்கமான அழகும் அறிவார்ந்த உரையாடல்களும் அவனுக்கு வாசுகி மேல் மிகுந்த ஈடுபாட்டை ஏற்படுத்தியிருந்தன. அவளுடைய அண்மையும் பழக்கமும் அவனுள் இருந்த சிறப்பானவற்றைத் தூண்டிச் செயலாக்கும் விந்தையை மனோதத்துவ டாக்டரான அவனே உணர்ந்து வியந்ததுண்டு.

வாசுகி வெளியே ஓடிக் கொண்டிருந்த காட்சிகளைப் பார்த்துக் கொண்டிருந்தாலும் அவளுடைய உள்ளம் ஒரு விஷயத்தையிட்டுச் சிந்தித்துக் கொண்டது. இப்போதெல்லாம் காஸ்ரனுடன் பேசிப்பேசி அவள் எதையுமே உளவியல் ரீதியாகப் பார்க்கவும் சிந்திக்கவும் பழகிக் கொண்டிருந்தாள்.

ஹாலந்தில் தான் டாக்டர் சபேசன் அந்தச் சிங்களப் பெண்ணுடன் இனிமையாக வாழ்க்கை நடத்துகின்றாரே... அதனால்தான் அங்கு போவதற்கு என் மனம் ஆசைப் பட்டதா?...அப்படியானால் ஏன்? என்று வினாக்கள் அவளுள் எழுந்தன.

—அவரைப் பார்ப்பதற்கு நான் ஏன் விழையவேண்டும்... என்னை ஒருநாள் உறவுடன் உதறி எறிந்துவிட்டு ஓடிப் போனவர்... அதுவும் தான் செய்த தவறை நியாயப்படுத்த இல்லாத பொய்யைச் சொல்லித் தன் தாயையே ஏமாற்றியவர்...அவரைக் காண நான் ஏன் விரும்ப வேண்டும்?

—நானும் ஒரு சராசரிப் பெண்தானே... என்னை நிராகரிக்கும் அளவுக்கு அப்படி என்ன அந்தச் சிங்களப் பெண் அபூர்வ அழகியா?...அவள் எப்படியிருப்பாள் என்பதை நேரிலே பார்க்க விரும்பும் பெண்மையின் பொறாமை உணர்வின் விழைவா இது?

—இல்லையேல் அவரும் அவளும் சந்தோஷமாக, ஒரு வேளை அழகானதொரு குழந்தையுடன் இப்போது வாழ்வதை நான் நேரிலேயே கண்டுவிட்டால் அவரைப் பற்றிய நினைவுகளை அடியோடு என் மனதிலிருந்து களைந்து விடலாம் என்ற ஆர்வமா?

—அப்படி இலகுவாகத் தூக்கி எறியக்கூடிய உறவா அது?...ஒருநாள் உறவாய் இருந்துங்கூட...

—தன் ராஜகுமாரனை இன்னொருத்தியிடம் பறிகொடுத்த கடற்கன்னியைப் போல நானும் காலமெல்லாம் தனிமையில் வாடவேண்டுமா?

—அந்தத்தியாகத்துக்கு அருகதையுடையவர் அல்லவே அவர்...

—எனக்கும் உணர்வுகள் ஆசைகள் இருக்கத்தானே செய்கின்றது...

ஒரு போலி டாக்டருக்காக நான் ஏன் என் உணர்வுகளை கொன்று வாழவேண்டும்?

“வாசுகி! என்ன பலமான சிந்தனை?...ரெயின் இப்போது கடலைக் கடப்பதற்காக ஃபெரிபோட் மேல் வந்து விட்டது. ஃபெரியில் மேலே சுவையான இலங்கைத் தேனீர் கிடைக்கும்! வா போகலாம்!” எனக் காஸ்ரன் அழைத்த போது நினைவுக்கு வந்த வாசுகி அவனைத் தொடர்ந்தாள்.

ஃபெரியின் முதலாவது தட்டு சிற்றுண்டிசாலை, டியூட்டி ஃபிரீ ஷாப், வெயிட்டிங் ஹால் என விசாலமாக வும் நேர்த்தியாகவும் இருந்தது.

அவர்கள் சிற்றுண்டிக் கவுண்டரில் தேவையான வற்றைத் தெரிவு செய்து தட்டுக்களில் எடுத்துக் கொண்டு ஒரு பக்கமாக இருந்த மேஜையில் உட்கார்ந்துகொண்டனர்.

அந்த ஹாலின் பெரிய கண்ணாடி ஜன்னல்களூடாக ஐஸ்கட்டியாக உறைந்துபோன கடல் தெரிந்தது.

அவளுக்குத் தேனீரைப் பரிமாறிவிட்டுத்தானும்டீயைக் கலந்தெடுத்துக்கொண்ட காஸ்ரன் வாசுகியை இப்போது தான் புதிதாகக் காண்பதுபோல்ஆர்வத்துடன்பார்த்தான்.

“என்ன அப்படி பார்க்கிறீர்கள்?” என வாசுகி கேட்ட தற்கு “இல்லை...கடலைக் கண்டதுமே எங்கள் சின்ன கடற் கன்னிக்கு ராஜகுமாரனுடைய நினைவு வந்துவிட்டதோ?;’ எனக் காஸ்ரன் வேடிக்கையாகக் கேட்டபோது வாசுகி யின் முகத்தில் ஒரு வேதனை கலந்த சிரிப்பு இழையோடியது.

அதைக் கவனித்த காஸ்ரன் தொடர்ந்து “வாசுகி? இந்த உலகில் இப்போதும் நிறைய ராஜகுமாரர்கள் கிடைப் பார்கள்...ஆனால் கடற்கன்னிகள் கிடைப்பதோ மிகவும் அபூர்வம்...இல்லையா!” எனச் சொன்ன காஸ்ரனின் குரலில் வழமையாக இருக்கும் கலகலப்பைக் காணவில்லை.

அவனுடைய முகத்தில் துயரத்தின் நிழல் படிவதைக் கண்ட வாசுகி தனது கவலையை மறந்தவளாய் "என்ன கரஸ்ரன் ஒரு மாதிரியாக இருகிறீர்கள்!" எனப் பரிவுடன் கேட்டாள்.

"ஏன் டாக்டர்களுக்கு உடம்புக்கு வருவதில்லையா?"

"உடம்புக்கா அல்லது மனதுக்கா வருத்தம் டாக்டர்?"

"இரண்டுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டுதானே வாசுகி! உன்னிடம் இனிமேலும் உண்மையை மறைக்க என்னுல் முடியவில்லை. உன்னிடம் என் உள்ளத்தைப்பறி கொடுத்துவிட்டேன். என்னை உன் ராஜகுமாரனுக ஏற்றுக் கொள்வாயா வாசுகி?"

அப்போது ஒருசின்ன அதிர்வுடன் புறப்பட்டது ஃபெரி போட்.

அவனுடைய இந்தக் கேள்வி வாசுகியின் பெண்மனது ஏற்கெனவே எதிர்பார்த்த ஒன்றுதான். அடிமனதில் உறைக்க ஆரம்பித்த அந்த உண்மையை அவள் தான் உணர்ந்து கொண்டதாகவே இதுவரை ஏற்றுக் கொள்ள வில்லை.

இப்போது அவனுடைய உருக்கமான வேண்டுகோள் அவளுடைய பெண்ணுள்ளத்தைத் தொடவே செய்தது. ஆயினும் அவனுக்கு என்ன பதில்சொல்வதென்று தெரியாமல் அவள் ஜன்னலுக்கு வெளியே பார்த்தாள்.

வெண்பனிக் கட்டியாக உறைந்திருந்த கடலை ஃபெரி போட் உழுது கொண்டு செல்கையில் பனிப்படலத்தில் ஆங்காங்கு வெடிப்புகள் ஏற்பட்டு பெரிய பனித்துண்டுகள் பிரிந்து மிதந்தன. அந்த வெடிப்புக்களின் ஊடாக நீலக் கடல்தெரிந்தது.

# 22

இதுவரை காலமும் பனிக்கட்டியாய் இறுகிப் போயிருந்த தன்னுடைய இதயத்திலும் காஸ்ரனின் கேள்வியால் வெடிப்புக்கள் ஏற்பட அந்த வெடிப்புக்களினூடாக அந்த இதயத்தினுள்ளே இது வரை மறைந்திருந்த விஷயங்களை வாசுகியினால் யதார்த்தமாகக் காண முடிந்தது.

எந்தத் தவறுமே செய்யாத என்னை ஏமாற்றி என்மேல் அபவாதத்தையும் சுமத்திய அந்த இதயமற்ற டாக்டர் முன் நான் காஸ்ரனுடைய கரத்தைப் பிடித்துக்கொண்டு இங்கே பாரும் மிஸ்டர், சபேசன்! எனக்கும் வாழத் தெரியும், உம்மை விட உத்தமரான இந்த டாக்டரின் கால்தூசுக்குக் கூட சமமாக மாட்டீர் நீர்!...என்று சொல்லி வஞ்சம் தீர்த்துக் கொண்டால்தான் என்ன?

குடும்ப உறவுகள் உளுத்துக்கொண்டே போகும் இந்த சமுதாயத்தில் நானும் ஒரு காலம் நாயையும் பூனையும் வளர்த்து அவற்றுடன் தனிமையில் வாழ விரும்பவில்லை. என்னையும் முழுமையாகக் கொடுத்து, தன்னையும் முழுமையாக எனக்குத் தரக்கூடிய ஒரு துணையைத்தான் நான் தேடிக் கொண்டிருக்கிறேன் வாசுகி என்று அன்றொருநாள் சொன்ன இந்த நல்லவருக்கு நான் என்னையே முழுமையாகக் கொடுத்தால்தான் என்ன?

மறுமணத்தைப் பற்றி நான் இதுவரை சிந்திக்காவிடினும் அது என் வாழ்வில் நடக்க முடியாத ஒன்றுஎன்று நான் அறுதியாக முடிவு செய்யவில்லைத்தானே!

—அப்படி நான் மறுமணத்தை நாடி எம்மினத்தவர் ஒருவரைத் தெரிவு செய்து கொண்டாலும் நான் இன்னொருவர் கரம்பட்டவள்தான் என்பதை எனக்குக் கணவராக வருபவர் எந்த அளவுக்குப் புரிந்து கொண்டு என்னை மதிக்கிறார் என்பதையிட்ட ஒரு தாழ்வுணர்ச்சியும்

கரவும் என்னுடைய உள்ளத்தில் எப்போதுமே உறுத்திக் கொண்டல்லவா இருக்கப் போகின்றது!

— இந்த டனிஷ் சமுதாயத்தில் வளர்ந்த காஸ்ரன் என் கணவராக ஆகும் பட்சத்தில் என்னுடைய உள்ளத்தை அந்தச்சிக்கல் நெருடாது என்பதும் உண்மையல்லவா!

இத்தனை வினுக்களும் மிகவும் நியாயபூர்வமாக வாசுகி யின் மனதில் எழுந்த போதும் அந்தப் பெண்ணிதயத்தின் எங்கோ ஓர் கோடியில் இந்த நியாயங்களையெல்லாம் எந்த நியாயமுமுன்றியே மறுத்துரைக்கும் குரல் ஒன்று எழவே செய்தது.

—அதுதான் மனச்சாட்சியா? அல்லது அதுதான் என் அன்னை எனக்குத் தன் பாலோடு சேர்த்துப் புகட்டிய ஏதோ ஒன்ரு?

தனக்குள் குழம்பிக்கொண்ட வாசுகி திரும்பித் தன் னெதிரே தன் முகத்தையே ஆவலோடு பார்த்திருந்த காஸ்ரனைப் பார்த்தாள்.

''தயவு செய்து இதையிட்டுச் சிந்திக்க எனக்கு சற்று அவகாசம் கொடுங்கள்!'' என வாசுகி அமைதியாகக் கூறிய போது காஸ்ரனுடைய முகத்தில் நம்பிக்கை ஒளி பரவியது.

''ஓகே!... நீ எவ்வளவு நாட்கள் வேண்டுமானுலும் எடுத்துக் கொள்!...ஆனுல் நல்லதொரு பதிலையே நான் எதிர்பார்கின்றேன்!'' என்ருன் காஸ்ரன்.

□

## 23

அம்ஸ்ரடாம் எயர்போர்ட்டில் அவர்களை வரவேற்க காஸ்ரனுடைய ஹாலந்து நண்பர் மனைவியுடன் வந்திருந் தார். அன்புடன் வரவேற்றுத் தங்களுடைய வீட்டுக்குக்

காரில் காஸ்ரனையும் வாசுகியையும் அழைத்துச்சென்றனர் அவர்கள்.

நீர்ப்பாசனத் துறையில் பெயர் போன ஹாலந்து நாட்டின் கிராமப்புறங்கள் எங்கும் அந்த நாட்டின் சின்னமாகிய வின்ட்மில்கள் கம்பீரமான அழகுடன் காணப்பட்டன.

நாடு முழுவதையுமே சிரமமின்றி சைக்கிளில் சுற்றிப் பார்க்கப் பிரத்தியேகமாகப் பாதைகள் இருப்பது எம்முடைய நாட்டில்தான் எனப் பெருமையடித்துக்கொண்டார் காஸ்ரனின் நண்பர்.

சிறுவயதில் தான் படித்த நாடுகாத்த சிறுவன் என்ற ஹாலந்துக் கதையை நினைவு கூர்ந்த வாசுகி "இங்கு கடல் மட்டத்துக்குக் கீழே தரை இருக்கின்றதல்லவா அது எங்கே?" எனக் கேட்டாள்.

"மாநாடு ஆரம்பிக்க இன்னமும் இரண்டு நாட்கள் இருக்கின்றனவே!...இந்த இரண்டு நாட்களும் உங்களுக்கு ஊரைக் சுற்றிக் காட்டுவதுதான் எங்கள் வேலை!" எனக் குதூகலத்துடன் சொன்ன அந்த நண்பரின் மனைவியை வாசுகிக்கு மிகவும் பிடித்துக்கொண்டது.

"இதோ வீடு வந்து விட்டது!" என்று சொல்லிக்கொண்டே வீதியோரமாக இருந்த அழகானதொரு வீட்டிற்கு முன்பாகக் காரை நிறுத்தினர் காஸ்ரனுடைய நண்பர்.

யாவரும் காரிலிருந்து இறங்கிக் கொண்ட சமயம், வாசுகியும் காரைவிட்டிறங்கி பேவ்மென்ட்டில் நின்றபடி தன்சேலையை ஒழுங்கிபடுத்தி விட்டு நிமிர்ந்தாள்.

ஆயிரம் சம்மட்டிகள் கொண்டு ஒரே சமயத்தில் தாக்கியது போலத் தன்னெதிரே பேவ்மென்ட்டில் நின்று

கொண்டிருந்த ஒரு ஆளைக் கண்டபோது வாசுகி அதிர்ந்து போனாள்.

அவள் எதிரே சுமார் பத்து மீற்றர் தள்ளி, மெலிந்த உடலும் தாடி மீசையுமாய் நிற்கும் அந்த ஆள் யார்? இது அவரல்லவா!...

வாசுகியின் இதயத்தில் எதுவோ ஒன்று பொங்கி வெடித்துப் பெருகியது போல் அவள் மூச்சுத் திணறிப் போனாள்.

காரிலிருந்து சேலையணிந்த ஒரு பெண் இறங்கியபோது இயல்பான தொரு ஆவலுடன் அவளைப் பார்த்த டாக்டர் சபேசன் இது வாசுகியல்லவா என்று உணர்ந்தபோது அப்படியே விறைத்துப் போனான்.

இதற்குள் வாசுகியைக் காஸ்ரன் அழைக்கவே அவள் தன் இதயத்தைக் கல்லாக்கிக்கொண்டு திரும்பி யாவருடனும் சேர்ந்து வீட்டிற்குள் பிரவேசித்தாள்.

தனக்கென ஒதுக்கியிருந்த அறைக்குச் சென்று கதவைச் சாத்திக் கொண்ட வாசுகியின் இதயத்தில் பூகம்பம் நிகழ்ந்து கொண்டிருந்தது.

அவள் கற்பனை செய்து மனதில் வளர்த்த சித்திரத்துக்கும் இப்போ கண்ணெதிரே கண்ட சபேசனுக்கும் எதுவிதத் தொடர்புமே இருக்கவில்லை.

அழகானதொரு குழந்தை, இளமையும் அழகும் குலுங்கும் ஒரு மனைவி, அவர்களை அன்புடன் அழைத்துக் கொண்டு ஹாலந்து முழுவதும் உலாவரும் கம்பீரமான டாக்டர் சபேசன் என்றல்லவா வாசுகியின் கற்பனைச் சித்திரம் இருந்தது!

ஆனால் இங்கே ..ஒரு பிச்சைக்காரனைப் போலத் தாடியும் மீசையுமாய், மெலிந்து உருக்குலைந்து நின்ற சபேசன்...அது அவர்தானா...ஆமாம்!...நிச்சயமாக எந்தக்

கூட்டத்திலும் வாசுகியினால் அந்தக் கண்களைச் சட்டென்று அடையாளங் காண முடியும் அவனுடைய ராஜகுமாரனுடைய கண்களல்லவா அவை!

அவருக்கு என்ன தான் நடந்தது. இப்படி இளைத்துப் போயிருக்கிறாரே என்று ஏங்கிய அவள் மனம் சபேசன் தனது தாய்க்கு எழுதிய கடிதத்தை அந்நேரம் நினைக்க நேர்ந்த போது சட்டென இறுகிப் போயிற்று.

அவர் யாரோ...நான் யாரோ...அவரைப் பற்றி ஏன் நான் நினைக்க வேண்டும்? என மனதைத் திடப்படுத்திக் கொண்டு குளித்து உடை மாற்றிக் கொண்டாள்.

வாசுகி எவ்வளவு கஷ்டப்பட்டு முயன்றபோதும் அவளுள் ஏற்பட்ட ஒரு தவிப்பையும் பதட்டத்தையும் அவளால் கட்டுப்படுத்தவே முடியவில்லை.

□

## 24

வாசுகியைத் திடீரெனக் காண நேர்ந்த சபேசனுக்கு ஏற்பட்ட அதிர்ச்சியில் அவனால் முதலில் ஒன்றுமே செய்ய முடியவில்லை. அப்படியே சில நிமிடங்கள் சிலையாகப் பேவ்மென்டில் நின்றிருந்தவன் பின்னர் மெல்ல நடந்து பக்கத்திலிருந்த பிளாட்டில் தான் தங்கியிருந்த அபார்ட்மென்டுக்குச் சென்றான்.

அங்கே வேலையால் வந்திருந்த ஜெயசிங்கம் சபேசனுடைய முகத்தைக் கண்டதுமே "என்ன டாக்டர்? என்ன இப்படி முகம் வெளிறிப் போய் வருகிறீர்கள்!" எனக் கேட்ட போது "ஒன்றுமில்லை ஜெயசிங்கம்!... இன்று எனக்கு என்னுடைய கோட்டா இப்போதே தேவைப்படுகின்றது பிளீஸ்!" என வேண்டிக் கேட்ட சபேசனைப் பார்க்கையில் ஜெயசிங்கத்துக்குப் பரிதாபமாக இருந்தது.

அவன் ஒன்றும் பேசாமல் எழுந்து பூட்டியிருந்த அலுமாரியைத் திறந்து அதனுள் இருந்த விஸ்கி பாட்டிலை எடுத்து ஒரு கிளாஸில் கொஞ்சம் ஊற்றிச் சபேசன் கையில் கொடுத்தான்.

அதை வாங்கிய சபேசனுடைய கை பலமாக நடுங்கியது. சிரமப்பட்டுக் கிளாஸை வாயருகே கொண்டு சென்று அதை முழுவதும் குடித்த சபேசன் விஸ்கி வேலை செய்வதற்குக் காத்திருப்பது போலக் கதிரையில் சற்று நேரம் பேசாமல் உட்கார்ந்திருந்தான்.

ஜெயசிங்கமும் இலங்கையைச் சேர்ந்தவன்தான். கிரேக்கக் கப்பலொன்றில் முன்பு வேலை பார்த்தவன் இப்போது ஹாலந்தில் நிரந்தரமாகவே வசிக்கின்றான்.

இரண்டு மாதங்களுக்கு முன் அவன் தன் காரில் ஏதோ ஓர் அலுவலாக டென்ஹாக் சென்றிருந்தான். வேலையை முடித்துக் கொண்டு அம்ஸ்ரடாம் திரும்பும் முன்னர் ஒரு பாருக்கு பியர் அருந்தப் போயிருந்தான்.

அப்போது மாலை மூன்று மணியிருக்கும். அந்த பாரில் ஒரு மூலையில் அமர்ந்திருந்த சபேசன் ஜெயசிங்கத்தைக் கண்டதுமே தயக்கத்துடன் அவனிடம் வந்து தயவு செய்து எனக்கொரு டிரிங் வாங்கித் தர முடியுமா என ஆங்கிலத்தில் கேட்ட போது அவனை ஊன்றிக் கவனித்த ஜெயசிங்கம் "நீங்கள் ஒரு தமிழரா?" எனக் கேட்டான் "யெஸ் யெஸ்...முதலில் டிரிங் பிளீஸ்!" எனச் சபேசன் துடிக்கவே ஒரு டபிள் விஸ்கிக்கு ஆர்டர் கொடுத்து அதை வாங்கிப் பருகிய சபேசனையே பார்த்திருந்தான் ஜெயசிங்கம்.

தாடி மீசையுடன் அழுக்கான உடையில் அவன் அலங்கோலமாக இருந்தாலும் அவனுடைய கண்களில் ஒரு ஒளியையும் அவனுடைய அசைவுகளில் ஒரு அமைதியையும் ஜெயசிங்கத்தினால் காண முடிந்தது.

மெல்ல அவனுடன் பேச்சுக் கொடுத்ததில் கொஞ்சங் கொஞ்சமாக சபேசனிடமிருந்து அவனுடைய கதையை அறிந்து கொண்டான் ஜெயசிங்கம். தான் விரைவில் இறப்பதற்காகத்தான் குடிக்கின்றேன்... அதற்கும் கையில் காசில்லேயே எனக் கூறிக் கண்ணீர் விட்ட சபேசனுடைய கதை ஜெயசிங்கத்தின் மனதை வெகுவாக உருக்கிவிட்டது.

அன்றே சபேசனைத் தன்னுடன் அழைத்து வந்து ஜெயசிங்கம் சபேசனைத் தன் டாக்டரிடம் சிகிச்சை பெற வைத்திருந்தான். இதுவரை யாருடைய அன்பும் கிட்டாது தவித்த சபேசன் சிறிது சிறிதாக குடிப்பதை குறைத்துக் கொண்டே வந்திருந்தான். இப்போ இரவில் மட்டும் கொஞ்சம் விஸ்கி அருந்தும் அளவுக்கு அவனைக் கொண்டு வந்திருந்தான் ஜெயசிங்கம்.

இதற்குள் கைநடுக்கமும் பதட்டமும் நின்றுவிட சபேசன் எழுந்து "ஜெயசிங்கம்! முன் வீட்டில் எனக்குக் கொஞ்சம் வேலையிருக்கிறது!" எனச் சொல்லிவிட்டு சபேசன் வெளியே சென்றபோது ஜெயசிங்கம் "டாக்டர் விரைவில் வந்துவிடுங்கள்! நான் உங்களுக்காகச் சாப்பிடாமல் பார்த்துக் கொண்டிருப்பேன்!' என விடை கொடுத்தான்.

முன் வீட்டிலிருக்கும் டாக்டர் தம்பதிகளுடன் சபேசனுக்கு அண்மையில் பரிச்சயம் ஏற்பட்டிருந்தது. சபேசனும் ஒரு டாக்டர் என அவர்கள் தெரிந்து கொண்டபோது அவனுடைய மதுப்பழக்கத்தை மாற்றி மறுபடியும் அவனை ஓர் மனுஷனுக்க அவர்களும் வெகுவாக முயல்வதை ஜெயசிங்கமும் அறிந்திருந்தபடியினுல் அவன் இப்போ சபேசன் அங்கே செல்வதைத் தடுக்கவில்லை.

★

## 25

எதிர்வீட்டுக் கதவைத் தட்டிய சபேசன் கதவு திறக்கும் வரையில் வெளியே படபடக்கும் உள்ளத்துடன் நின்று கொண்டிருந்தான்.

இந்த வீட்டுக்கு வந்திருப்பது வாசுகியேதான்...அவளுடைய அத்தான் அனுப்பியிருந்த விவாகரத்துப் பத்திரத்தில் தான் கையெழுத்து வைத்து அனுப்பியதுடன் அவளுக்கும் தனக்கும் இருந்த உறவு அறுந்து போய்விட்டதுதான். ஆனாலும் நான் அவளுக்குச் செய்த துரோகத்துக்கு அவளிடம் ஒருதடவை மன்னிப்புக் கேட்டுவிட்டால் என் மனம் ஆறும்...அந்த அநியாயத்துக்குத்தான் எவ்வளவு தண்டனை அனுபவித்து விட்டேன்...அவள் என்னை நிச்சயம் மன்னிக்கவே மாட்டாள்...ஆனல் சாவதற்குமுன் அவளிடம் நான் மன்னிப்புக் கேட்டால்தான் நிம்மதியாக என் உயிர் போகும் எனச் சிந்தித்தவாறு நின்றிருந்த சபேசனைக் கண்ட வீட்டுக்கார டாக்டர் "வாருங்கள் டாக்டர் சபேசன்" என அன்புடன் வரவேற்ருர்.

அவனுடைய பெயரைக் கேட்ட மாத்திரத்தில் அங்கு ஹாலில் அவர்களுடன் அமர்ந்திருந்த வாசுகி சட்டென எழுந்து நின்ருள். எழுந்து நின்றவள் சபேசன் அந்த ஹாலினுள் வருவதைக் கண்டு "எக்ஸ்கியூஸ்மீ!" என அவசரமாக எழுந்து தன் அறையை நோக்கி ஓடியபோது "வாசுகி...ஒரு நிமிஷம் என்று அழைத்த சபேசனுடைய குரலில் தொனித்த வேதனையைக்கூடப் பொருட்படுத்தாமல் அறையினுள் நுழைந்து கதவைச் சாத்திக் கொண்டாள்.

ஹாலந்து டாக்டர் தம்பதிகளுக்கும் காஸ்ரனுக்கும் சபேசனைக் கண்டு வாசுகி எழுந்து ஓடியதும் சபேசன் அவளை வருந்தி அழைத்ததும் புரியாத புதிராகவிருந்தன.

உட்காருங்கள் டாக்டர் சபேசன்! பதட்டப் படாதீர்கள்!... இதோ இவர்தான் டாக்டர் காஸ்ரன்...

டென்மார்க்கில் மனோதத்துவ டாக்டராக இருக்கிறார்...அவருடைய கிளினிக்கில் ரிசெப்ஷனிஸ்டாக வேலை செய்பவர் தான் வாசுகி... அவர்களை உங்களுக்கு ஏற்கெனவே தெரியுமா?'' எனக் காஸ்ரனை அறிமுகப் படுத்தியவாறே கேள்வியையும் கேட்டு வைத்தார் சபேசனின் நண்பர்.

''ஹலோ!'' எனக் காஸ்ரனுக்கு வணக்கம் சொல்லி விட்டு தன் நண்பன் பக்கம் திரும்பிய சபேசன் அவரை அமைதியுடன் நோக்கி ''வாசுகி என்னுடைய மாஜி மனைவி!'' என்று சொன்னபோது அனைவரும் திகைத்துப் போயினர்.

அவனருகில் நெருங்கி அமர்ந்து அவனைத் தொட்டுத் தேற்றிய அவனுடைய நண்பர் ''கவலைப்படாதீர்கள்... நடந்ததை நாங்கள் அறியலாமா? எங்களால் முடிந்த உதவியைச் செய்ய நாங்கள் யாவருமே ஆயத்தமாக இருக்கின்றோம்... சொல்லுங்கள் டாக்டர்'' எனத் தூண்டிய போது சபேசன் தன் வரலாற்றைக் கூற ஆரம்பித்தான்.

இலங்கையில் நடந்த விஷயங்களில் ஆரம்பித்து இங்கே தான் சந்திரிகாவுடன் வந்தபின்னர் நிகழ்ந்தவற்றைச் சுருக்கமாகக் கூறினான் சபேசன்.

எனக்கு விவாகப் பதிவு நடைபெற முதல் நான் சந்திரிகாவுடன் நெருங்கிப் பழகியது உண்மைதான்.

ஆனால் வாசுகியை மணந்தபின் சந்திரிகாவை என்னால் மனதாலும் நினைக்க முடியவில்லை. அவளுடைய அண்ணன் ருத்திரா என்னைத் தன் கத்திமுனையில் வெருட்டி இங்கே கொண்டுவந்து விட்டான். அந்த நேரம் நான் அதற்குச் சம்மதிக்காமல் என் உயிர் போயிருந்தாலும் எவ்வளவோ நிம்மதியாக இருந்திருக்கும்.

சந்திரிகாவுக்கு என்மேல் அன்பு இருந்தது உண்மை தான். ஆனால் அதற்கு அடிப்படையாக இருந்தது என் இளமையும் பதவியுந்தான். இங்கு வந்த பின்னர் நாமிரு

வரும் ஒருமித்து வாழ்ந்த போதும் ஒரு கணவன் என்ற நிலையில் சந்திரிகாவின் எதிர்பார்ப்புக்களை என்னால் நிறை வேற்ற இயலாமல் போயிற்று. ஆரம்பத்தில் சந்திரிகா இதைப் பொருட்படுத்தவில்லை. அவளும் ஒரு பயிற்சி பெற்ற தாதியாக இருந்தபடியினால் அவளுக்கு இந்த விஷயங்களில் பரிச்சயமும் இருந்தது. தன் அண்ணனின் பயமுறுத்தலாலும் என் வாழ்க்கை முழுவதுமே நான் அண்டி வாழ்ந்த என் தாயாரிடம் சொல்லிக் கொள்ளாமல் வந்ததனாலுமே எனக்கு அப்படியாகப் போய்விட்டது, போகப் போக யாவும் பழைய நிலைக்குத் திரும்பி மறுபடியும் நாங்கள் இல்லற வாழ்க்கையை அனுபவிக்க முடியும் என அவள் நிச்சயமாக நம்பினாள்.

ஆனால் எனக்கோ சந்திகாவின் ஸ்பரிசத்தையோ அண்மையையோ நாளாக நாளாகப் பொறுத்துக் கொள்ளவே முடியவுல்லை. ஒரு பிழையும் அறியாத வாசுகிக்கு நான் இழைத்த துரோகம் என் இதயத்தைத் துளைத்துக் கொண்டேயிருந்தது. அவளுடைய களங்கமற்ற முகத்தையும் கள்ளமில்லாத உள்ளத்தையும் என்னால் ஒரு நிமிஷம்கூட மறக்க முடியவில்லை. என்னுடை இந்த உணர்வை எப்படியோ ஊகித்துக் கொண்ட சந்திரிகா என் பலவீனத் துக்குக் காரணம் தன்மேல் எனக்கு உண்மையான அன்பு இல்லை என்று என்னை நச்சரிக்க ஆரம்பித்து விட்டாள். பொறாமையால் தூண்டப்பட்டு என்னை முழுமையாக அடைய முயற்சித்து அடிக்கடி தோல்வி கண்ட சந்திரிகா பின்பு என்னைக் கேவலமாக இழித்துப் பேசவும் நடத்தவும் ஆரம்பித்து விட்டாள். அந்த நச்சரிப்பையும் அளவுக்கதிக மான அவளுடைய ஆசையிலிருந்தும் தப்பிக்க விரும்பிய நான் மாலையிலேயே கண்மண் தெரியாமல் குடித்துவிட்டு மயக்கத்தில் வந்து படுத்துவிடுவதுண்டு.

இதனால் சந்திரிகாவுக்கும் எனக்கும் இடையே இடைவெளி அதிகமாகிக் கொண்டது. நானும் மதுவில் என்னை முற்றும் இழக்கப் பழகிக்கொண்ட போது அவளும்

தன் இச்சைகளைத் தீர்த்துக் கொள்ள இன்னுமொரு ஆடவனைத் தேடிக் கொண்டாள்.

இது எனக்கு வரவேற்கக்கூடிய விஷயமாகவே இருந்தது. அவர்களிடமிருந்து மெல்லத் தப்பித்து இலங்கைக்குச் செல்ல வேண்டுமெனத் திட்டமிட்டுக் கொண்டிருந்தேன். இந்த நேரத்தில் வா சு கி யி ன் வீட்டாரிடமிருந்து விவாகரத்துக் கோரிப் பத்திரங்கள் அனுப்பியிருந்தார்கள். அதில் கையொப்பம் இட்டு அனுப்பிய கையோடு என்னுடைய அருமை அன்னை இறந்துபோன செய்தியும் என் காதுக்கு எட்டியது.

அதன்பின் நான் இலங்கைக்குப் போகும் எண்ணத்தையே மறந்துவிட்டு முழுக்க முழுக்கக் குடிகாரனாக மாறிப் போனேன். அந்த நிலையில் எனது டாக்டர் வேலையும் போய் விட்டது. கையில் காசில்லாத நிலையில் பிச்சை எடுத்தாவது குடித்து குடித்துச் சாகவேண்டுமென நான் பார்களைச் சுற்றித் திரிந்த நாட்களில்தான் ஜெயசிங்கம் என்னைக் கண்டு அழைத்து வந்தார்.

இன்று திடீரென வாசுகியை இங்கே கண்டபோது எனக்கு முதலில் அதிர்ச்சியாகத்தான் இருந்தது. இப்போது நான் இங்கு வந்ததுகூட அவளிடம் நான் செய்த கொடுமைக்கு ஒரு தடவை மன்னிப்புக் கேட்கத்தான்...ஆனால் என்னுடைய முகத்தைப் பார்க்கவே விரும்பாது எழுந்து போய் விட்ட அவளுடைய உள்ளத்தின் நிலையை என்னால் மிகவும் நன்றாகவே புரிந்து கொள்ள முடிகிறது. அவள் என்னையிட்டு ஏதாவது கேட்டால் என்னுடைய கடைசி ஆசையை அவளிடம் கூறுங்கள். என்னுடைய கதையை இவ்வளவு நேரமும் பொறுமையாகக் கேட்டதற்கு மிக்க நன்றி! நான் வருகின்றேன்!'' எனச் சொல்லி தடுமாறிய வனாய்ச் சென்ற சபேசனை காஸ்ரன் எழுந்து தடுத்து மீண்டும் சோபாவில் அமரச் செய்தான்.

"டாக்டர் சபேசன்! இங்கேயே நான் வரும் வரையில் உட்கார்ந்திருங்கள்... ப்ளீஸ்... நான் வாசுகியிடம் ஒரு ஐந்து நிமிடங்கள் பேசிவிட்டு வருகிறேன்!" என மிகவும் வினயமாக வேண்டிக் கொண்டு வாசுகியின் அறையை நோக்கி விரைந்தான் காஸ்ரன்.

□

## 26

தனது கதவைக் காஸ்ரன் தட்டி "வாசுகி!" என அழைத்த குரல் கேட்டுக் கண்களைத் துடைத்துக் கொண்டு கதவைத் திறந்தாள் வாசுகி.

உரிமையுடன் அங்கு அறையில் நுழைந்து அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்துகொண்ட காஸ்ரன் வாசுகியின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தான்.

"வாசுகி உன்னுடைய அழுகையின் காரணம் எனக்கு நன்ருகப் புரிகின்றது. இப்போ நான் உன் நண்பன் காஸ்ரனுக மட்டுமல்ல ஒரு மனநோயாளியின் தனிப்பட்ட டாக்டர் என்ற முறையிலும் உன்னிடத்தில் சில விஷயங் களைக் கேட்பதற்கு வந்துள்ளேன்!" என அவன் கூறிய போது விளங்கிக் கொள்ள முடியாமல் அவனைப் பார்த் தாள் வாசுகி.

"நீ இதுவரை நினைத்தது போல் டாக்டர் சபேசன் உன்னை ஏமாற்றிவிட்டு அந்தப் பெண்ணுடன் இங்கு ஓடி வரவில்லை வாசுகி! அவளுடைய அண்ணன் டாக்டரைக் கத்திமுனையிலே பயமுறுத்திததான் இங்கே கடத்திவந்திருக் கின்ருன். உன்னை ஏமாற்றிவிட்டு வந்ததனுல் சபேசனுக்கு இங்கு அந்தப் பெண்ணுடன் இன்பமாக வாழமுடியவில்லை. அவளுடைய தொந்தரவு தாங்க முடியாத நிலையில் அவர் குடிக்க ஆரம்பித்திருக்கின்ருர். அவருக்கும் சந்திரிகா

வுக்கும் இடையில் வெறுப்பு வளரவே அவள் இன்னுமொரு ஆடவனுடன் தொடர்பு வைத்துக் கொண்டு சபேசனை மிகவும் கேவலமாக நடத்தியிருக்கிறாள். அப்போது இலங்கைக்கு வருவதற்காக அவர்எண்ணியிருந்த சமயத்தில் உன்னுடைய வீட்டார் விவாகரத்துப் பத்திரத்தை அனுப்பி யிருக்கின்றனர். அதில் கையொப்பம் இட்டு அனுப்பிய கையுடன் சபேசனுடைய தாயார் இறந்த செய்தியும் வரவே முழுக்க முழுக்க மதுவிலே மூழ்கி நாளடைவில் அதற்கு அடிமையாகப் போனார். நல்ல காலம் எதிர் வீட்டில் இருக்கும் ஒரு இலங்கைத் தமிழர் அவரைச் சந்தித்து இங்கே அழைத்து வந்ததனால் அவருடைய உடல் நிலை சற்றுத் தேறியுள்ளது. ஆனால் அவருடைய மனநலம் இப்போதும் பாதிக்கப் பட்டிருப்பதை என்னால் உணர முடிகின்றது. உன்னிடம் அவர் கேட்க விரும்புவதெல்லாம் நேரில் உன்னிடம் தனது செய்கைக்காக மன்னிப்புக் கேட்பதுதான். நடந்தவற்றை மறந்து நீ அவரை மன்னித்து ஏற்றுக் கொண்டால் என்ன?'' எனக் காஸ்ரன் சபேசனுக்காகப் பரிந்து பேசியபோது, விழிகளில் கனல் பறக்க அவள் ''டாக்டர்... அவரை அந்தச் சிங்களப் பெண்ணின் அண்ணன் பயமுறுத்தி அழைத்து வந்ததும் பின்னர் நடந்தவையும் உண்மையாக இருக்கலாம்... அதை யிட்டு நான் அக்கறை கொள்ளவில்லை.

ஆனால் விவாகப்பதிவு நடந்த அன்றே என்னுடன் உறவு கொண்டவர் எதற்காகத்தான் நான் அந்தச் சமயம் கன்னியாக இருக்கவில்லை என்ற பொய்யைத் தன் தாய்க்கு எழுதவேண்டும்? அதுவும் கண்ணியமான ஒரு டாக்டர் தொழிலில் உண்மையையும் சத்தியத்தையும் கடைப்பிடிக்க வேண்டிய கடப்பாடு கொண்டவர்... என் பெண்மைக்கு இழக்கு ஏற்படும் வகையில் அப்படியேன் ஒரு பொய்யைக் கூறவேண்டும்! நான் எதை மன்னித்தாலும் அந்தச் செயலை என்னால் மறக்கவோ மன்னிக்கவோ முடியாது டாக்டர்!... அவருக்கென்ன... விரைவில் குணமாகினால்

மணந்துகொள்ளப் பெண்களா கிடைக்கமாட்டார்கள்! நான் அவருடைய முகத்தையே பார்க்க விரும்பவில்லை''' எனப் படபடவெனப் பொரிந்து விட்டுப் பொங்கி வந்த அழுகையை அடக்க முடியாமல் தடுமாறிய வாசுகியை வருத்தத்துடன் பார்த்தான் காஸ்ரன்.

இந்தப் பெண்மைக்குள் தான் எத்தனை வைராக்கியம்!'' தன் கற்பைச் சந்தேகித்தால் கணவனையே தூக்கி எறிந்து விடும் அளவுக்கு இவளுடையபண்பாடு இவள் இரத்தத்தில் ஓடுகின்றதா?'' என்று வியந்த காஸ்ரன் அவள் முடிவை ஏற்றுக் கொண்டவனாய் ''வாசுகி! உன்னுடைய முடிவும் ஒருவகையில் சிறந்ததே! ஏனெனில் நீ அவருடன் சேர்ந்து வாழ்ந்தாலும் இல்லற வாழ்க்கையில் உனக்கு அவரால் எந்த சுகமும் கிடைக்கப் போவதில்லை!'' எனக் காஸ்ரன் நிதானமாகச் சொன்னபோது ''என்ன!?'' என்று அதிர்ந்து போனவளாய்க் கேட்டாள் வாசுகி,

''ஆமாம் வாசுகி! உன்னுடன் இணைந்ததன் பின்னர் டாக்டர் சபேசனால் அந்தச் சிங்களப் பெண்ணைத் திருப்திப் படுத்தும் வகையில் நடந்துகொள்ள முடியவில்லை. அதனாலேதான் அவர்களுக்குள் இடைவெளி அதிகரித்தது. நீ எண்ணுவது போல அவர் இன்னுமொரு பெண்ணை மணந்து கொள்ளும் நிலை வருமா என்பது சந்தேகந்தான்!'' எனக் காஸ்ரன் கூறிய போது வாசுகியின் இதயத்தின் அடியிலிருந்து எதுவோ ஒன்று ஊறிச்சுரந்து குபுகுபுவெனப் பெருகி அவளுடைய உள்ளம் உடல் முழுவதையுமே தன் வயப்படுத்தி அவளுக்குப் பெரியதொரு தவிப்பையும் தாகத்தையும் ஏற்படுத்தியது.

மனமும் உடலும் கெட்ட நிலையில் அவர் இனிமேல் எப்படித்தான் வாழமுடியும்? தாயையும் இழந்த அவருக்கு யார் தான் வாழ்க்கையில் துணை? என்று ஏங்கியவள் சட்டென ஒரு முடிவுக்கு வந்தவளாய்த் தன் விழிகளைத் துடைத்துக் கொண்டு ''டாக்டர்!... இப்போது அவர்

நீங்கள் சொல்வது போல் ஒரு நோயாளிதான். இந்த நிலையில் அவரைத் தவிக்கவிட்டு என்னுல் சந்தோஷமாக வாழமுடியாது. வாருங்கள் டாக்டர்!'' எனச் சொல்லி வீட்டு ஹாலை நோக்கித் தாயிடம் ஓடும் இளங்கன்று போல ஓடினுள் வாசுகி.

வாசுகியின் திடீர் முடிவைக் கண்டு காஸ்ரன் திகைத்து போனுன். சபேசனுடைய தற்போதைய நிலை தெரிந்துங் கூட... அதற்காகவே அவனுக்காக மனமுருகித் தன் வாழ்க்கையை அவனிடம் ஒப்படைக்க ஓடும் வாசுகியின் தியாகத்தையும் பண்பையும் கண்டு வியப்பில் ஆழ்ந்து போன காஸ்ரன் அன்ெருருநாள் வாசுகி குடும்பத்தைப் பற்றிக் கூறுகையில் அதையொரு சாகரம் என்று குறிப்பிட்டதை நினைவு கூர்ந்தான். ஆமாம்! இப்போது வாசுகி நீந்துவதற்காகக் கடலிலே குதிக்கவில்லை. கடலிலே ஆழ்ந்து இறந்துவிடவிருந்த ராஜகுமாரனைக் காப்பாற்றிய கடற்கன்னியைப் போலவே வாசுகியும் நோயாளியாய்த் தனிமரமாய்ப் போன தன் ராஜகுமாரனுக்கு வாழ்க்கைத் துணையாய் அமைந்து வாழ்வென்றும் கடலைக் கடப்பதற்கு உதவச் சந்தோஷமாகப் போகின்ருள்.

வாசுகியின் உதிரத்தில் ஓடும் அந்த வழி வழி வந்த பண்பாட்டை நினைக்கையில் காஸ்ரனுக்கு மெய் சிலிர்த்து கொண்டது.

என்றும் இனிது வாழட்டும் இந்தப் புதிய கடற்கன்னி என்று மனதார வாழ்த்துக்கள் கூறிக் கொண்டான் காஸ்ரன்.

□□□